12/1423

12/1423

# திருமுருகாற்றுப்படை

(உரையுடன்)



மதராஸ்.

COPY RIGHT

T-105
TPC 28 12/14223
THE TIRUVAVADUTURAI ADHINAM HIGH SCHOOL
3 FEB 1941
TIRUVADAMARUDUR.

12 / 1423

உ

கணபதி துணை

மதுரைக் கடைச்சங்கத்து மகாவித்துவானகிய

நக்கீரதேவர் அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படை

திரிசிரபுரம்

சேன்ட் ஜோசப்ஸ் காலேஜ் தமிழாசிரியர்

வித்துவான்

## R. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்

எழுதிய

## விருத்தியுரையுடன்

அ. முத்துவடிவேலு முதலியாரால்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1938

THE TIRUVAVADUTURAI ADHINAM HIGH SCHOOL, TIRUVIDAIMARUDUR. 3 FEB 1941

இதன் விலை] All Rights Reserved [அணா-12

# முகவுரை

திருமுருகாற்றுப்படை யென்பது கடைச்சங்க நூல்களுள் ஒன்று. இந்நூல் கல்வி யறிவின்வழி இகபர சாதனங்களை யுணர விரும்பும் பல்வகை நன்மக்களாலும் பொருளாராயும் பாரம்பரியத்தை யுடையதொரு சிறுகாப்பியம். பத்துப்பாட்டுள் முதற்பாட்டாயுள்ள நல்லிலக்கியமாய்ப் பல்லோராலும் பாராட்டப்படுவது. இத்தகைய நூலுக்கு உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரெனும் புலவர்பெருமான் எழுதிய உரையும் உளது. ஆயினும் அவ்வுரை முருகக்கடவுளை வழிபடும் அடியவருள் இலக்கிய விலக்கணவுணர்ச்சி குறைந்தவர்களுக்கு நன்கு விளங்காத பழந்தமிழ் நடையையுடையது. அவருரையைத் தழுவி மற்றும் பலர் வெளியிட்டுள்ள வுரைகளும், அரிதிற் பொருளுணர வேண்டுவனவாக விருத்தலின், பண்டிதரல்லாதார்க்கும் பயன்படுமாறு எளிய தமிழ்நடையில் விளக்கமாக ஒருரை யிருந்தால் நன்றென்று திரு-அமரம்பேடு. இரங்கசாமி முதலியாரவர்கள் குமாரரும் பூமகள்விலாச அச்சுக்கூடத் தலைவருமாகிய திரு - அ. முத்துவடிவேல் முதலியார் அவர்கள் விரும்பியதற் கிணங்க, பலருக்கும் பொருள் விளங்கும்வண்ணம் இதற்கு உரையெழுதத் துணிந்தேன். உரை எழுதுமுன் நூல் வரலாறும் அதன் சிறப்பும் எழுதுதல் நலமெனக்கொண்டு அவற்றை முன்னர் எழுதுகின்றேன்.

இப்படிக்கு

R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

# நூல் வரலாறு

* வைகையாற்றின் கரையிலுள்ள மதுரைமாநகரில் கடைச்சங்க மிருந்தகாலத்து அச்சங்கப்புலவர்களாக நாற்பத்தொன்பது பெயர்கள் இருந்தனர். இவர்கள் பொய்யாமொழிப் புலவர்களெனவும், தெய்வப் புலவர்களெனவுங் கூறப்படுகின்றனர். இவர்களுட் சிறந்தவர் நக்கீர ரென்பார். இவரை நக்கீரதேவரென்றும் வழங்குவர்.

தமிழ்ப்புலவர்களான இவர்களிடம் பல புலவர்கள் வந்து வாதிடல், நூலரங்கேற்றன் முதலியன செய்வர். அங்ஙனஞ் செய்யுங்காலத்துப் புலவர்களின் உயர்வு தாழ்வுகளை யறிந்து கொள்ளுதல் கூடாமையாக விருந்தமையின் இவர்களனைவருமாக ஆலோசனைசெய்து அத்தலத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சிவபிரானது சன்னிதி யடைந்து புலமையை அளத்தற்கு ஒருவழி யருளவேண்டுமென்று வேண்டினர். வேண்டினார்க்கு ஆலவா யழலவிர் சடைமுடி யண்ணலான கடவுள் சமசதுரமான ஒரு பலகையைக் கொடுத்து இதனைக் கொண்டுபோய்ச் சங்கமண்டபத்துள் வைத்துப் பூசித்து இதனி லேறியிருங்கள், முற்றுங் கற்றார்க்கெல்லாம் இது விரிந்து இடங்கொடுக்கும்; அல்லார்க்கு இடங்கொடாதென்று கூறினன். பலகையைப் பெற்றவர்கள் இறைவனை வணங்கி வலம்வந்து சங்கமண்டபமெய்திக் கன்மாப்பலகையை நடுவண் வைத்து நீரும் பூவும் புகையுங்கொண்டு பூசித்து முன்னர்க் கீரனும், பின்னர்க் கபிலனும் ஏறினர். அவர்களுக்கு அப் பலகை விரிந்து இடங்கொடுத்தது. இவர்களை யொப்ப மற்றைப் புலவர்களு மேறினர். அவர்களுக்கும் அது விரிந்து இடமளித்தது. இந் நாற்பத்தொன்பதின்மரும் சிறந்து விளங்

* சீகாளத்திப் புராணத்திற் கண்டவாறு.

கினுர்கள். இவரல்லாத பல நல்லிசைப்புலவர்களும் கலை வலாளரான வரசர்களும் சங்கப்பலகையா லேற்றுக்கொள்ளப் பெற்றனர். இவர்கள் முன்னிலையில் பல புலவர்கள் நூல்க ளியற்றி யரங்கேற்றினர். இவ்வாறு சிலகாலம் நடந்தபின்னர், செந்தமிழ்ப் பாண்டிநாடு மழையின்மையின் வறுமையுற்றது. உறவே, இவர்களை யாதரித்த வரசன் நெல்லும் பொன்னும் இல்லாதானுகி மிக வருந்தி நீவிர் நாடுநாடாய பின்னர் வம்மி னென்று மழையும் விளைவுமுள்ள பிற நாடுகளுக்கு அனுப் பினுன். அவர்களும் பிறநாடு புகுந்து வாழ்ந்தனர். பிறநாடு புக்க புலவர்கள் பலவருடகாலங்கள் மதுரைக்கு வராது பிற நாடுகளிலேயே தங்கிவிட்டார்கள். பின்னர்த் தென்னவனுடு காலமழையாற் செழித்துக் கவினுற்றது. உறவே அரசன் பலவிடங்களுக்கும் தூதுவரை யனுப்பிப் பண்டைப்புலவரை யெல்லாம் வருவித்தனன். வந்தபின்னர் அவர்களை யாராய்ந் ததில் புலவருட் பெரும்பாலார் பொருளிலக்கண மறந்தவர்க ளாகக் காணப்பட்டார்கள். அதனை யறிந்த அரசன் மிகுந்த வருத்தமுற்றுக் கோயிலுட்சென்று பொருளிலக்கண மில்லாக் குறையைத் திருமுன்னர் விண்ணப்பஞ்செய்து இக்குறையை நீயே நீக்கிவைத்தல் வேண்டுமென்று பலநாள் வேண்டிக் கொண்டனன். ஒருநாட்காலையில் கோயிற்பூசகன் திருவல கிட்டு, நீர்தெளித்துப் பூவிரைத்துப் பலிபீடத்தை அலங் கரிப்பான் வந்தவன் பீடத்தினைச் சுற்றிச் சில செப்பேடுகள் கிடக்கக்கண்டு அவைகளை யெடுத்தான். எடுத்தாற் கவை நிறைய வெழுத்திருத்தல் காணப்பட்டது. காணப்படவே அவன் அவைகளை அரசனிடஞ் சேர்த்தான். அரசன் அவை களைப் புலவர்களிட மளித்துப் பொருள் காண்மின் என்றுன். புலவர்கள் அதனை இறையனு ரகப்பொருளென்று உணர்ந்து பொருளெழுதினுர்கள். அவ்வுரைகள் ஒன்றற்கொன்று மாறு படுதலின் ஒருவரோடொருவர் கலாம்விளைத்து என்னுரையே

தக்கது, என்னுரையே தக்கது என்று செருக்குறுதலை உணர்ந்தவரசன் நீவிர் இவ்வாறு உரைகாரணமாகப் பகைத்தல் நன்றன்று. நூல் தந்தவனையே உரை காணுமாறு விண்ணப்பஞ் செய்யுங்களென்றான். அவன் மொழிக்கு இணங்கிய புலவர்கள் சிலர் சன்னிதியடைந்து தங் குறையை விண்ணப்பஞ் செய்தனர்.

அப்பொழுது இறைவனருளால் "முருகவேள் உப்பூரி குடிக் கிழானுக்கு மகனாக அவதரித்திருக்கின்றான்; அவன் ஊமை, பெயர் உருத்திரசன்மன்; அவனிடம் சென்று நும் முரையைப் படியுங்கள்; அவன் முகக்குறிப்பால் உங்கள் உரைகளின் ஏற்றத்தாழ்வினை விளக்குவன்" என ஓர் அசரீரி வாக்குண்டாயது அம்மொழி கேட்ட புலவர்கள் உப்பூரிகுடிக் கிழானிடஞ் சென்று, உருத்திரசன்மனை யழைத்துவந்து தெய்வீகம் வாய்ந்த சங்கப்பலகையிலிருத்தி, வெண்மலர் வெண்சந்தனம் முதலியவைகளாற் பூசித்துக் கீழிருந்து ஒவ்வொருவரும் தமது உரையைப் படித்தனர். படிக்கக் கேட்ட சன்மன் பலருரையை முகச்சுளிப்பாதிகளால் வெறுத்தும், சிலருரையிற் சிற்சிலவிடங்களில் மகிழ்ந்தும், மதுரைக் கணக்காயனார் மகனாரான நக்கீரருரையை வாசிக்கும்பொழுது சிரமசைத்தல் நகைத்தல் உவகைக்கண்ணீர் வீழ்த்தல் முதலியவைகளாலே சிறந்ததென்றும் ஒப்புக்கொண்டனன். கொள்ளவே நக்கீரனார் பிற புலவரினுஞ் சிறந்தாராயினர். இங்ஙனமாகவே பிறபுலவர்களும் பொருளிலக்கண உரை நுட்பங்களை யிவரிடம் உணர்ந்து மகிழ்வுற் றிருந்தனர். இங்ஙனஞ் சிலநாட்கள் சென்றன.

செல்லுங்கால், பாண்டியமன்னன் தன் மனைவியுடன் ஒரு இளவேனிற்காலத்தில் ஒரு தனித்தவிடத்திருந்தனன். இருந்தாற்குத் தான் நுகர்ந்ததாக நினைவிற்கு வராத நறு

மணம் வீசுதலை உணர்ந்தான். உணர்ந்து இம்மணம் எம்மணம் என்று ஆராய்ந்தான். ஆராய்ந்தார்க்கு அது மலர் மணமும் மணப்பொருள்களின் மணமு மன்றென்று பண்டை நுகர்ச்சி யுணர்வினால் தோன்றியது. தோன்றவே பின்னும் ஆராய்ந் தான். ஆராயவே அது தன்து மனைவியின் கூந்தலின் இயற்கை மணமெனத் துணிந்தான். துணிந்தவன் இதனைக் கண்டசுத்தியாகப் பாடி மெய்ப்பிக்கும் புலவனுக்குப் பரி சென்று ஒரு பெருந்தொகையை ஒரு கிழியாகக் கட்டி சங்க மண்டபத்திற் றூக்குவித்தான்.

"புலவர் யாவருந் தாங்கண்ட வாறு பாப்புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
மலைகோ டோளினன் மறுத்தலின் வறிதகன் றனரவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவ ரின்றி."

என்றபடி அக்கிழியைத் தாம்தாம் பெறும்பொருட்டுப் புலவர் களிற் பலர் பாட்டுப்பாடி அவமான.முற்றனர். பொற்கிழி வெகுகாலம் அறுபடாமலே யிருந்தது. இக்கிழி அரசன் மனதிலுள்ள ஒரு கொள்கையை அவன் கருத்திற்கிசைய விளக்கினுற்கு உரியதென்று யாவரும் அறிந்துகொண்டார்கள்.

"கால மங்கதி லுரோகணியிற் கதிரவன் புகுத
வால வெவ்வர வடுத்த வீருவாவினு மழன்று
கோல வெஞ்சுடர் தண்சுட ரிரண்டும் வாய்க்கொள்ள
ஞால மைந்தனும் வெள்ளியும் இகல்பட நடந்தார்."

என்றபடி செவ்வாயும் வெள்ளியும் வக்கிரித்ததுடன் ரோகணி நட்சத்திரத்தில் சனி பிரவேசித்தது. பதினைந்துநாளில் சூரிய சந்திர கிரணங்க ளுண்டாயின. இதனால் பாண்டி நாடு முக்கியமாகக் காலையிற் பனிவிழுதலும், உச்சியில் கரிய மேகங்கள் வானினைக் கொள்ளுதலும், மழை பெய்

யாமலே மாலையில் மறைந்துபோதலும் ஆகி, மழையின் மையை யுடையதாயது. அதனால் "பெயல்வறந்த பைங் கூழெலாம் பரலொடு கரிந்த" என்றபடி பயிர்கள் கெட்டன. இதனாற் பாண்டிநாட்டில் வறுமை யுண்டாயது. அதனால் மனிதருக்கு உண்பன தின்பன நனிமிகக் குறைந்தன. குறைதலால் நனி வருந்தினார்கள் வருந்துதலால்,

"நீடுந் தீப்பசியாற் குடர்வருந்திய நிலத்தோர்
ஆடுந் தின்கலா வடகுதின் றனர் நிலனகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரப்பினர் தின்பன கருதி."

இம்மட்டோ! சிறுவர்களைத் தாய்தாம் பறித்தனர் தின்றார். இதுதானா! முறுக்கு தீப்பசி பொறுக்கலார் மக்களான் முதலா வுறுபசுந்தசை யாவையுந் தின்றனர். இங்ஙனம் வறுமை கொடுமை செய்தலின் பெருநோய்கள் மிக்கு அகால மரணங் களை யுண்டாக்கின. உண்டாக்குதலால் 'வழியெங்கும் பிண மிடறும்' பிணந்தானா கடற்கப்பாற் பொழிலின்கண்ணு முற்று லாயது நாற்றம். இங்ஙனமாயகாலத்துச் சாவாதிருந்தாருள் மதுரைக்கோயில் அருச்சகரு ளொருவனான தருமியென்பான் உயிர் பிழைக்க வழியின்றி வருந்தி வேறே யெங்கேனுஞ் சென்று உயிர் பிழைப்பேனென்று துணிந்து கடவுளிடம் விடைபெற்றுப்போவதற்கு நீராடி, நியதிமுடித்துச் சன்னிதி யடைந்து, முறையாக வணங்கி, எல்லாம்வல்ல தாண்டவனே! 'தாயி லனபுடை யாயினி யிவணுறிற் சாவேன்' ஆதலின் அடியேன் வளமுற்ற இடந்தேடிச் செல்கின்றேன். இந்நாடு வளமுடைய தாயபின் நின் சன்னிதிக்கு வருகின்றேனென்று கூறித் தொழுது அழுதான். இறைவன் இவன் விண்ணப்பத்தையும் அழுகையுங் கேட்டுத் திருவுளமிரங்கி, அன்பனே! அழாதி; சங்கமண்டபத்தில் அரசன் ஒரு பொற்கிழி தூக்கி 'யிருக்

கின்றான். இப்பாடலை அவனிடங் கொடுத்தால் அவன் அக் கிழியை எடுத்துக்கொள்ளச் சொல்லுவன் என்று,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே."

என்னும் இப்பாடலைப் பொறித்த ஏடொன்றைக் கொடுத்து அனுப்பினன். அருச்சகனும் அப்பாடலைக்கொண்டு சென்று அரையனுக்குக் காட்டினன். அரசன் அப்பாவின் பொருள் தன் மனக்கருத்துக் கிசைவுற விருத்தலின் 'நீயே யக்கிழிக் குடையாய் சங்கமண்டப மெய்தி, அங்குள்ள புலவர்கட்கு இக் கவியைக் காட்டிக் கிழிபெற்றுச் செல்' என்றனன். அவனும் அவ்வாறே சென்று பாசுரங்காட்டிக் கிழியை யறுக்கச் செல்லும்பொழுது ஆண்டிருந்த நக்கீரன் அவனை நோக்கி இக்கவி தவறுடையதாதலின் கிழி உனக்குரித்தன் றெனக் கூறித் தடுத்துவிட்டான். கீரனால் தடுக்கப்பட்ட தருமி மீட்டும் அரசனிடஞ் செல்லாது கோயிலை யெய்தி, இறைவனை வணங்கிக் கண்ணீருகுத்து, எந்தை யெம்பெருமானே! நீதந்த பாசுரத்தை யரசனிடம் படித்துக்காட்டினன். அவன் மகிழ்ந்து நீ யிதனைச் சங்கப்புலவரிடங் காட்டி இது அரசன் கருத்தாகலின், என்னை யிக்கிழியை யறுத்துக் கொள்ளச் சொல்லினன் என்று கூறிக் கிழியினருகிற் சென்ற போது கீரனென்பான் ஒரு புலவன் ஈரமின்றிய நெஞ்சின னாய் இப்பாடல் குற்றமுடையதென்று கூறி யென்னைத் தடுத்துவிட்டான். என்செய்வன்? நீண்டநாளாய் வறுமையால் உண்டியின்றி வாடிய வொருவன் கிடைத்த நல்லன்னத்தினை யுண்ண வாய்அருகிற் கொண்டுபோகும்பொழுது மற்றொருவன்

தட்டி யெறிந்தாற்போல நின்னை மதியாத அவன் நின்பாடலை யிவ்வாறு செய்தனனே என்று கூறினன். உடனே கடவுள் ஒரு புலவனாகித் தருமியுடன் சங்கமண்டபமணைந்து யாவன் குற்றங்கூறியவன்? என்று தருமியைக் கேட்டான். தருமி கீரனைக் காட்டினன். இறைவன் பாட்டிற்கண்ட குற்றம் என்னை என்றான். அதற்குக் கீரன் சொற்குற்றமின்று பொருட்குற்ற முளதென்றான். அதனை விளக்குக வென்றான் இறைவன். உடனே கீரன் "நெடுங்கண் நல்லார் சில்லிருங் குழற்கு நாற்றஞ் செயற்கையி னன்றி யியற்கையின் இல்லை" இல்லதுகூறலான் இது குற்றமென்றான். உடனே இறைவன் வானரமகளிர் கூந்தற்கு வாசனை இயல்பன்றோ வென்றான். அவர்தம் கூந்தலும் செயற்கையான கற்பகமலர் நாற்ற முடையதே யாதலிற் செயற்கை மணமுடையதே யென்றான். இதுகேட்ட இறைவன் உலகமாதாவான உமையாள் கூந்தலோ வென்றான். அதற்குக் கீரன் அவள் கூந்தலும் செயற்கை மணமுடையதே யென்று கூறினன். கூறவே இறைவன் தன்னை யின்னவனென் றுணர்த்த நெற்றிக் கண்ணையும் சடையையுங் கீரனுக்குக் காட்டினன். இவற்றைக் கண்ட புலவன் சிந்தையுஞ் செயலுஞ் செல்லா விடத்துறை யெந்தை யெம்பெருமான் என்று மதித்துத் துதித்துய்யாமல் இறுமாப்புடன் நீ நெற்றிக்கண்ணைக் காட்டு வதை யொழித்து நின்னுடம்பெல்லாம் கண்ணாகக் காட்டி னாலும் யான் அஞ்சேன்; நீ பாடிய பாடல் பொருட்குற்ற முடையதே. சடையைக் காட்டி யேன் வெருட்டுகின்றனை? என்றான். இதனைக்கேட்ட இறைவன் கடுங்கோபங்கொண்டு,

"எம்மொடு முரணிவான்றோ யிமயமால் வரைப்பூங்கொம்பின்
மைம்மலி மறைசொல் லானு மணங்கமழ் குழல் பழித்த
செம்மைகொ ளறிவி லாய்நீ தீர்ப்பருங் குட்ட நோய்கொண்
டிம்மையி லலைக வென்று னிறப்ப நக்கீர னஞ்சி."

என்றபடி நீ தேவி கூந்தலைப் பழித்து பாவியாயினை; நினக்கு மருந்திற் றணியாத குட்டநோய் உண்டாகக் கடவது என்று சபித்தார். சபித்தலும் நக்கீரனுடலிற் குட்டநோ யுண்டாயது. அதுகண்டு கீரன் நடுக்குற்றஞ்சி சபித்தபுலவன் காலில் விழுந்து பணிந்து துதித்து • கருணையங்கடலே! எந்தாய்!

"இழிபுடை நாயி னன்னே னிலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச் சாபப் பிணிகெட வருள்வா யென்று"

வேண்டிக் கொண்டனன். வேண்டுதலும் கோபநீங்கி நீ சென்று கயிலை கண்டால் உடனே யிந்நோய் நின்னைவிட்டு ஒழியுமென்று கூறி அவ்விடத்திலேயே மறைந்தனன். அனைவரும் அதிசய மடைந்தார்கள். பொற்கிழியைத் தருமிக்குக் கொடுத்தார்கள். காலமுஞ் செழிப்புற்றது. அப்பொழுது நக்கீரன் எனது அறியாமையால் யானே தேடிக்கொண்ட விந்நோய் என்னை முற்றிலுஞ் சீர்கெடுத்தற்கு முன்னரே யான் கயிலையைக் காணச் செல்வேனென்று புலவர்களிடம் விடைபெற்று, வடநாடு நோக்கிச் சென்று, காசியையடைந்து கங்கையில் நீராடி விசுவநாதனை வணங்கி, பனிமலை நோக்கிச்சென்று ஆழ்ந்தகன்ற ஓர் தடாகத்தினை அம்மலைமீது கண்டு வியந்து அதினிற்குளித்து நித்தியானுட்டானமுடித்து அதன்கரையில் கடவுளைச் சிந்தித்திருந்தனன்.

அப்பொழுது கரையிலுள்ள ஆலமரத்து இலையொன்று நீரிற் பாதியும் கரையிற் பாதியுமாக விழுந்தது. நீரில் விழுந்தது மீனாகியும், கரையில் விழுந்தது பறவையாகியுமாறி மீன் நீரிலும் பறவை கரையிலுமாக விருந்தன. இதனைக் கரையிலிருந்த நக்கீரன் கண்டு விம்மிதமுற்றுத் தியான மறந்திருந்தனன். உடனே திடீரென்று இவனை எளிதில் தூக்கிச் செல்லத்தக்க வொருபூதம் விரைந்துவந்து எடுத்துக்கொண்டு போய் ஒரு பெருங் குகைக்குள்வைத்து வழியை ஒரு பெரும்

பாறையான் மூடிச் சென்றது. பூதஞ் சென்றவுடன் ஒரு ஆரவாரம் அக்குகைக்க ணுண்டாயது. சிறிதுநேரத்தில் அடங்கியது. ஒரு பெருங்கூட்டமாய மனிதர்கள் காணப் பட்டார்கள். அவர்களை இப்புலவன் யாவரென்று வினவ, அவர்கள் நாங்கள் நின்னைப்போல் பூதத்தாற் றூக்கிக்கொண்டு வரப்பட்டவர்களே; நின்னைத் தூக்கிக்கொணர்ந்த பூதம் ஆயிரம்பேரை யிக்குகைக்குட் சேர்த்துப் பின்னர் தின்னுவ தாக உறுதிசெய்திருக்கின்றது. நீ வருவதற்குமுன் நாங்கள் ஒன்றுகுறைந்த ஆயிரம்பெயர்களாக இருந்தோம். தனக்கு உணவாக எங்களை ஒவ்வொருவராகச் சேர்த்த பூதம் எங் களுக்கு உணவுமாத்திரம் அளித்துவந்தது. இன்றுடன் எங்களுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது என்றனர்.

இம்மொழி கேட்ட புலவன் கனிவருந்தி என்னாற் கூடிய வளவு காக்க முயல்வேனென்று கூறி யாலோசித்தான். "இதுவோ மலை. மலைக்குத் தெய்வங் குமரன். அன்றியும் அன்பரிடத்துக் கருணையுள்ளவன் அவனே ஆதலின், இத் துன்பத்தை யொழிக்குமாறு அவனையே வேண்டுவன்" என முருகப்பெருமானை உள்ளத்திற்கொண்டு இத்துன்பத்தினின் றும் அடியேங்களைக் காத்தருளல் வேண்டுமென சடாட்சர மந்திரத்தை யோதி, இத் திருமுருகாற்றுப்படையாற் றுதித் தான். உடனே முருகப்பிரானுந் தோன்றி, அப்பொழுது அவர்களைத் தின்னவந்த பூதத்தைக் கொன்று அச்சிறை யிருந்தோரையெல்லாம் காத்தனர். சிறையிருந்தோர் யாவருஞ் சென்றனர். பின்னர்,

"மணிமுடி யரசர் வாழ்வு மக்கட்பே றுதி நல்கிப்
பிணிமிடி பகை யிடுக்கண் பேயணுக் கவலை கள்வர்
பணிவிடமொழிக்குமாற்றுப் படைமொழிபுலவர்சிங்க
மணிகிள ரலங்கற்றிண்டோ ளறுமுகத் தெழுந்துசொல்வான்'

என்றபடி முருகவேளை வணங்கி, எம்பெருமானே! அடியனேன் செருக்காலடைந்த வித்தொழுநோயைத் தந்த விறைவன் கைலைகண்டாற் றீருமென்றதனால் கயிலைகாண விங்கு வந்து, பூதத்தா லெடுக்கப்பட்டு நின்னால் விடுபட்டேன். இனி அடியேன் கயிலைகண்டு குட்ட நீங்குமாறு நீயே யருள் செய்ய வேண்டுமென்று கூறி வணங்கினான். வணங்கினானை முருகன் கருணையுடன் நோக்கி, எந்தை வடகயிலை யென்றுளில்லை. ஆதலின் நின்னோய் தென்கயிலையானுந் தீருமென்று அத்தடத்தின் மூழ்கச் செய்தான். நக்கீரனும் முருகனைப் பணிந்து முன்னர்க் கண்ட தடத்தில் மூழ்கினான். மூழ்கியோன் திருக்காளத்தியிலுள்ள பொன்முகரியாற்றி லெழுந்து கயிலை பாதி காளத்தி பாதியாக விறைவனைத் துதித்துத் தொழுநோய்நீங்கித் திருக்காளத்திநாதன் திருவருள்பெற்றுய்ந்தான். இதுவே திருமுருகாற்றுப்படையினது வரலாறாகும்.

சிவபெருமானையும் முருகவேளையுங் கண்டு துதிக்கும் பெருந்தகையாளனாகிய நக்கீரன் பாடிய இத்திருமுருகாற்றுப் படையானது முருகவேளின் கருணைக்கிலக்காக வேண்டியவர்கட்கு ஒரு மந்திரமாலையாகிச் செபிப்பார்க்கெல்லாம் இம்மையிலேயே வேண்டுவனவற்றை யருளும் ஒரு சிந்தாமணியாக விளங்குகின்றது. இத்திருமுருகாற்றுப்படையை நியமத்தோடு செபிப்பவர்கள் நோய் பகை முதலியன நீங்கப்பெற்று கல்வியுஞ் செல்வமுங் கடிமணமும் மகப்பேறுங் கவினப் பெற்று இன்பப்பேறெய்துவர். ஆதலால் இம்மந்திரமாலையின் பொருளையும் துதிப்போர் அறிந்து துதிப்பின் மிக்க பயனைப் பெறுவர். ஆதலின் நந்தண்டமிழுலகில் அண்டருந் துதிக்கும் முருகவேளின் அடியிணை மறவாத உத்தம சிலர்கட்கு உபகாரமாக இவ்வுரை எழுதப்பட்டுள்ளது.

திரிசிரபுரம்
5-9-33

இங்ஙனம்:
R. மீனாட்சிசுந்தரம்.

# திருமுருகாற்றுப்படை

இஃது திரு முருகு ஆறு படை எனனும் நான்கு தனி மொழிகள் சேர்ந்த ஒரு தொடர். 'திரு' என்பதற்கு அழகு முதலாகப் பலபொருள் கூறுவர். ஆயினும் அதற்குச் சிறந்த பொருள் கண்டோரால் விரும்பப்படுந் தன்மை என்பதே யாம். இப்பொருள்படுதலை "திருவளர் தாமரை" என்னுந் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரைத்தவாற்றான் அறிக.

திருமுருகாற்றுப்படை-திருவினையுடைய முருகனை யாற் றுப்படுத்தலை உரைக்கு நூல் என்று விரித்தால் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்கதொகை என் றும், திருமுருகனிடத்து ஆற்றுப்படுக்கு நூலெனில் ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையென்றும், திருமுருகனது ஆற்றுப்படை என்னின் ஆறும் வேற்றுமைத்தொகைப் பிறிதின் கிழமைப்பொருள தென்றும், இத்தொடர்மொழி பொருள்தரும். இவ்வாறன்றி திருமுருகு + ஆற்று + படை = திருமுருகாற்றுப்படை. திரு முருகினல் ஆற்றப்பட்ட படை என்று கொண்டு ஸ்ரீ சுப்பிர மணியப்பெருமான் தன்தொண்டர் செயித்து மனநினைவுகளை யெய்தச்செய்த கருவி என்று கூறி; மூன்றும் வேற்றுமைத் தொகைக் கருத்தாப் பொருளது என்றும், திருமுருகை, ஆற்று, படை, அதாவது செபஞ்செய்கிறவர்களுக்குச் சிவ சுப்பிரமணியக் கடவுளைத் தரிசிப்பிக்கின்ற கருவி என்று கொண்டு, இரண்டாம் வேற்றுமைத்தொகை ஆக்கப்பொரு ளது என்றும் பொருள்கொள்ளுதல் கூடும்.

ஆறு என்னும் நெடிற்றொடர்க்குற்றுகரம் "நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட் டறவொற்றிரட்டும் வேற் றுமை மிகவே" என்ற விதிப்படி ஒற்றிரட்டித்து ஆற்றுப் படை என்றாயிற்று.

திருமுருகு-திருவையுடைய முருகு. திரு-ஐஸ்வரியம். (ஐஸ்வரியங்கள்) அவையாவன: பெத்தான்மாக்களும் அவர் கள் வாழும் தனுக்களும், அவர்கள் நுகர்ச்சிக்குரிய காரணங் களும், முத்தான்மாக்களும் அவர்கட்களிக்கும் அருள்ஞானம் இன்பமாதிகளும், ஆகவே இவைகளை யியல்பாகத் தமது விபூதியாகவுடைய முருகு பரம்பொருள் என்பதாயிற்று. ஆகவே எல்லாம்வல்ல பரம்பொருளை முருகு என்றும், இளமையுடையவனாக மூவாதிய வெவரும் நினைக்க நின்ற தோர் அற்புதவுருவம் திருமுருகு என்பதாயிற்று. திருமுருகு ஆற்றுப்படை திருமுருகாற்றுப்படை; அதாவது: திருமுரு கின்மீது மதுரைக்கணக்காயனார் மகனாராகிய நக்கீரனார்பாடிய ஆற்றுப்படை-திருமுருகாற்றுப்படை. ஆற்றுப்படை-ஆற்றுப் படுத்தல், வழியிடைக் கண்டானொருவன், காணானொருவனுக் குத் தான் பண்டுகண்ட முறையைக்கூறி வழிப்படுத்தலும் நீ கண்டால் நீ விரும்பியவைகளை யருளும் வள்ளல் அவன் என்று அறிந்தவன் அறியாதவனுக்கு அவன் வள்ளன்மை யைக் கூறுதலுமாகப் புனைந்துரைவகையா லியற்றியதோர் நூல். முருகன் என்பதன் ஈறுகெட்டு முருகு என நின்றது என்று கோடலுமொன்று. முருகு என்பது இளமை; அது அதனை என்றுமுடைய முருகனுக்கு ஆகலில் பண்பாகுபெயர் என்றுங் கொள்ளலாம். எவ்வாறென்னில்: இதனைப் பாரா யணஞ் செய்வாரது பகையழிதலும் பாவமழிதலும் கண் கூடாதலின் என்க.

# திருமுருகாற்றுப்படை

## காப்பு

ஒருமுரு காவென்றென் னுள்ளக் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.

(இதன்பொருள்) தையல் - யானையைக்கண் டஞ்சிய வள்ளிநாயகியார், முருகா என்று-முருகக்கடவுளை யென்று, தான் புலம்பாநிற்ப - தான் புலம்பிநிற்க, (அக்கணமே) முன்னே - அவ்வம்மையார் முன்னே, திருமுருகாற்றுப் படையுடனே - (அஞ்சவேண்டாம் நின்னைப் பாதுகாப்போம் என்று) திருமுருகாற்றுப்படையுடன், வரும்-வந்து காத்தருளிய, சேவகன்-வீரச்செயலை யுடையவனாகிய முருகக் கடவுள், ஒருமுருகா என்று - ஒப்பற்ற இளமையை யுடையவனே என்று, என் உள்ளம்-எனது மனமானது சொல்லிக் கொண்டு, குளிர-இன்புற, உவந்து-மகிழ்ந்து, உடனேவரும்-உடன்வந் தருள்புரியும், முருகா என்று-ஞான ஒளியை யுடையவனே யென்று, வாய் வெருவா நிற்ப - வாய் அச்சத்தால் குளற, இங்ஙனே-இச்சமயத்தே, கை தரும்-உதவிசெய்து காத்தருளும் என்றவாறு.

(விருத்தியுரை) யானையைக் கண்டு அஞ்சிய வள்ளிநாயகி யார் மனந் தளர்ந்து செயலற்று முருகக்கடவுளை என்று அழைத்த சமயத்து வந்துதவிய சேவகத்தையுடைய குமாரக் கடவுள் தம்மை மெய்யன்புடன் துதிக்கும் அடியார் மனம் குளிருமாறு வந்தருள்புரியும், இடருற்றகாலத்தில் வந்து அவ் விடுக்கண் களைந்து உதவியருளும் என்றவாறும். "முருகா வென்று தையல்தான் புலம்பாநிற்ப முன்னே, திருமுருகாற் றுப் படையுடன்வருஞ் சேவகன், ஒருமுருகா என்றென் றுள் ளக்குளிர வுவந்துடனே, வரும்முருகாவென்று வாய்வெருவா நிற்பக் கையிங்ஙனே தரும்" என்று அன்வயப்படுத்திக்கொள்க.

ஒருமுருகா - ஒன்றாகிய முருகனே; ஒப்பில்லாதவனே என்றபடி. முருகு - அழகு, இளமை, ஒளி, மணம் முதலிய பலபொருள் தரும்; அதனை உடையவன் முருகன். உள்ளம் குளிர்தல்-உள்ளுதல் (நினைத்தல்) உள்ளுந்தொழிலையுடையது உள்ளம். குளிர்தல்-பலகாலும் இறைவனது திருப்பெயரைக் கூறிய உள்ளம் அவ்விறைவனது திருக்கோலத்தைக் காண்டலும், இன்புறலுமாம். மெய்யடியார் உள்ளும் உள்ளத்தே இறைவன் தோன்றுவன் என்பது நூற்கொள்கை.

“ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை” “அந்தணர்தம் சிந்தையானை” எனத் தேவாரமும், “கற்போலுநெஞ்சங்கசிந்துருகக்கருணையினால் - நிற்பானைப்போலவென்னெஞ்சினுள்ளேபுகுந்தருளி” எனக் திருவாசகமுங் கூறுவதுகாண்க.

வாய்வெருவுதல் - அச்சத்தால் குளறுதல். கைதருதல்-உதவிசெய்தல். புலம்பல்-அச்சத்தால் தெளிவில்லாத சொற்களைக் கூறல். தையல்-அழகு; ஈண்டு இயற்கையழகு ஆகுபெயராய் அதனை உடையவளை உணர்த்திற்று; பண்பாகுபெயர். திரு-யாவரும் விரும்புதற்குரியது. முருகாற்றுப்படை - முருகக்கடவுளிடத்து ஆற்றுப்படுத்தல். சேவகன்-வீரச்செயல் உடையவன். இங்கு வீரச்செயலாவது தேவர்களைத் துன்பத்தினின்றும் விடுவிக்கக் கருதிய முருகப்பிரான் அத்தேவர்களுக்குப் பகைவர்களாகிய தாரகன் யானைமுகன் முதலாகிய அசுரர்களைப் பொருதுவென்று வெற்றிபெற்ற தொழில். இங்கு வள்ளிநாயகியார் யானையைக்கண்டஞ்சி முருகக்கடவுளைச் சிந்தித்தது: வள்ளிநாயகியார் திருமணப்படலத்தில் கண்டறிக. இங்கு இக்கதையை ஆசிரியர் எடுத்துக்கூறக் காரணம் இவ்வாறு உதவிசெய்த முருகக்கடவுள் தான் எடுத்துக்கொண்டது இனிது முடியுமாறு தனக்கும் உதவிசெய்வர் என்பது கருதி என்க.

உ

திருச்சிற்றம்பலம்

# திருமுருகாற்றுப்படை.

## மூலமும் விருத்தியுரையும்

---

முதலாவது

## திருப்பரங்குன்றம்

(திருப்பரங்குன்றத்திருப்பன் என்ற பகுதி)

இணைக்குறள் ஆசிரியப்பா

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

(பதவுரை) உலகம் உவப்ப-நிலையியற்பொருளும் இயங்கியற் பொருளுமான வுயிர்களையுடைய பிரபஞ்சமானது

அந்தகாராதி நீங்குதலினாலே மகிழும்வண்ணம், வலன் ஏர்பு திரிதரு-வலமாக எழுந்துசெல்லும், பலர் புகழ் ஞாயிறு-(அறிவுடைய) பலர் பலவிதமாகப் புகழுகின்ற சூரியன், கடல் கண்டு ஆங்கு-கடலினிடத்தே காணப்பட்டாற்போல, ஓ அற இமைக்கும்-கெடாது விளங்குகின்ற, சேண் விளங்கு அவிர் ஒளி-வெகுதூரங் காணப்படுகின்ற நல்ல பிரகாசத்தினையும், உறுநர்த் தாங்கிய-அடைக்கலமென்று அடைந்தாரை (பகைவர் முதலியோருக்குக் காட்டிக் கொடுக்காது) காத்த, மதன் உடை நோன் தாள்-அழகமைந்த வன்மைவாய்ந்த பாதங்களையும், செறுநர் தேய்த்த-பகைவரை யழித்த, செல் உறழ்-இடியை ஒத்த, தடக்கை-பெரிய கையினையும் (உடையவனும்), மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன்-களங்கமில்லாத கற்பினையுடைய ஒள்ளிய நெற்றியினையுடைய தெய்வயானைக்குக் கணவனும்.

(விருத்தியுரை) இவ்வாறுவரியும் ஒருதொடர். நிலையியற்பொருளும் இயங்கியற்பொருளுமான வுயிர்களையுடைய பிரபஞ்சமானது அந்தகாராதி நீங்குதலினாலே மகிழும்வண்ணம் வலமாக எழுந்துசெல்லும் அறிவுடைய பலர் பலவிதமாகப் புகழுகின்ற சூரியன் கடலினிடத்தே தோன்றினாற்போலக் கெடாது விளங்குகின்ற வெகுதூரங் காணப்படுகின்ற பிரகாசத்தினையும் அடைக்கலமென்று அடைந்தோரைப் பகைவர் முதலியோருக்குக் காட்டிக் கொடுக்காது காத்த அழகமைந்த வன்மைவாய்ந்த பாதங்களையும் பகைவரை யழித்த இடியை ஒத்த பெரியகையினையும் உடையவனும் களங்கமில்லாத கற்

பிணையுடைய வொள்ளிய நெற்றியினையுடைய தெய்வயானையின் கணவனும்,

'ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி' என்பதற்குக் கெடாது விளங்குகின்ற தகராகாயமான ஞானகாயமென்னும் இதையவெளியிலே விளங்குபவன் என்றும் பொருள்கூறி விழுக்காது.

அகலிகை, தாரை, குந்தி, இந்திராணி, திரௌபதி முதலிய மகளிரையும் கற்புடையாரென்றே நூல்கள் உரைக்கின்றன. அவர்கள் கற்புநிலையில் மறுக்கத்தக்க பாகங்கள் இருத்தல் போலன்றி இஃது நிலையுள்ள கற்பாதலின் 'மறுவில் கற்பின்' என்றதென்று அறிக.

கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்

(ப-ரை) கார் கோள் முகந்த-கடனீரை யுண்ட, கமம் சூல் மா மழை - நிறைந்த சூலினையுடைய பெரிய மேகங்கள், வாள் போழ் விசும்பின்-ஒளிப்பொருள்களான சூரிய சந்திர நட்சத்திரங்களால் இருளைப் பிளக்கின்ற ஆகாயத்தில் நின்று, வள் உறை சிதறி-பெரிய நீர்த்துளிகளைச் சிந்தி, தலைப்பெயல் தலைஇய-முதன் மழையைப் பெய்துவிட்ட, தண் நறும் கானத்து-குளிர்ந்த மணமமைந்த காடுகளில், இருள்பட-இருளுண்டா

மாறு, பொதுளிய-தழைந்த, பராரை மராஅத்து-பரிய அரைகளையுடைய வெண் கடம்புகளின், உருள் பூ தண் தார் - உருண்ட வடிவினவான பூக்களாற் கட்டப்பட்ட குளிர்ச்சி வாய்ந்த மாலை, புரளும் மார்பினன்-அசைகின்ற மார்பினனும்.

(வி-ரை) இவ்வைந்துவரியும் ஒருதொடர். கடல்நீரையுண்ட நிறைந்த சூலினையுடைய பெரிய மேகங்கள் ஒளிப்பொருள்களான சூரிய சந்திரர்களால் இருளைப் பிளக்கின்ற ஆகாயத்தில் நின்று பெரிய நீர்த்துளிகளைச் சிதறி மழைபெய்து விட்ட குளிர்ந்த மணமமைந்த காடுகளில் இருளுண்டாமாறு தழைந்த பெரிய வரைகளையுடைய வெண்கடம்புகளின் உருண்ட வடிவினவான பூக்களாற் கட்டப்பட்ட குளிர்ச்சி வாய்ந்த பூமாலையசைகின்ற மார்பினனும்.

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பி
னாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்

தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்

(ப-ரை) மால் வரை நிவந்த-பெரிய சிகரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள, சேண் உயர் வெற்பில் - வானமளாவிய மலைகளில், கிண்கிணி கவைஇய - கிண்கிணி கட்டப்பட்ட, ஒண் செஞ் சீறடி கணைக்கால்-நல்ல சிறிய படங்களோடு பொருந்தின கணைக்காலினையும், வாங்கிய நுசுப்பின் - துவளுகின்ற இடையினையும், பணைத்தோள்-தடித்த தோள்களையும், கோபத்து அன்ன-இந்திரகோபம் போன்ற, தோயாப் பூந்துகில்-சாயந் தோய்க்காத அழகிய சேலையையும், பல் காசு நிரைத்த-பல மணிகளைக்கோத்து வரிசைப்படுத்திய, சில்காழ் அல்குல்-சிறிய மணிவடமணிந்த அல்குலினையும், கை புனைந்து இயற்றா-ஒருவர் கையினு லாக்கப்படாத, கவின் பெறு வனப்பின்-இயற்கை யழகாக வாய்ந்த அழகினையும், நாவலொடு பெயரிய பொலம்புனை-சாம்பூனதமென்னும் பொன்னாற்செய்த, அவிர் இழை-பிரகாசமான அணிகளையும், சேண் இகந்து விளங்கும்-சுவர்க்கத்தை விடுத்துவந்து விளங்குகின்ற, செயிர் தீர் மேனி-குற்றமற்ற மேனியையுமுடைய, சூர் அரமகளிர் பலருடன்-(கண்டார்க்கு) அச்சத்தை உண்டாக்கும் தேவமாதர் பலர் ஒருங்குசேர்ந்து, துணையோர் ஆய்ந்த-தோழியராலே யாராயப்பெற்ற, இணை ஈர் ஓதி - இரண்டாக வகிர்ந்த கூந்தலில், செங்கால் வெட்சிச் சீறிதழ் இடை - சிவந்த காம்பினதான வெட்சியின் சிறிய பூக்களை விடுபூவாகச் சிதறி, பைந்தாள் குவளை தூஇதழ் கிள்ளி இடுபு-(அதனிடையே) பசிய நாணத்தினையுடைய குவளையின் அகவிதழ்களைக்கிள்ளியிட்டு, தெய்வ உத்தியொடு-சீதேவி என்னும் தலைக்கோலத்துடனே, வலம்புரி வயின் வைத்து - வலம்புரி யென்பதனையும் பக்கத்தில்

வைத்து, திலகம் தைஇய-பொட்டிட்ட, தேம் கமழ் திருநுதல்-தேன் மணம் வீசுகின்ற நல்ல நெற்றியில், மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து - மகரப் பகுவாய் தொங்குமாறு கட்டி, துவர முடித்த-செய்யவேண்டுவனவெல்லாஞ் செய்துமுடித்த, துகள் அறும் உச்சி-குற்றமற்ற மயிர்முடியில், பெருந் தண் சண்பகம் செரீஇ - பெருஞ் சண்பகத்தின் குளிர்ந்த பூவைச் செருகி, கரும் தகட்டு உளைப் பூ மருதின்-கரிய விதழ்களையும் உள்ளில் மெல்லிய பஞ்சினையுமுடைய மருதம்பூவின், ஒள் இணர் அட்டி - நல்ல கொத்துக்களை மேலே இட்டு, கிளைக் கவின்று எழுதரு - பக்கங்களில் அழகாக உண்டாகின்ற, கீழ் நீர்ச் செவ்வரும்பு-நீர்கீழ்நின்றும் வருகின்ற செந்நிற வரும்புகளை, இணைப்புஉறு பிணையல் வளைஇ-கட்டிய மாலையைச் சூடி, துணைத்தக வண்காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்-இரண்டினுமொருதன்மையவாகக் காதுகளிற் செருகப்பெற்ற அசோகின் நல்ல தளிர், நுண் பூண் ஆகம் திளைப்ப-நுண்ணிய வணிகள் அணிந்த மார்பினிடத்துப் பொருந்த, திண் காழ் நறும் குறடு உரிஞ்சிய பூங்கேழ் தேய்வை - மிக வைரமேறிய நல்ல சந்தனத்தை யரைத்த குழம்பை, தேம் கமழ் மருது இணர் கடுப்ப-தேன்மணம் வீசுகின்ற மருதம் பூங்கொத்தை அப்பியது போலத் தோன்ற, கோங்கின் குவிமுகிழ் இளமுலை கொட்டி-கோங்கினது குவிந்த இளைய வரும்புபோன்ற தனங்களில் அப்பி, விரிமலர் வேங்கை நுண் தாது அப்பி - (அதன்மீது) விரிந்த மலரான வேங்கையினது நுண்ணிய தாதுகளை அப்பி, காண்வர வெள்ளில் குறு முறி - ஒருவருக்கொருவர் தெரியும்வண்ணம் விளவினது சிறிய தளிரை, கிள்ளுபு

தெறியா-கிள்ளித் தெறித்து, கோழி ஓங்கிய-ஆண்கோழி வடிவமான சித்திரம் வரையப்பெற்ற உயர்ந்த, என்று அடுவிறற் கொடி-எதிர்த்துப் பகைவரை யழிக்கின்ற வெற்றிக் கொடியானது, பெரிது வாழிய என்று, ஏத்தி-மிகவும் வாழ்கவென்று துதித்து, பலருடன் - அனேகர்கள் ஒன்ருகச்சேர்ந்து, சீர்திகழ் சிலம்பகம்-சிறப்பு விளங்குகின்ற மலையினிடம், சிலம்ப-எதிரொலி செய்ய, ஆடுஞ் சோலை-விளையாடுகின்ற சோலைகளையுடைய, மந்தியும் அறியா மரம் பயில் அடுக்கத்து-குரங்கு யேறியறியாத உயர்ந்த மரங்கள்பொருந்திய இடங்களிலுண்டாகின்ற, சுரும்பு மூசா-வண்டுமொய்க்காத, சுடர்ப் பூங்காந்தள் பெரும் தண் கண்ணி - ஒளிபொருந்திய பூவாகிய காந்தளாற் கட்டிய மாலையை, மலைந்த சென்னியன் - அணிந்த திருமுடியை யுடையவனும்.

(வி-ரை) இம் முப்பத்துமூன்று வரியும் ஒருதொடர். பெரிய சிகரங்களுயர்ந்து வளர்ந்துள்ள வானமளாவிய மலைகளில் கிண்கிணி கட்டப்பட்ட நல்ல சிறிய படங்களொடு பொருந்திய கணைக்காலினையும், துவளுகின்ற இடையினையும், தடித்த தோள்களையும், இந்திரகோபம் போன்ற சாயந்தோய்க்காத அழகிய சேலையினையும், பல மணிகளாலான சிறிய மணிவடமணிந்த அல்குலினையும், ஒருவர் கையினுல் ஆக்கப்படாத இயற்கை அழகாக வாய்ந்த அழகினையும், சாம்பூனதமென்னும் பொன்னுற் செய்த பிரகாசமான வணிகளையும், சுவர்க்கத்தை விடுத்துவந்து விளங்குகின்ற குற்றமற்ற மேனியையுமுடைய சூர மகளிரென்னுந் தெய்வமாதர் பலர்

ஒருங்குசேர்ந்து, தோழியரா லாராயப்பெற்ற, இரண்டாக வகிர்ந்த கூந்தலில் செவந்த காம்பினதான வெட்சியின் சிறிய பூக்களை விடுபூவாகச் சிதறி, அதனிடையே பசிய நாளத்தினையுடைய குவளையின் அகவிதழ்களைக் கிள்ளியிட்டுச் சீதேவியுடனே வலம்புரி யென்பதனையும் பக்கத்தில் வைத்துப் பொட்டிட்ட தேன்மணம் வீசுகின்ற நல்ல நெற்றியில் மகரப் பகுவாயைத் தொங்கும்படி கட்டி, செய்யவேண்டுவனவெல்லாஞ் செய்து முடித்த குற்றமற்ற மயிர்முடியில், பெருஞ் சண்பகத்தின் குளிர்ந்த பூவைச் செருகிக் கரிய விதழ்களினையும், உள்ளில் மெல்லிய பஞ்சினையுமுடைய மருதம்பூவின் நல்ல கொத்துக்களை மேலேயிட்டுப் பக்கங்களி லழகாக வுண்டாகின்ற நீர்க்கீழ்நின்றும் வருகின்ற செந்நிற வரும்புகளைக் கட்டிய மாலையைச்சூடி, இரண்டிலுமொரு தன்மயவாகக் காதுகளிற் செருகப்பெற்ற அசோகின் நல்லதளிர் நுண்ணிய பணிகளணிந்த மார்பினிடத்துப் பொருந்த வைரமேறிய நல்ல சந்தனத்தை யரைத்த குழம்பைத் தேன்மணம் வீசுகின்ற மருதம் பூங்கொத்தை அப்பியதுபோலத் தோன்றக் கோங்கினது குவிந்த விளய வரும்புபோன்ற தனங்களில் அப்பி, விரிந்த மலரான வேங்கையினது நுண்ணிய தாதுகளை யதன்மீது அப்பி, ஒருவருக்கொருவர் தெரியும்வண்ணம் விளவினது சிறியதளிரைக் கிள்ளித்தெறித்து, ஆண்கோழி வடிவமான சித்திரம் வரையப்பெற்ற வுயர்ந்த எதிர்த்து பகைவரை அழிக்கின்ற வெற்றிக் கொடியானது மிகவும் வாழ்கவென்று துதித்து, அநேகர்கள் ஒன்றாகச் சேர்ந்து, சிறப்பு விளங்குகின்ற மலையினிடம் எதிரொலி செய்ய விளையாடுகின்ற சோலை

களையுடைய குரங்குகளும் ஏறியறியாத வுயர்ந்த மரங்கள் பொருந்திய விடங்களில் உண்டாகின்ற வண்டு மொய்க்காத வொளிபொருந்திய பூவாகிய காந்தளாற் கட்டிய மாலையை யணிந்த திருமுடியை யுடையவனும்.

பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்

(ப-ரை) பார்முதிர்-முதிர்ந்த பாறைகளையுடைய, பனி கடல் கலங்க-குளிர்ந்த கடல் கலக்கமுற, உள் புக்கு-உள்ளே

சென்று, சூர் முதல் தடிந்த - சூரனாகிய முதலை யழித்த, சுடர் இலை நெடு வேல் - ஒளிபொருந்திய தகட்டு வடிவமான வேலினால், உலறிய கதுப்பில் - உலர்ந்த கன்னத்தினையும், பிறழ் பல் பேழ்வாய்-ஒன்றோடொன்று மாறுபட்ட பற்களை யுடைய பிளந்த வாயினையும், சுழல் விழி பசுங் கண் - சுழலுகின்ற விழிகளையுடைய பசிய கண்களையும், சூர்த்த நோக்கிற் கழல் கண் கூகையொடு - உருட்டி யச்சந்தரப் பார்ப்பதனாலே வெளியிற் பிதுங்கிய கண்களையுடைய கோட்டானுடனே, கடும்பாம்பு தூங்க-பெரும்பாம்பு தொங்குதலாலே, பெருமுலை அலைக்கும் காதின் - பெரிய முலைகளை வருத்துகின்ற காதுகளையும், பிணர் மோட்டு - காடுமுரடாக விருக்கின்ற உருளையும், உருகெழு செலவின் - காண்போ ருட்கும்வண்ணம் நடக்கும் நடையினையும், அஞ்சுவரு பேய்மகள் - அஞ்சுமாறு வருகின்ற பேயாகிய மகள், குருதி ஆடிய - சோரி யணிந்த, கூர் உகிர் கொடு விரல் - கூரிய நகத்தினையுடைய வளைந்த விரல்களால், கண்தொட்டு உண்ட-கண்ணைப் பிடுங்கித்தின்ற, கழி முடை கருந்தலை-மிக்க முடைநாற்றத்தினையுடைய கரிய தலையினை, ஒண் தொடி தடக்கையின் ஏந்தி - நல்ல வளையலணிந்த பெரிய கையில் தாங்கி, வெருவர - பார்ப்பார்க்கு அச்சமுண்டாக, என்று அடுவிறல் களம்பாடி - எதிர்த்துக் கொன்ற வெற்றிக்களத்தைப் பாடிக்கொண்டு, தோள் பெயரா - புயத்தைக் குலுக்கி, நிணம் தின் வாயள் - இறைச்சியைத் தின்னுகின்ற வாயினை யுடையவளாய், துணங்கை தூங்க - இரு கைகளையு முடக்கித் தோளி லடித்தாடுவதான துணங்கைக் கூத்தாட, இருபேர் உருவின் ஒரு பேர் யாக்கை - மனிதவுருவும்.

விலங்கினுருவுமாகிய ஒரு பெரிய வுடல், அறு வேறுவகை யின் அஞ்சுவர மண்டி-வேறுவேறான ஆறுருவத்துடன் கண்டார்க்கு அச்சமுண்டாக விரைந்து சென்று, அவுணர் நல்வலம் அடங்க - அவுணரது நல்ல வெற்றி யடங்கும்வண்ணம், கவிழ் இணர் மாமுதல் தடிந்த-கவிழ்ந்த கொத்துக்களையுடைய மாமரத்தை யழித்த, மறு இல் கொற்றத்து - களங்கமற்ற வெற்றியினையும், எய்யா நல்லிசை-குறையாத கீர்த்தியினையும் உடைய, செவ்வேல் சேய் - செய்ய வேற்படையினையுடைய முருகனது.

(வி-ரை) இப்பதினேழு வரியும் ஒருதொடர். முதிர்ந்த பாறைகளையுடைய குளிர்ந்தகடல் கலக்கமுற வுள்ளேசென்று சூரனாகிய முதலை யழித்த ஒளிபொருந்திய தகட்டுவடிவமான வேலினால் உலர்ந்த கன்னத்தினையும், ஒன்றோடொன்று மாறுபட்ட பற்களையுடைய பிளந்த வாயினையும், சுழலுகின்ற விழிகளையுமுடைய பசிய கண்களையும், உருட்டி யச்சந்தரப் பார்ப்பதனாலே வெளியிற் பதுங்கிய கண்களையுடைய கோட்டானுடனே பெரும்பாம்பு தொங்குதலாலே, பெரியமுலைகளை வருத்துகின்ற காதுகளையும், கரடுமுரடான உருவினையும், காண்போருட்கும்வண்ணம் நடக்குநடையினையும், அஞ்சுமாறு வருகின்ற பேயாகிய மகள் சோரியணைந்த கூரிய நகத்தினையுடைய வளைந்த விரல்களாற் கண்ணைப் பிடுங்கித்தின்ற மிக்க முடைநாற்றத்தினையுடைய கரிய தலையினை, நல்ல வளையலணிந்த பெரிய கையிற்றூங்கிப் பார்ப்பார்க்கு அச்சமுண்டாக எதிர்த்துக்கொன்ற வெற்றிக்களத்தைப் பாடிக்கொண்டு புயத்தைக் குலுக்கி யிறைச்சியைத் தின்னுகின்ற வாயினையுடையவ

ளாய், இருகைகளையு முடக்கித் தோளி லடித்தாடுவதான துணங்கைக் கூத்தாட மனிதவுருவும் விலங்குருவுமாகிய ஒரு பெரிய வுடல் வேறுவேறான வாறுருவத்துடன் கண்டார்க்கு அச்சமுண்டாக விரைந்துசென்று, அவுணரது நல்ல வெற்றி யடங்கும்வண்ணம் கவிழ்ந்த கொத்துக்களையுடைய மாமரத்தை யழித்த களங்கமற்ற வெற்றியினையும், குறையாத நல்ல கீர்த்தியினையும் உடைய செய்ய வேற்படையினையுடைய முருகனது. 'இருபேருருவின் ஒருபேர்யாக்கை' சூரன் பதுமனென்பார், ஒரு உடலாகவிருந்த சூரபன்மாவைக் கூறினுமிழுக்காது. பழந் தமிழ்நூல்களின் சூரபன்மன் குதிரைமுகமும், மனிதவுருவு முடையனென்று கூறியிருத்தலின் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இவ்வாறு பொருள் கண்டனர். கல்லாடத்துச் சூரனை 'முடங்குளை முகத்துப்பாற் றேறு ளவுணன்' என்றும், கலித்தொகையில் சூரனை 'ஈரணிக்கேற்ற வொடியப்படிவத்து' என்றும் கூறியிருத்தல்காண்க. 'அறுவேறுருவின் அஞ்சுவரமண்டி' என்பதற்கு அற்ற வேறுவேறான வுருவத்தினாலே அச்சமுண்டாகிச் சென்று எனச் சூரனுருவமற்றென்று கூறினுமாம். 'அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி' யென்பதற்கு, இதன் முதலுரையாசிரியரான நச்சினார்க்கினியர் சிவபெருமான் மலையரையன்மகளை மணந்து புணர்ந்திருந்தானென்றும், அதனையுணர்ந்த இந்திரன் இறைவனை யணுகி நீ புணர்ச்சி தவிர்க என்றானென்றும், இவன் மொழிப்படி இறைவன் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை அவ்விந்திரனிடமே கொடுத்தானென்றும், இந்திரனிடத்தினின்று முனிவர்கள் பெற்றுத் தங்களாற் பரிக்கமுடியாமை

யால் அக்கினியில் லோபித்து அருந்ததி யொழிந்த மனைவி யர்களிடமளித்தார்களென்றும், அவர்கள் சரவணப்பொய்கை யில் பதுமப்பாயலில் விடுத்தார்களெனவும், அங்கு முருக வேள் ஆறுவடிவமாக அவதரித்திருந்தானெனவும், இந்திரன் இதனை மறந்து சண்டைக்கு வந்தானெனவும், முருகவேள் ஆறுருவும் ஓருருவாகி இந்திரனைப் பொருதுவென்று மீட்டும் ஆறுருவாகிச் சூரபன்மாவைக் கொல்லச் சென்றானென்று புராணங் கூறுகின்றதென் றெழுதியிருக்கின்றனர். பாரத முதலியவைகளில் இச்சரிதஞ் சிறிது மாறுபடக் கூறியிருத் தல் காண்க.

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே

(ப-ரை) சேவடி படரும் செம்மல் உள்ளமொடு-செவ்விய திருவடிகளிற் பற்றிய வுயர்ந்த மனத்துடனும், நலம்புரி கொள்கை-இம்மையில் நன்மையே செய்கின்ற கோட்பாடு டனும், புலம் புரிந்து உறையும்-ஞானச்செயலையே யுடையனாகி, (அவனைக் காணுதற்கு), செலவு நீ நயந்தனையாயின்-போதலை நீ விரும்பினையாயின், நன்னர் நெஞ்சத்து இன் நசை - நல்ல நெஞ்சிற் பொருந்திய இனிய ஆசைகள் பலவுடன், வாய்ப்ப - பல வொருங்குபொருந்த, முன்னிய வினையே - நீ கருதிய செயலை, இன்னே பெறுதி - இப்பொழுதே பெறுவாய்.

(வி-ரை) இவ்வைந்து வரியும் ஒருதொடர். செவ்விய திருவடிகளிற் பற்றிய வுயர்ந்த மனத்துடனும், இம்மையில் நன்மையே செய்கின்ற கோட்பாட்டுடனும், ஞானச்செயல்களை யுடையனாகியவனைக் காணுதற்குப்போதலை நீ விரும்பினையாயின் நல்ல நெஞ்சிற் பொருந்திய இனிய வாசைகள் பலவொருங்கு பொருந்த இப்பொழுதே அடைவாய் நீ கருதிய செயலை. இதனுலிது அதிகாரியை விளக்கிற்று. அதாவது முருகவேளைத் தரிசித்துப் பயன்பெற விரும்பும் அதிகாரியானவன், சேவடி படருஞ் செம்மலுள்ளத்தனாய் நலம்புரி கொள்கையனாய் இருந்தல்வேண்டும் என்பதாம். 'பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப' என்பதற்கு, நீ முன் அடைந்த பல வுடலங்களினும் வேண்டுமென்று கருதிக் கிடையாது கிடந்த பலவகை மனோபீஷ்டங்களையும் அடையப்பெற்று. 'இன்னே பெறுதிநீ முன்னிய வினையே' இப்பிறப்பிற் கருதியதனையும் இப்பிறப்பிலேயே எய்தப்பெறுவாய் என்றும் பொருள்கொள்ளலாம்.

செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்

கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று.

(ப-ரை) செரு புகன்று எடுத்த-போரை வென்று தூக்கிய, சேண் உயர்-வானமளாவிய, நெடுங்கொடி - நீண்ட வெற்றிக்கொடியி னருகே, வரிப்புனை பந்தொடு - வரிந்து கட்டிய பந்துடனே, பாவை தூங்க - பாவையுந் தொங்க, பொருநர்த் தேய்த்த - பகைவரை யில்லா தாக்கியதனுல், போர் அரு வாயில்-போர்த்தொழி லில்லையான வாயிலையும், திரு வீற்றிருந்த-திருமகள் தங்கிய, தீது தீர்-குற்றமற்ற, நியமத்து - கடை வீதிகளையும், மாடம் மலி மறுகில் - மாளிகைகள் மிகுதியாகவுள்ள வீதிகளையும் உடைய, கூடல் குடவயின் - மதுரையின் மேற்றிசையில், அஞ்சிறை வண்டின் - அழகிய இறகுகளையுடைய வண்டுகளின், அரிக்கணம் - அழகிய கூட்டம், இருஞ் சேற்று அகல் வயல் - பதஞ்செய்தலாற் பயிரிடுதற்குச் சிறந்த சேறமைந்த அகலமான கழனிகளில், விரிந்து வாயவிழ்ந்த - முறுக்கவிழ்ந்து நன்றாய் விரிந்த, முள்தாள் தாமரை துஞ்சி- முட்களைத் தண்டிலுடைய தாமரைமலர்களில் இரவு உறங்கி, வைகறை - விடியற்காலத்தே, கள்கமழ் நெய்தல் ஊதி - தேன் மணம் வீசுகின்ற நெய்தற்பூவில் இசைபாடி மொய்த்து, எற்பட-சூரியன் உதித்தவுடன், கண்போல் மலர்ந்த - கண்போல விரிந்த, காமர் சுனைமலர் - அழகிய சுனைகளிலுள்ள மலர்களையடைந்து, ஒலிக்கும் - இசைபாடுகின்ற, குன்று அமர்ந்து

உறைதலும் உரியன் - திருப்பரங்குன்றத்து எழுந்தருளி இருத்தலும் உரியன், அதா அன்று - அதுவன்றி.

(வி-ரை) இப்பதினொரு வரியும் ஒருதொடர். போரை வென்று கட்டின வானமளாவிய நீண்ட வெற்றிக்கொடியி னருகே, வரிந்து கட்டிய பந்துடனே பாவையுந் தொங்கப் பகைவரை யில்லாதாக்கியதனால் போர்த்தொழில் இல்லையான வாயிலையும், திருமகள் தங்கிய குற்றமற்ற கடைவீதிகளையும், மாளிகைகள் மிகுதியாகவுள்ள வீதிகளையுமுடைய, மதுரையின் மேற்றிசையில் அழகிய இறகுகளையுடைய வண்டுகளின் அழ கிய கூட்டம் பதஞ்செய்தலாற் பயிரிடுதற்குச் சிறந்த சேறு அமைந்த் அகலமான கழனிகளில், முறுக்கவிழ்ந்து நன்றாய் விரிந்த முட்களைத் தண்டிலுடைய தாமரைமலர்களில் இரவு உறங்கி, விடியற்காலத்தே தேன்மணம் வீசுகின்ற நெய்தற் பூவிலே இசைபாடிமொய்த்துச் சூரியன் உதித்தவுடனே கண் போல் விரிந்த வழகிய சுனைகளிலுள்ள மலர்களை யடைந்து, இசைபாடுகின்ற திருப்பரங்குன்றத்து எழுந்தருளியிருத்த லும் உரியன். அதுவன்றி, 'பந்தும் பாவையும் தூக்கல்' என்பது பகைவரைப் பெண்டிராகக் கருதி மகளிர் விளையாடு மாறு கட்டப்பட்டதென்க. (1)

---

முதலாவது

## திருப்பரங்குன்றம் சிறப்பு

படைத்தற்கும் காத்தற்கும் அழித்தற்கும் உரிமையுடைய ஒளியினையும், தாளினையும், கையினையு முடைய தெய்வயானையார் கணவன், குளிர்ந்த கடப்பமாலை அசையாநின்ற மார்பினையுடையவன், செங்காந்தட்கண்ணியைச் சூடிய திருமுடியுடையவன், வெற்றியும் புகழும் உடையவனாகிய ஸ்ரீ முருகக்கடவுளைத் தலைமைபெற்ற உள்ளத்தோடு நீ விரும்பினையானால், வீடுபேற்றைத் தவறாமல் இப்பொழுதே பெறுவை. அது பெறுதற்கு அவன் யாண்டுறையுமென்னில் திருப்பரங்குன்றமர்ந் துறைதலு முரியன்.

---

[திருப்பரங்குன்றம்] இது மதுரைக்கு 3-நாழிகைவழி தூரத்தி லிருக்கின்றது. இது ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் பராசரர் புத்திரர்களைக் காத்தருளிய ஸ்தலம். ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் சூராதியரைவென்று, தேவர்கள் சிறையை மீட்டு, அவர்களை விண்ணுலகத்திற் குடியேற்றியபோது, தேவேந்திரன் அவர் பராக்கிரமத்துக்கு மகிழ்ந்து, தன் புத்திரியாகிய தெய்வயானையம்மையை அவருக்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்த ஸ்தலம். முருகா என்று மொழிந்து வரும் ஒரு பெண்ணின் கணவன் அதை யொழித்துத் தன் பெயர் கூறக் கற்பித்தும், அவள் கேளாமைக்காக அவன் கரத்தைச் சேதிப்ப, அக்கரம் ஸ்ரீமுருகப்பிரான் அருளால் வளரப்பெற்ற ஸ்தலம்.

## இரண்டாவது

# திருச்சீரலைவாய்

(திருச்செந்தூரிலிருப்பன் என்ற பகுதி.)

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்.
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப [குழை
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக

மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்[ருமுகங்
கறுவுகொ ணெஞ்சமொடுகளம்வேட் டன்றேயொ
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின் [கம்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே யாங்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெரு கலிங்கத் துக் குறங்கின்மிசையசைஇய
அங்குசங் கடாவ வொருகை யிருகை [தொருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்பவொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை [கை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப வொரு
பாடின் படுமணி யிரட்ட. வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை

வானர மகளிர்க்கு வதுவை சூட்டவாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை நரல
உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ [று.
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்

(ப-ரை) வை நுதி பொருத - கூரிய நுனியினையுடைய அங்குசத்தாற் குத்தப்பட்ட, வடு வாழ் - தழும்பு பொருந்தின, வரி நுதல் - சிந்தூரக் கீற்றமைந்த நெற்றியில், வாடா மாலை - கற்பக மாலையானது, ஓடை ஒடு - நெற்றிப்பட்டத்துடன், துயல்வர - அசைய, படும் மணி - விலாப்புறங்களிற் படுகின்ற மணிகள், இரட்டும் மருங்கின் - அடிக்கின்ற பக்கங்களையும், கடுநடை - வேகமான நடையையும், கூற்றத்து அன்ன - யமனை யொத்த, மாற்றரும் மொய்ம்பின் - பிறரால் நீக்கமுடியாத பலத்தினையும் உடைய, கால் கிளர்ந்து அன்ன - காற்றுச் செல்வதுபோன்ற வேகத்தினையுடைய, வேழம் மேல் கொண்டு - ஆண்யானை மீதேறி, ஐ வேறு உருவின் செய் வினை முற்றிய - தாமம் மகுடம் பதுமம் கிம்புரி கோடகம் என்னும் ஐந்துவகையான வேறுபாட்டுடன் செய்தமைத்த, முடியொடு விளங்கிய - முடியிற் பதிக்கப்பட்டுப்

பிரகாசிக்கின்ற, முரண் மிகு திரு மணி - ஒன்றோடொன்று நிறத்தாலும் அழகாலும் மாறுபட்ட அழகிய அரதனங்கள், மின் உறழ் - மின்னலை யொத்த, இமைப்பின் - ஒளியுடனே, சென்னி பொற்ப-சிரங்களில் விளங்கவும், நகை தாழ்பு துயல் வருஉம் - ஒளியானது தங்கி அசைகின்ற, வகையமை - வகை வகையாக வமைந்த, பொலம் குழை - பொற்குண்டலங்கள், சேண் விளங்கு இயற்கை வான்மதி கவைஇ - வானத்தில் விளங்குகின்ற இயல்பான வொளியினையுடைய பூரண சந்திரனைச்சூழ்ந்து, அகலா மீனின்-நீங்காதுறும் நட்சத்திரங்களைப் போல, அவிர்வன இமைப்ப - விளங்குவனவாக ஒளிவிடவும், தாவில் கொள்கை - கெடாத சங்கற்பத்தோடு கூடின, தம் தொழில் முடிமார் - தமது பூசைத் தொழிலை முடிப்பவர் களின், மனன் நேர்பு - மனதிலே நேர்ந்து, எழுதரு - அவ ரெதிரே தோன்றுகின்ற, வாள் நிறமுகன் - பிரகாசமான நிறத்தையுடைய முகங்களுள், ஒரு முகம் - ஒரு முகமானது, மாயிருள் ஞாலம் - பேரந்தகாரத்தைப் பொருந்திய உலக மானது, மறுவு இன்றி விளங்க - இருளின்றி விளங்குமாறு, பல் கதிர் விரிந்தன்று - பல கதிர்களை விரித்தது, ஒரு முகம்- மற்றொரு முகமானது, ஆர்வலர் ஏத்த - பத்தர்கள் தன் புகழ் கூறித் துதிக்க, அமர்ந்து இனிது ஒழுகி - அவர்கள் விருப்பம் போல நடந்து, காதலின் உவந்து - அன்பொடு மகிழ்ந்து, வரம் கொடுத்தன்று-வரங்களைக் கொடுத்தது, ஒருமுகம் - மற் றொருமுகம், மந்திர விதியின் மரபுளி வழாஅ - மந்திரவிதி யின் முறையினிடத்துத் தவறுதலில்லாத, அந்தணர் வேள்வி ஓர்க்கும் - பார்ப்பா ரியற்றும் யாகங்களைத் தீங்குவாராதவண்

ணம் ஞாபகத்தில் வைத்துக் காக்கும்; ஒரு முகம் - மற்றொரு முகமானது, எஞ்சிய பொருள்களை - யாகமல்லாத மற்றைய பொருள்களை, ஏமுற நாடி - மகிழ்வொடு தேடி, திங்கள் போலத் திசைவிளக்கும் - சந்திரனைப்போலப் பத்துத்திசைகளிலும் விளங்கச் செய்யும், ஒரு முகம் - மற்றொரு முகமானது, செல் சமம் முருக்கி - எதிரிட்டு வெற்றியாகச் சென்றுகொண்டிருந்த போரை அழித்து, கறுவு கொள் நெஞ்சமொடு-கோபித்தலைக் கொண்ட மனதுடனே, செறுநர் தேய்த்து - பகைவரை அழித்து, களம் வேட்டன்று-களவேள்வி செய்தது; ஒரு முகம் - மற்றொரு முகமானது, குறவர் மடமகள் - வேடுவர்களின் மடப்பம் பொருந்திய மகளும், கொடிபோல் நுசுப்பின் - கொடிபோன்ற இடையினையுடைய, மடவரல் - இளம் பெண்ணுமாகிய, வள்ளியொடு-வள்ளியம்மையுடன், நகை அமர்ந்தன்று - சிரித்து விளையாடுதலைச் செய்தது; அம் மூவிரு முகனும்-அந்த ஆறு திருமுகங்களும், ஆங்கு-அத்தொழில்களை, முறை நவின்று ஒழுகலின்-முறையாகச்செய்து வருவதற்கேற்ப, ஆரம் தாழ்ந்த - முத்துவட மணிந்த, அம் பகட்டு மார்பில் - அழகிய பெரிய மார்பினிலுள்ள, செம்பொறி வாங்கிய - சிவந்த மூன்றிரேகைகள் எய்திக் கிடக்கின்ற, மொய்ம்பில் வண்புகழ் நிறைந்து - தனது வண்மையால் உண்டான சிறந்த புகழால் நிறையப் பெற்று, சுடர் விடுபு - ஒளிவிட்டு, வசிந்து வாங்கு - பகைவர் உடலங்களை ஆயுதங்களால் பிளந்தெடுக்க, நிமிர் தோள் - உயர்ந்த தோள்களில், ஒரு கை - ஒரு கையானது, விண் செலல் மரபின் ஐயர்க்கு - வானத்திற் செல்லப்பட்ட முறையினையுடைய

முனிவர்களுக்குக் காவலாக, ஏந்தியது - எடுத்தது, ஒரு கை உக்கம் சேர்த்தியது - ஒருகை இடுப்பினில் வைக்கப்பட்டது; ஒருகை அங்குசம் கடாவ-ஒருகை அங்குசத்தைச் செலுத்தா நிற்க, ஒருகைக் நலம் பெறு கலிங்கத்து குறங்கின்மிசை அசை இயது - மற்றொருகை அழகுபொருந்திய ஆடையின் மீது தொடையிற் கிடந்தது, இருகை - மற்றிரண்டு கைகள், ஐயிரு வட்டமொடு-அழகிய பெரிய கேடகத்துடனே, எஃகு வலந்திரிப்ப - வாளாயுதத்தைச் சுழற்ற, ஒருகை மார்பொடு விளங்க - மற்றொருகை மார்பொடு பொருந்தி விளங்க, ஒரு கை-மற்றொருகை, தாரொடு பொலிய - மாலையொடு விளங்க, ஒருகை தொடியொடு மீமிசை கொட்ப-ஒரு கையானது வாகு வலயத்துடன் மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை காட்ட, கீழ்வீழ் ஒருகை பாடு இன் படு மணி இரட்ட-கீழே தொங்கவிட்ட வொருகை இனிய ஓசையைத் தருகின்ற மணியைக் களவேள்வியில் மாறி மாறி ஒலிக்க, ஒருகை நீல் நிற விசும்பின் மலி துளி பொழிய - ஒருகை நீலநிறமான ஆகாயத்தில் மிக்க மழையைப் பொழிய, ஒருகை வான மகளிர்க்கு வதுவை சூட்ட - ஒருகை தெய்வமாதருக்கு மண மாலை அணிய, ஆங்கு அ பன்னிரு கையும் - அவ்வாறே அந்தப் பன்னிரண்டு கைகளும், பாற்பட இயற்றி - முகத்தின் செயல்களுக்கேற்பச் செய்து, அந்தரப் பல்லியம் - தேவதுந்துபிகள், கறங்க-முழங்க, திண் காழ் வயிர் எழுந்து இசைப்ப-முற்றின கொம்பு ஊத, வால் வளை ஞரல - வெள்ளிய சங்குகள் முழங்க, உரம் தலைக்கொண்ட - வன்மையைத் தன்னிடத்தேகொண்ட, உரும் இடி முரசு ஒடு - இடியேற்றின் ஒலிபோ

னும் ஒலியினையுடைய முரசுடனே, பல் பொறி மஞ்ஞை- பலபுள்ளிகளையுடைய மயிற்பறவை, வெல் கொடி அகவ - வெற்றிக்கொடியிலிருந்துகூவ, விசும்பு ஆறாக - வானவழியே வழியாக, விரை செலல் முன்னி - வேகமாக எழுந்தருளுதலை மேற்கொண்டு, உலகம் புகழ்ந்த - உயர்ந்தவர்களால் கொண்டாடப் படுகின்ற, ஓங்கு உயர் விழுச்சீர் - மிக்க சிறப்பினையுடைய, அலைவாய்ச் சேறலும் - நாமனூரலைவா யென்னுந் திருச்செந்தூரை யடைதலும்; நிலைஇய பண்பே - நிலையான தன்மையாம், அதா அன்று - அதுவின்றி;

• (வி-ரை) இந்நாற்பத்தெட்டு வரியும் ஒருதொடர். கூரிய நுனியினையுடைய அங்குசத்தாற் குத்தப்பட்ட தழும்பு பொருந்தின சிந்தூரக் கீற்றமைந்த நெற்றியில், கற்பகமாலையானது, நெற்றிப்பட்டத்துடன் அசைய, விலாப்புறங்களில் படுகின்ற மணிகள் அடிக்கின்ற பக்கங்களையும், கொடிய கொலைபுரிதலான செயலினையுடைய யமனையொத்த பிறரால் நீக்கமுடியாத பலத்தினையும் உடைய 'காற்றுச் செல்வதுபோன்ற வேகத்தினையுடைய யானைமீதேறித் தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடக மென்னும் ஐந்துவகையான வேறுபாட்டுடன் செய்தமைத்த முடிகளிற் பதிக்கப்பட்டுப் பிரகாசிக்கின்ற வொன்றொடொன்று நிறத்தானும், அழகானும் மாறுபட்ட அழகிய வாதனங்கள் மின்னலையொத்த வொளியுடனே சிரங்களில் விளங்கவும், ஒளி வீசப்பட்டு வகைவகையாக வமைந்த பொற்குண்டலங்கள் வானத்தில் விளங்குகின்ற வியல்பான வொளியினை

யுடைய் பூரண சந்திரனைச்சூழ நீங்காத நக்ஷத்திரங்களைப் போல விளங்குவனவாக வொளிவிடவும், கெடாத சங்கற்பத் தோடுகூடின தமது பூசைத்தொழிலை முடிப்பவர்களின் மன திலே சேர்ந்து, அவரெதிரே தோன்றுகின்ற பிரகாசத்தை யுடைய முகங்களுள் ஒரு முகமானது பேரந்தகாரத்தைப் பொருந்திய வுலகத்தின் இருளின்றி விளங்குமாறு பல கதிர் களை விரித்தது; மற்றொருமுகமானது பத்தர்கள் தன்புகழைக் கூறித்துதிக்க அவர்கள் விருப்பம்போல நடந்து, அன்பொடு மகிழ்ந்து வரங்களைக் கொடுத்தது; மற்றொரு முகம் மந்திர விதியின் முறையினிடத்துத் தவறுதலில்லாத பார்ப்பார் இயற்றும் யாகங்களைத் தீது வராதவண்ணம் ஞாபகத்தில் வைத்துக் காக்கும்; மற்றொரு முகமானது யாகமல்லாத மற்றைப் பொருள்களை மகிழ்வொடு தேடிச் சந்திரனைப் போலப் பத்துத்திசைகளிலும் விளங்கச் செய்யும்; மற்றொரு முகமானது எதிரிகட்கு வெற்றியாகச் சென்று கொண் டிருந்த போரை அழித்து, ஆகட்டுமென்று கறுவுதலைக் கொண்ட மனதுடனே பகைவரை அழித்துக் களவேள்வி செய்தது; மற்றொரு முகமானது வேடுவரின் மடப்பப் பொருந்திய மகளும், கொடிபோன்ற இடையினையுடைய இளம்பெண்ணுமாகிய வள்ளியம்மையுடன் சிரித்து விளை யாடுதலைச் செய்தது. அந்த ஆறு திருமுகங்களும் அத் தொழில்களை முறையாகச்செய்து வருதற்கேற்ப, முத்தவட மணிந்த அழகிய பெரிய மார்பினிலுள்ள சிவந்த மூன்று ரேகைகள் எய்திக்கிடக்கின்ற தனது வன்மையாலுண்டான சிறந்த புகழால் நிறையப்பெற்று, ஒளிவிட்டுப் பகைவ

ருடலங்களை ஆயுதங்களாற் பிளந்தெடுத்த வுயர்ந்த தோள் களில் ஒருகையானது வானத்திற் செல்லு முறையினை யுடைய முனிவர்களுக்குக் காவலாக எடுத்தது; ஒருகை இடுப்பினில் வைக்கப்பட்டது; ஒருகை அங்குசத்தைச் செலுத்தாநிற்க, மற்றொருகை அழகுபொருந்திய ஆடை யின்மீது தொடையிற் கிடந்தது; மற்றிரண்டு கைகள் அழகிய கேடகத்துடனே வாளாயுதத்தைச் சுழற்ற, மற்றொருகை மார்போடு பொருந்தி விளங்க, இன்னொருகை மாலையொடு விளங்க, மற்றொருகை வாகுவலயத்துடன் மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரைகாட்ட, கீழே தொங்கவிட்ட மற் றொருகை இனிய வோசையைத் தருகின்ற மணியைக் கள வேள்வியில் மாறிமாறி யொலிக்க, ஒருகை நீலநிறமான ஆகாயத்தில் மிக்க மழையைப் பொழிய, ஒருகை தெய்வமாத ருக்கு மணமாலையணிய அவ்வாறே அந்தப் பன்னிரண்டு கைகளும், முகத்தின் செயல்களுக் கேற்பச்செய்து, தேவ துந்துபிகள் முழங்க, முற்றிய கொம்பூத, வெள்ளிய சங்கு கள் முழங்க, வன்மையைத் தன்னிடத்தே கொண்ட இடியேற் றின் ஒலிபோலும் ஒலியினையுடைய முரசுடனே பல புள்ளி களையுடைய மயிற்பறவை வெற்றிக்கொடியிலிருந்து கூவ, வானவழியே வழியாக வேகமாக வெழுந்தருளுதலை மேற் கொண்டு உயர்ந்தவர்களாற் கொண்டாடப்படுகின்ற, மிக்க சிறப்பினையுடைய நாமநூலவா யென்னுந் திருச்செந்தூரை யடைதலும் அவற்கு நிலையான தன்மையாம்.

'வைந்நுதி' ஆகுபெயராய் அங்குசத்தை யுணர்த்திற்று. தேவரணியும் மாலையான கற்பக மலர்மாலை வாடா வியல்பின

தீரத்தின், 'வாடாமாலை' என்பதற்குக் கற்பகமாலை யென்றும்; இவ்யானை தேவயானை யாதலின், வேகத்திற் காற்றினும் விரைவுடைய தின்மையான் இவ் யானையின் நடைக்கு அதனை யுவமை கூறினார். நுதலும் மாலையும் ஓடையும் மணியும் வலியும் உடைய வேழமேற் கொண்டு என்க. எம்பெருமான் ஆறு திருமுகங்களை யுடையவனாதலின் வேறுவேறான மகுடங்களை அணிந்தவனென்பார் 'ஐவேறுருவின்' என்றார். பன்னிரண்டு குண்டலங்களைப் பன்னிரண்டு காதுகளிலும் அணிந்திருத்தலை விளக்க 'வகை அமை பொலங் குழை' என்றார். குழை - காதணி. முகமாகிய பூரணமதியினருகில் காதணி முதலியவைகளிலுமுள்ள மணிகள், நட்சத்திரங்களைப்போல விளங்கின என்பார் 'வாண்மதி கவைஇ அகலா மீனின்' என்றார். 'நட்சத்திரங்கள்' என்றது சந்திரனருகிலுறும் உரோகணியாதிகளை. இவ்வாறுமுகங்களும் நினைப்பார் நினைவின் விளங்குவன வாதலின் 'மன நேர்பு எழுதருவாணிறமுகன்' என்றார். இவர் எங்கும் மகாவீரராகவேண்டிய முக முதலியவைகளை மகாவீரராகவே கூறுதல் காண்க. இதைப் போலி என்று கொள்ளுவர் நன்னூலாரும பின்னூலாரும். வெயிலைத்தருபவனும் முருகவேளே என்பான் 'பல்கதிர் விரிந்தன்றொருமுகம்' என்றும், இரப்பாரிரக்கும் பொருளெல்லாம் காப்பதின்றி அளிக்கும் வள்ளலுமிவனே யென்பான் 'ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக் காதலி னுவந்து வரங் கொடுத்தன்று' என்றும், யாகாதிபதியும் இப்பெருமானே யென்ன, அந்தணர் வேள்வி ஓர்க்கும் எம் சுப்பிரமணியனாதலின் அந்தணர் தலைவனென்று குறிக்க 'அந்தணர் வேள்வி

ஒர்க்கும்' என்றும், செபிப்பார் பாவத்தைப் போக்குவதாக்க லின் வேதம் மந்திரமென்றும் பெயர்பெற்று, 'அந்தண ரென்போ ரறவோர்' என்று கேட்கப்படுதலால் அந்தணர் தரும நான்முறை மாறுதோர் என்க. அந்தணரைக் காத்தல் போலப் பிறரையுங் காத்தல் அவனுக்குக் கடனாதலின், 'எஞ்சிய பொருள்' என்பதற்குப் பிறரையும் என்றும். இரக்கத்துடனின்று இரட்சிப்பவனென்பான் 'திங்கள்போலத் திசைவிளக்கும்' என்றும், ஒருமுகம் 'எஞ்சிய பொருள்களை யேமுறநாடித் திங்கள்போலத் திசை விளக்கு' மென்பதற்கு இவ்விடத்து வழங்காத வேதங்களினும் நூல்களினுமுள்ள பொருள்களை யாராய்ந்து, இருடிகள் மகிழும்வண்ணம் விளக்கித் திங்களையொப்பத் திக்குக்களையெல்லாம் பிரகாசிக்கச் செய்யும் என்று பொருள்கொள்ளுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஆராய்ந்து கூறினவனாயின் அவன் முற்றறிவனல்லனவன். ஏமுறல்-மகிழ்தல். எதிரியின் வெற்றியைக் கெடுத்துப் பகைவரை யழிப்பவனென்றது துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனனும் இவனே ஆதலின் 'கறுவுகொ ணெஞ்சமொடு செறுநர்த்தேய்த்து' என்றும்; சமம்-போர்; போகாதிபதியும் இவனே யென்பான், 'வள்ளியொடு நகையமர்ந் தன்று' என்றும்; முகத்தாற் செய்யும் செயலிற் சிறந்தது சிரித்தலாதலி னின்பநிகழ்ச்சிக் கேற்ப, நகையமர்ந் தன்று' என் றும்; உத்தம விலக்கணம் வாய்ந்த ஆண்பாலார்க்கு மார்பினின்றும் மூன்றுரேகை தோளளவும் எய்திக்கிடத்த லுண்மையின், செம்பொறி வாங்கிய தோள்' என்றும்; 'மொய்ம்பிற் வண்புகழ் நிறைந்து சுடர்விடுபு வசிந்து வாங்குநிமிர்

'தோள்' என்பதற்கு மொய்ம்பினை யுடைத்தாய் ஒளிவிட்டு நிறைந்து வளைய வேண்டுமிடம் வளைந்து, நிமிரவேண்டுமிட நிமிர்ந்துமுள்ள தோளென்றுங் கூறுவர்.

அறவோரை யாள்வோனு மிவனென்பான் 'ஏந்திய தொருகை' என்றும்; பாகனின்றித் தானே யானையை யோட்டிச் செல்கின்றவ னென்பான் 'அங்குசங் கடாவ' என்றும்; பரிசை பிடித்த கைக்கெதிர் கையிற்பிடிப்பது வாளாதலின் 'எஃகு' என்பதற்கு வாளென்றும். 'எஃகு' என்பதற்கு வேலென்று பொருளுளதாயினும் அது எறிகருவி யென வறிக. ஞானகுரவனு மிவனேயாதலின், ஞானமுத்திரையை யுடைய கையை 'மார்பொடு விளங்க' என்றும், வருஷாதிபதியும் இவனென்பான் 'ஒருகை நீனிற விசும்பின் மலி துளி யொழிய' என்றும் கூறியது காண்க. விசும்பு-மேகமுமாம். இதனுள் இடைப்பிறவரலா யுள்ளனவற்றைப் பிறர் கூற்றென்றறிந்தமைக. அவன் யானைமீதேறி முகங்களுங் கைகளு மிவ்வாறுன தொழில்களைச் செய்யாநிற்ப, துந்துபி யொலிக்கவும், கொம்பு முழங்கவும், சங்கு தழங்கவும், முரசு கறங்கவும், மயில் கூவவும், ஆகாயவழியாகச் சென்று, திருச்சீரலைவாயை அடைவதியல்பென்க. "அது முன்வரு மன்று ஆன்றாந் தூக்கின்" என்பது விதியாதலின், அன்று என்பது ஆன்று என்றாயது என்க. (2)

## இரண்டாவது
## திருச்சீரலைவாய் சிறப்பு

வேழமேற்கொண்டு ஆறுமுகங்களும் தொழில்களிடத்துச் செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்த, அவற்றிற்கேற்பத் தோள்கள் ஆங்காங்கு வளைந்தும் நிமிர்ந்துமிருக்கப் பன்னிருகையும் முகங்களின் பகுதியிலே படும்படி தொழில் செய்து திருச்செந்தூர் என்னுந் திருப்பதியேற எழுந்தருளுதலும் நிலைபெற்ற குணமாம்.

---

[திருச்சீரலைவாய்] இது திருநெல்வேலிக்குத் தெற்கே மூன்றுகாத தூரத்தில் சமுத்திரதீரத்திலுள்ளது. வியாசரால் உபதேசிக்கப்பட்ட சுகப்பிரமரிஷியும், நாரதரால் உபதேசிக்கப்பட்ட வெள்ளையானையும் பூசித்து அனுக்கிரகம் பெற்ற ஸ்தலம்.

இது கந்தமாதனம், சந்தனாசலம், திருச்செந்தி, திருச்செந்தில், திருச்செந்தூர் என்னும் பெயர்களாலும் வழங்கி வருகின்றது.

தேவர்கள் இடர்களைப் போக்குவிக்கும் பொருட்டுச் சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாருகாசுரன், பானுகோபன் முதலிய துஷ்டர்களாகிய அசுரர்களைச் சம்ஹரித்தபின் வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமாகேந்திரன், வீரமாகேச்சுரன், வீரபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீரராந்தகன், வீரதீரன் முதலிய நவவீரர்களும், பூதவீரர்களும், இலக்கவீரர்களும் படைவீடுகொண் டெழுந்தருளியிருந்த ஸ்தலம்.

## மூன்றாவது

# திருவாவினன்குடி

(திருவாவினன்குடியில் இருப்பன் என்றபகுதி.)

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்

(ப-ரை) சீரை தைஇய உடுக்கையர் - மரவுரியாற் சூழப்பெற்ற வுடையினரும், சீரொடு வலம்புரி புரையும் வால் நரை முடியினர்-சீருடனே வலம்புரியை யொத்த வெள்ளிய நரைமுடியினரும், மாசு அற இமைக்கும் உருவினர் - தவ வொளியாற் களங்கமின்றி விளங்கும் வடிவினரும், மானின்

உரிவை தைஇய-வெளி மானினுரிபோர்த்த, ஊன் கெடு மார்பின்-தசையற்ற மார்புடன், என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் - என்புகள்மேலே காணப்படுகின்ற உடலினரும், நல் பகல் பலவுடன் கழிந்த உண்டியர் - நல்ல தினங்கள் பல கழித்துண்ணு முணவினரும், இகலொடு செற்றம்-பகையும் கோபமும், நீக்கிய மனத்தினர் - இல்லாத மனத்தினரும், யாவதும் கற்றோர் அறியா அறிவினர்-எல்லாங் கற்றவர்களாலும் அறியப்படாத வறிவினரும், கற்றோர்க்கு தாம் வரம்பு ஆகிய தலைமையர்-கற்றோர்க்கெல்லாம் எல்லையாகிய முதன்மையினரும், காமமொடு கடுஞ்சினம் கடிந்த-பெண்ணாசையுடனே பெருங்கோபத்தையும் ஒழித்த, காட்சியர்-தோற்றத்தினரும், இடும்பையாவதும் - துன்பமென்பன வனைத்தையும், அறியா இயல்பினர் - தெரியாத இன்பவடிவினரும் ஆகிய, மேவர-(முன்சொல்லிய சிறப்புக்களெல்லாம்) பொருந்த, துனி இல் காட்சி முனிவர்-வெறுப்பற்ற தோற்றத்தினையுடைய முனிவர்கள், முன் புக-முன்னே செல்லவும்.

(வி-ரை) இப்பன்னிரண்டு வரியும் ஒருதொடர். 'சிறந்த முனிவர்' என்பதை விளக்க, மரவுரி உடையும், மான்தோல் உத்தரீயமும், நரைமுடியும், மாசறவிமைக்கும் உருவும், வற்றிய மார்பும், என்பெழுந்த யாக்கையும், கழிந்த வுண்டியும், இகலொடு செற்ற நீங்கிய மனமும், கற்றோ ரறியா வறிவும், கற்றோருட்டலைமையும் காமமும், வெகுளியுமற்ற தோற்றமும், இடும்பை யென்பதில்லா வியல்பும், துனியில் காட்சியும் உடையரென்றனர். 'சீரை தைஇய வுடுக்கையர்' என்றது

தூய்மையாவது குற்றமற்ற தன்மையாம். 'மாசற விமைக்குமுருவம்' என்பது அவரது முதுமையும், 'மாசற இமைக்குமுருவம்' என்பது புறத்தூய்மையையும், 'ஊன்கெடு மார்பின் என்பெழுந் தியங்கும் யாக்கையும்' என்பது உண்டி சுருக்குதலையும், 'நன்பகல் பலவுடன் கழிந்த உண்டி' என்பது உண்ணாவிரதத்தையும், 'இகலொடு செற்ற நீக்கிய மனம்' என்பது பரிசுத்தமான நினைவையும், 'கற்றோர் யாவது மறியா வறிவு' என்பது முற்றுணர்வையும், 'கற்றோர்க் தாம் வரம்பாகிய தலைமை' என்பது சகலகலை வல்லமையையும், காமமொடு கடுஞ்சினங் கடிந்த காட்சி' என்பது முக்குற்றமின்மையும், -'இடும்பையாவது மறியாவியல்பு' என்பது சதானந்தத் தன்மையையும், 'துனி இல் காட்சி' என்பது நித்திய திருத்தத் தன்மையையும் விளக்கியிருத்தல் காண்க. மரவுரியாற் சூழப்பெற்ற வுடையினரும், சீருடனே வெள்ளிய வலம்புரியை யொத்த வெள்ளிய நரைமுடியினரும், தவவொளியாற் களங்கமின்றி விளங்கும் உருவினரும், வெளி மானுரிபோர்த்த தசையற்ற மார்புடன் என்புகள் மேலே காணப்படுகின்ற உடலினரும், நல்ல தினங்கள் பல கழிந் துண்ணு முணவினரும், பகையுங் கோபமும் இல்லாத மனத்தினரும், எல்லாம் கற்றவர்களாலும் அறியப்படாத வறிவினரும், கற்றோர்க்கெல்லாம் எல்லையாகிய முதன்மையின ரும், பெண்ணாசையுடனே பெருங் கோபத்தினையும் ஒழித்த தோற்றத்தினரும், துன்பமென வினைத்தையும் தெரியாத இன்ப வடிவினரும் ஆகிய வெறுப்பற்ற தோற்றத்தினையுடைய முனிவர்கள் முன்னே செல்லவும், நரைமுடிக்குச் சீராவது சிக்கு அழுக்கு முதலிய வில்லாத சீரென்க.

*

புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர

(ப-ரை) புகை முகந்து அன்ன-பாற்புகையைப் பிடித்து வைத்தாற்போன்ற, மாசு இல் தூ உடை-அழுக்கற்ற பரிசுத்தமான உடையினையும், முகை வாய் அவிழ்ந்த-அரும்பு விரிந்த பூவாலாகிய, தகை சூழ் ஆகத்து-கட்டப்பட்ட மாலை யணிந்த மார்பினையும் (அதனோடு பொருந்த), செவி நேர்பு வைத்த-காதருகில் வந்து தங்குமாறு வைத்த, செய்வு உறு திவவின் நல் யாழ் நவின்ற - நரம்பு திருத்தன் முதலியவைகளாகச் செய்யவேண்டு மவைகளைச் செய்த முறுக்காணிகளை யுடைய நல்ல யாழினை சுதி கூட்டின, நயன் உடை நெஞ்சின் - அன்பு பொருந்திய மனதினையுடைய, மெல் மொழி மேவலர்-இனிய மொழியாளரான கந்தருவர்கள், இன் நரம்பு-இனிய நரம்புகளை, உளர-தட்டி வாசிக்க.

(வி-ரை) இவ்வைந்து வரியும் ஒருதொடர். பாற்புகையைப் பிடித்துவைத்தாற்போன்ற அழுக்கற்ற பரிசுத்தமான வுடையினையும், அரும்பு விரிந்த பூவாலாகிய கட்டப்பட்ட மாலை யணிந்த மார்பொடுபொருந்த் காதினருகிற் றங்குமாறு வைத்த நரம்பு திருத்தன் முதலியவைகளாகச் செய்யவேண்டு மவைகளைச் செய்த முறுக்காணிகளையுடைய நல்ல யாழினை

சுதிக்கூட்டின அன்புபொருந்திய மனநினைவுடைய இனிய மொழியாளரான கந்தருவர்கள் இனிய நரம்புகளைத் தட்டி வாசிக்க என்பதாம்.

நுண்மையும் வெண்மையு முடையதாதலின் கந்தருவருடையை, 'புகைமுகந் தன்ன மாசில் தூவுடை' என்றார். அது கற்பகமளிக்கும் ஆடையாதலின் 'தகை' ஆகுபெயராய் மாலையை யுணர்த்தியது. நின்று வாசிப்பவராதலின் வீணையை மார்பொடு பொருந்த காதொடு சாத்தி என்றும். கல்வியாழ் முறுக்காணி வார்க்கட்டு நரம்பு முதலிய முறையா யமைந்த யாழ் மென்மை மொழியினை யுடையராதலின் கந்தருவர் 'மென்மொழி மேவலர்' என்னப்பட்டார்.

நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்க

(ப-ரை) நோய் இன்று இயன்ற - நோயின்றி அமைந்த, யாக்கையர்-உடலினரும், மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர்-மாவினது விரிந்த தளிரையொத்த மேனியினரும், அவிர் தொறும் பொன் உரை கடுக்கும்-விளங்குந்தோறும் பொற்பொடியைபொத்த, திதலையர்-தேமலினரும், இன்நகை-காண்பதற்கினிய பற்களையுடையவர்களும் ஆகிய, பருமம் தாங்கிய-பதினெரு கோவைமணி வடமணிந்த, பணிந்து ஏந்து அல்

ருல்-தாழ்ந்து உயர்ந்த அல்குலினையுடைய, மாசு இல் மகளி ரொடு-குற்றமற்ற பெண்களுடன், மறு இன்றி விளங்க-குற்ற மின்றி விளங்காநிற்க.

(வி-ரை) இவ்வைந்து வரியும் ஒரு தொடர். நோயின்றி அமைந்த வுடலினரும், மாவினது விரிந்த தளிரையொத்த மேனியினரும் விளங்குந்தோறும், பொற்பொடியை யொத்த தேமலினரும், காண்பதற்கினிய பற்களை யுடையவர்களும், பதினெருகோவை மணிவடமணிந்த தாழ்ந்து உயர்ந்த வல் குலினரும் ஆகிய குற்றமற்ற பெண்களுடன் என்பதாம்.

குற்றம் இன்றி விளங்காநிற்க, 'இன்னகைப் பருமந்தாங் கிய' என்றார். கட்கினிய ஒளியினையுடைய பருமம் என்றுங் கூறலாம். *

கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சிவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும்

(ப-ரை) கடுவோடு-விடத்துடனே, ஒடுங்கி-உறைக்குள் ளடங்கிய, தூம்பு உடை-துவாரத்தினையுடைய, வால் எயிற்று-(காளி காளாத்திரி யமன் யமதூகி என்னும்) வெள்ளிய பற் களையும், அழல் என-தீயையொப்ப, உயிர்க்கும்-மூச்சுவிடு கின்ற, அஞ்சி வரு கடுந்திறல்-காண்பார்க்கு அச்சந்தரும் மிக்க வன்மையினையும் உடைய, பாம்பு-பாம்பானது, பட புடைக்கும்-சாக அடிக்கும், பல் வரி கொடுஞ்சிறை-பல்வரி யமைந்த வளைந்த இறகினையுடைய, புள் அணி நீள் கொடி-

கருடவடிவம் அழகாக எழுதப்பெற்ற நீண்ட கொடியினை யுடைய, செல்வனும்-திருமாலும்.

(வி-ரை) இந்நான்கு வரியும் ஒருதொடர். விடத்துடனே உறைக்குள் ளடங்கிய துவாரத்தினையுடைய காளி காளாத்திரி யமன் யமதூதியென்னும் நான்கு வெள்ளிப்பற்களையும், தீயை யொப்ப மூச்சுவிடுகின்ற, காண்பார்க்கு அச்சந்தரும் மிக்க வன்மையினையும் உடைய பாம்பானது சாக அடிக்கும் பல வரியமைந்த, வளைந்த, இறகினையுடைய கருடவடிவம் அழகாக எழுதப்பெற்ற நீண்ட கொடியினையுடைய திருமாலும் என்பதாம்.

வெள்ளே றுவலவயி னுயரியபலர்புகழ்திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்

(ப-ரை) வெள் ஏறு-வெள்ளிய இடபத்தினை, வலவயின் உயரிய-வெற்றிதரும் போரினிடத்தே தூக்கிக் கட்டியவனும், பலர் புகழ் திணி தோள்-பலராலும் புகழப்படுகின்ற திணந்த தோள்களை யுடையவனும், உமை அமர்ந்து விளங்கும் - உமா தேவி பொருந்தியிருக்கின்ற இடப்புறத்தையும், இமையா முக்கண்-இமைக்காத மூன்றுகண்களையும் உடைய, மூ எயில்-மும்மதில்களை, முருக்கிய-அழித்த, முரண் மிகு செல்வனும்-வன்மை மிக்கவனுமான உருத்திரனும்.

(வி-ரை) வெள்ளிய இடபத்தினை வெற்றியைத்தரும் போரினிடத்துத் தூக்கிக் கட்டியவனும், பலராலும் புகழப்

படுகின்ற திணிந்த தோள்களை யுடையவனும், உமாதேவி பொருந்தியிருக்கின்ற இடப்புறத்தை யுடையவனும், இமைக்காத மூன்று கண்களையுடையவனும், மும்மதில்களை அழித்த வன்மை மிக்கவனுமான உருத்திரனும் என்பதாம்.

நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்

(ப-ரை) நூற்றுப்பத்து அடுக்கிய - ஆயிரமென்று அடுக்கப்பெற்ற, நாட்டத்து-நயனங்களையும், நூறு பல் வேள்வி முற்றிய-நூறாகிய பல யாகங்களைச் செய்து முடித்த, வென்று அடு கொற்றத்து - வென்றதனால் அடுத்த வெற்றியினையும், ஏந்திய ஈரிரண்டு மருப்பின்-வளைந்துயர்ந்து ஏந்தியதுபோலக் காணப்படுகின்ற நான்கு கொம்புகளையும், எழில் நடை-அழகிய நடையினையும், தாழ் பெரும் தடக்கை-நிலத்திற் படுமாறு நீண்டு பருத்த துதிக்கையினையும் உடைய, உயர்த்த யானை-உயர்ந்த யானையினது, எருத்தம் ஏறிய - கழுத்தின்மேலேறிய, திரு கிளர் செல்வனும்-திருமகள்விலாசம் பொருந்திய இந்திரனும்; திருகிளர் அழகு விளங்குகின்ற என்றுமாம்.

(வி-ரை) இவ்வைந்துவரியும் ஒருதொடர். 'அடு' முதனிலைத் தொழிற்பெயர். இனி, வென்றடு கொற்றத்து-வென்று கொல்கின்ற வெற்றியென்பாரு முளர். வென்ற

பின்னர் கொல்லுதல் எங்ஙனங்கழும். ஆயிரமென்று அடுக்கப்பெற்ற நயனங்களையும், நூறாகிய பல யாகங்களைச் செய்து முடித்த வென்றதனால், அடுத்த வெற்றியினையும், வளர்ந்து உயர்ந்து ஏந்தியதுபோலக் காணப்படுகின்ற நான்கு கொம்புகளையும், அழகிய நடையினையும், நிலத்திற்படுமாறு நீண்டு பருத்த துதிக்கையினையும் உடைய வுயர்ந்த யானையினது கழுத்திலேறிய, திருமகள் விலாசம் பொருந்திய இந்திரனும் என்பதாம். 'உயர்த்த' வலித்தல் என்னுஞ் செய்யுள் விகாரம். *

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்

(ப-ரை) நால் பெரும் தெய்வத்து - நேர்திசைக் காவலரான இந்திரன் யமன் வருணன் குபேரன் என்னும் தேவர்களின், நல் நகர் நிலைஇய - நல்ல நகரங்களை புறப்பாட் டெல்லையாகவுடைய, உலகம் காக்கும் - உலகங்களைக் காக்கின்ற, ஒன்று புரி கொள்கை-ஒற்றுமைத்தன்மை பொருந்திய, பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக-பலராலும் புகழப்படுகின்ற முன் கூறிய, அரி அரன் இந்திரன் என்னும் மூன்றுபேர்களும் முதன்மையாளராக வர, ஏமுறும் ஞாலம்தன்னில் தோன்றி-

மகிழ்ச்சியைத் தருகின்ற உலகினிடத்து வந்து, தாமரை பயந்த-நாராயணனது உந்திக்கமலமளித்த, தாவு இல் ஊழி-கெடாத ஊழிகால வுயிர்வாழ்க்கையை யுடைய, நான்முக ஒருவன் சுட்டி காண்வர-நான்முகனாகிய வொருவன் நிமித்தமாகத் தன்னை வந்து காணும்வண்ணம்.

(வி-ரை) இவ் வாறுவரியும் ஒருதொடர். நேர்திசைக் காவலரான இந்திரன் யமன் வருணன் குபேரனென்னும் தேவர்களின் நல்ல நகரங்களைப் புறப்பாட்டெல்லையாகவுடைய உலகங்களைக் காக்கின்ற வொற்றுமைத்தன்மை பொருந்திய பலராலும் புகழப்படுகின்ற முன்கூறிய அரி அரன் இந்திரன் என்னும் மூன்றுபேர்களும் முதன்மையாளராகவர, மகிழ்ச்சியைத் தருகின்ற வுலகினிடத்து வந்து, நாராயணனது உந்திக்கமலமளித்த கெடாத வூழிகால வுயிர்வாழ்க்கையை யுடைய நான்முகனாகிய வொருவன் நிமித்தமாகத் தன்னை வந்து காணும்வண்ணம் என்பதாம்.

'பலர்புகழ் மூவர்' என்பது புள்ளணி நீள்கொடிச் செல்வனையும், மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனையும், யானை யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனையும் என்க. இதனை வேறு கூறுவாறு முளர். நான்முகனாகிய ஒருவன்நிமித்தம் என்றதன் விவரம்: திருப்பரங்குன்றத்து இந்திரன் மகளான தேவயானை அம்மையின் திருக்கலியாணகாலத்தில் முருகவேள் தந் திருக்கையிலுள்ள வேலைப் பார்த்து, நமக்கு எல்லாந்தந்தது இந்த வேல் என்றவுடன் அதுகேட்ட பிரமன் இவ்வேலுக்கு இந்நிலைமை என்னாலன்றோ வந்ததென்றானாக,

நக்கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சத்தியுண்டோ வென்று சீறி, இவ்வாறு கூறிய நீ மண்ணிடைச் செல்வா யென்று சபித்தானும். அச்சாபத்தை யொழிப்பிக்கவே அரி அரன் இந்திரனுகிய மூவரும் காணுதற்குப் பிறருடன் வந்தனரென வறிக. *

பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதிறொரு மூவரோடு

(ப-ரை) பகலில் தோன்றும்-சூரியப் பிரகாசம்போலக் காணப்படுகின்ற, இகல் இல் காட்சி-மாறுபாடற்ற தோற்றத்தினையும், நால் வேறு இயற்கை - நான்காகிய வேறுபட்ட தன்மையினையுமுடைய, பதினொரு மூவரோடு - முப்பத்து மூவருடனே.

(வி-ரை) இவ்விரண்டுவரியும் ஒருதொடர். சூரியப் பிரகாசம்போலக் காணப்படுகின்ற மாறுபாடற்ற தோற்றத்தினையும், நான்காகிய வேறுபட்ட தன்மையினையுமுடைய முப்பத்துமூவருடனே என்பதாம்.

தேவர்கள் நான்கு பிரிவினர் ஆதலின், 'நால்வே றியற்கை' என்றார். அவராவார்: ஆதித்தியர் - பன்னிருவர், உருத்திரர் - பதினொருவர், வசுக்கள் - எண்மர், மருத்துவர் - இருவர், ஆக முப்பத்துமூவர். ஆதித்தியர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என நான்கு பிரிவினர். ஒவ்வொருவருக் கொவ்வொரு கோடியாக முப்பத்து முக்கோடியாவர். அதாவது: ஆதித்தியர்-பன்னிருகோடியர், உருத்திரர் - பதினொருகோடியர், வசுக்கள்-எட்டுக்கோடியர்,

மருத்துவர் - இரண்டுகோடியர் ஆக முப்பத்து முக்கோடியர். 'பகலில் தோன்றும் இகலில் காட்சி' என்பதற்கு அவர் இவரெனப் பகுக்குங்கா லுண்டாகின்ற வேறுபடாத ஒரு தன்மையான காட்சியின ரென்றும் பொருள்கொள்ளி னிழுக்காது. *

ஒன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற் றம்பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலு முரிய னதா அன்று.

(ப-ரை) ஒன்பதிற்று இரட்டி-பதினெண் வகையான, உயர் நிலை பெறீஇயர்-உயர்ந்த நிலைபெற்ற கணங்க ளென்பவர் கள், மீன் பூத்து அன்ன தோன்றலர்-நட்சத்திரங்கள் உதித் தாற்போன்ற தோற்றத்தை யுடையவர்களும், மீன் சேர்பு-கடலினிடத்து, வளி கிளர்ந்த அன்ன - காற்றெழுந்தாற் போன்ற, செலவினர்-நடையினை யுடையவர்களும், வளி யிடை தீ எழுந்து அன்ன திறலினர்-காற்றினிடத்து நெருப் பெழுந்தாற்போன்ற வன்மையுடையவர்களும், தீ பட உரும் இடிந்து அன்ன-தீயுண்டாக இடியிடித்தாற் போன்ற, குரலி

னர்-மின்தானியினை யுடையவர்களும் ஆகி, காண்வர-அழகுடன் கூடிவரவும், தடவிழுமிய பெறுமுறை-தங்கள் சிறந்த தொழில்களை (முன்போலப்) பெறுமுறைமையை, குறை உற மருங்கில் கொண்மார்-குறைவேண்டி நின்று பெருங்கூற்றினை கொள்ளும்படி, அந்தரம் கொட்பினர்-வானத்திற் சுழன்று வருவாராயுள்ளாரோடு, வந்து உடன் காண-மேற்கூறிய மூவருந் தன்னைவந்து காணும்வண்ணம், தாவு இல் கொள்கை-கெடாத அறக் கற்பினையுடைய, மடந்தையொடு-தெய்வயானை அம்மையுடன், சிலநாள் ஆவினன் குடியில்-சிலகாலம் ஆவினன் குடியில், அசைதலும் உரியன்-எழுந்தருளி இருத்தலையும் உரியன் (உடையன்), அதான்று-அதுவன்றி,

(வி-ரை) இவ்வொன்பது வரியும் ஒருதொடர். பதினெண் வகையான உயர்ந்த நிலைபெற்ற கணங்களென்பவர்கள், மூவரும் தேவரும் முருகவேளிடம் தங்குறை முடிப்பான் போதலையுணர்ந்து, தாமுந் தங் குறைபெறுதற்கு, உடன்போயினர். எவ்வாறென்னின்? நட்சத்திர முதித்தாற் போன்ற தோற்றத்தை யுடையவர்களும், கடலினிடத்துக் காற்றெழுந்தாற்போன்ற நடையினை யுடையவர்களும், காற்றினிடத்துத் தீயெழுந்தாற்போன்ற வன்மையுடையவர்களும், தீயுண்டாக விடியிடித்தாற்போன்ற தொனியுடையவர்களும், ஆகிப் பெரிதாகிய பிரமன் சாபத்தை யொழித்தலாகிய குறை முடிக்கவரும் தேவராருகிற் செவ்வேளிடத்துத் தாம்பெற விரும்பியவற்றைப் பெறும்பொருட்டு, வானத்திற் சுழன்று வருவாராயுள்ளாரோடு மேற்கூறிய மூவரும் வந்து, தன்னை

வந்து காணும்வண்ணம், கெடாத அறக் கற்பினையுடைய தெய்வயானை யம்மையுடன் சிலகாலம் திருவாவினன்குடியில் எழுந்தருளி யிருத்தலையும் உரியன், அதுவன்றி என்பதாம்.

பதினெண் கணங்களாவார்: "அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவராக ஆகாயவாசியர் யோகபூமியரெனப் பாகுபட்டன பதினெண் கணமே" என்னும் பிங்கலத்தா லுணர்க. 'மீன்' ஆகுபெயராய்க் கடலை யுணர்த்திற்று. அதுவன்றி, 'முனிவர் முற்புக வென்மொழி மேவலரின் னரம்புரை மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கப் புள்ளணி நீள்கொடிச் செல்வனும், மூவெயின் முருக்கிய மூரண்மிகு செல்வனும், யானையெருத்த மேறின திருக்கிளர் செல்வனும் ஆகிய பலர் புகழ மூவருந் தலைவராக பதினொரு மூவரோடு ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலை பெறீஇயர் அந்தரக் கொட்பினர் வந்துடன் காண மடந்தையொடு சின்னா ளாவினன்குடி யடைதலு முரியன்" என்று முடிக்க. 3

### மூன்றாவது

## திருவாவினன்குடி சிறப்பு

---

பலரும் புகழும்படியான் திரிமூர்த்திகளும் தலைவராக வேண்டி, அதற்குக் குறைபாடுண்டாக்கின பிரமனைப் பழைய நிலையில் நிறுத்தக்கருதி, திருமாலும், உருத்திரரும், தேவேந்திரனும், ஆதித்தரும், வசுக்களும், மருத்துவரும், பதினெண் கணங்களும் வந்து தன்னைக் காணும்படி திருவாவினன்குடியில் அமர்ந்துறைதலும் உரியன்.

---

* [திருவாவினன்குடி] இது பழநிமலை அடிவாரத்திலிருக்கின்றது. இலட்சுமிதேவி, காமதேனு, சூரியன், பூமிதேவி, இடி முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற ஸ்தலம்.

## நான்காவது

# திருவேரகம்

(திருவேரகத்து இருப்பன் என்ற பகுதி.)

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று

(ப-ரை) இருமூன்று எய்திய - ஆறாகப் பொருந்திய, இயல்பினின் வழாஅது - இலக்கணத்தில் தவறாது, இருவச் சுட்டிய-மாதா பிதாக்களை நன்கு மதிக்கின்ற, பல் வேறு தொல் குடி - பல வேறுவகைப்பட்ட பழங்குடிகளிற் பிறந்த,

அறுநான்கு இரட்டி-நாற்பத்தெட்டான, இளமை நல்யாண்டு-இளமைக்குரிய நல்யாண்டுகளை, ஆறினில் கழிப்பிய-வேதவழியிலே கழித்த, அறன் நவில் கொள்கை-தருமநூல் கூறும் இல்லறக் கோட்பாட்டினை யுடையாராய், மூன்று வகை குறித்த - மூன்றுவிதமாக வுரைக்கப்பெற்ற, முத்தீ செல்வத்து - திரியாக்கினியான சம்பத்தினையுடைய, ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண் ஞாண் - இருபத்தேழு இழைகளாகிய நுண்ணிய பூணு நூலணிந்த, இரு பிறப்பாளர்-(மாதுரு கருப்பத்திற்போல மந்திர கருப்பத்திலும் புகுந்து வந்தமையால்) இருபிறப்பினை ஒருபிறவியிலே யெய்திய, துவிசர் என்னும் பிராமணர்கள், புலரா காழகம் புலர உடீஇ-உலராதவாடையை உடலிலேயே யுலருமாறு உடுத்து, அருமறை ஆறெழுத்து அடங்கிய கேள்வி-அரிய வேதங் கூறும் சடாக்ஷர மந்திரத்தினை, நா இயல் மருங்கில்-நாக்குப் புடைபெயரும்வண்ணம், நவிலப்பாடி - தொனிவிளங்க வுச்சரித்து, விரை உறு-மணம் பொருந்திய, நறு மலர்-நல்ல பூக்களை, ஏந்தி-எடுத்தருச்சித்து, உச்சி கூப்பிய - தலைமீது குவிக்கப்பெற்ற, கையினர்-கைகளை யுடையாராய் பொழுதறிந்து, தற்புகழ்ந்து நுவல-காலமறிந்து தன்னைப் புகழ்ந்து துதிக்க, பெரிது உவந்து-மிகவும் மகிழ்ந்து, ஏரகத்து உறைதலும் உரியன்-திருவேரகத்தில் எழுந்தருளி யிருத்தலையும் உரியன், அதான்று-அதன்றி.

(வி-ரை) இப்பதின்மூன்று வரியும் ஒருதொடர். இருமூன்றெய்திய இயல்பு, ஓதல்-ஓதுவித்தல், வேட்டல்-வேட்

பிந்தல், ஈதல்-ஏற்றல் என்பனவாம். நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியநிலையில் நின்ற சிறந்த வந்தணரென்று குறிக்க, 'அறுநான் கிரட்டி யாண்டுநல் லிளமை ஆறினில்-கழிப்பிய' என்றார். பிரமசரியத்திற் கெல்லை கூறினாராதலின், 'அறன் நவில் கொள்கை' என்பதற்கு இல்லறக் கோட்பாடென்றும். அக்கினி ஒன்றாயினும் மூன்று குண்டங்களில் மூன்றுவித மான பெயருடன் விளங்குதலின் 'மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வம்' என்றும் கூறினார். மூன்றுவகையாவன: ஆகவனீயம், தெக்ஷணாக்கினி, காருகபத்தியம் என்பன. இவைகளி னிருப்பிடமான குண்டங்கள் சதுரமும் முக் கோணமும், அர்த்தசந்திர வடிவுமாக வுள்ளன என்ப. முத் தீச் செல்வத்தினையும் ஒன்பதுகொண்ட மூன்றுபுரி நுண் ஞாணினையும் புலராக் காழகத்தினையும் உச்சி கூப்பிய கையினையும் உடைய இருபிறப்பாளர் தற்புகழ்ந்து 'ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வியை, நாவியன் மருங்கில் நவிலப் பாடி, விரையுறு நறுமலரேந்தி நுவலப் பெரிதுவந்து' ஏரகத் துறைதலு முரியனென்றும் கொண்டு முடிக்கலாம், 'ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி' என்பதற்கு, ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற் கரிய மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை என்று பொருள் கூறுதலுங் கூடும். இது முன்னையோர் முறை.

ஆருகப் பொருந்திய விலக்கணத்திற் றவறாது மாதா பிதாக்களை நன்கு மதிக்கின்ற பல வேறுவகைப்பட்ட பழங் குடிகளிற் பிறந்த நாற்பத்தெட்டான் இளமைக்குரிய நல்ல

யாண்டுகளைப் பிரமசரியத்திற் போக்கி, வேதவழியிலேகழித்த தர்மநூல்கூறும் இல்லறக் கோட்பாட்டினராய் மூன்றுவிதமாக வுரைக்கப்பெற்ற திரியாக்கினியான சம்பத்தினையுடைய இரு பத்தே ழிழைகளாலாகிய நுண்ணிய பூணூலணிந்து மாதுரு கருப்பத்திற்போல் மந்திர கர்ப்பத்திலும் புகுந்து வந்தமை யால் இருபிறப்பினை யொருபிறவியிலேயே பெற்ற துவிச ரென்னும் பிராமணர்கள் காலமறிந்து துதிக்க, உலராத வாடையை யுடலிலேயே யுலருமாறு உடுத்து அரிய வேதங் கூறுஞ் சடாக்ஷர மந்திரத்தினை நாக்குப் புடைபெயரும்வண் ணம் தொனிவிளங்க வுச்சரித்து, மணம்பொருந்திய நல்ல பூக்களையெடுத் தருச்சித்து அருச்சித்துத் தலைமீது குவிக்கப் பெற்ற கைகளையுடையாராய், தன்னைப் புகழ்ந்து துதிக்க மிகவும் மகிழ்ந்து திருவேரகத்தி லெழுந்தருளி யிருத்தலையும் உரியன் அதுவன்றி என்பதாம்.

இலக்கணத்தின் வழுவாத குடியிற் பிறந்த கழிப்பிய கோட்பாட்டினையும், செல்வத்தினையும் உடைய இருபிறப் பாளர் நுவன்று உடுத்து, துதித்து, உச்சரித்து, அருச்சித்து நுவல மகிழ்ந்து அசைதலும் உரியன் என்று முடிக்க. (4)

நான்காவது

## திருவேரகச் சிறப்பு

இருபிறப்பாளர் நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்து புலர உடுத்து, மணமிகுந்த நறுமலரை யேந்திக் கூப்பிய கையராய் நவிலப்பாடி, வழிபடுகால மறிந்து தோத்திரங்களைக் கூற; அதற்குப் பெரிது மகிழ்ந்து திருவேரகத்து அமர்ந்துறைதலு முரியன்.

THE TIRUVAVADUTHURAI ... HIGH SCHOOL

---

[திருவேரகம்] இது கும்பகோணத்துக்கு 2-நாழிகை வழி தூரத்தி லிருக்கின்றது. சாமிமலை என்னும் பெயர் பெற்று வழங்கி வருகிறது.

பிரமதேவன் சிவதரிசனஞ் செய்துவரும் மார்க்கத்தில் ஸ்ரீ பாலசுப்பிரமணியக் கடவுளைக் கண்டு வந்தனஞ் செய்யா தேக, அவர் பிரமனை யழைத்துப் பிரணவத்திற்குப் பொருள் கேட்க, அவன் விடை கூறாமைபற்றிச் சிரசிற் குட்டிச் சிறை யிட்டுத் தாமே சிருட்டித்தொழிலை நடத்த, சிவபெருமான் அங்குத் தோன்றிப் பிரமன் சிறையை நீக்கச்சொல்லியும் விடாது, பிறகு விடுத்துச் சிவபிரானுக்குப் பிரணவத்தை யுபதேசித்த ஸ்தலம்.

## ஐந்தாவது

# குன்றுதோறாடல்

(குன்றுகள்தோறும் விளையாடியிருப்பன் என்ற பகுதி)

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை யணைத்த கூந்தன்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
றகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத்தலைத் தந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே
யதா அன்று.

(ப-ரை) பைங்கொடி நறைக்காய் - பச்சிலைக்கொடியால் சாதிக்காயை, வேலன் இடை இடுபு - வேலன் நடுவேவைத்து, அம் பொதி புட்டில் விரைஇ - அழகிய தக்கோலக் காயைக் கலந்து, குளவியொடு வெண் கூதாளம் - வனமல்லிகையுடன் வெண்டாளியையுங் கலந்து, தொடுத்த கண்ணியுடன் - கட்டிய மாலையுடையனாய், நறு சாந்து - மணமுள்ள சந்தனத்தினை, அணிந்த - பூசின, கேழ் கிளர் - நிறம் விளங்குகின்ற, மார்பின் - மார்பினையுடைய வேலன், கொடும் தொழில் வல் வில் - வளைத்தலாகிய தொழிலால் நாணொடு வன்மையெய்திய வில்லினால், கொலைஇய கானவர் - கொலைபுரிந்த வேடர், நீடு அமை விளைந்த-

நெடிய மூங்கிற் குழலிற் செய்தலாலுண்டான, தேக்கள் தேறல் - தேனாலாகிய மதுவினை, குன்றகம் சிறுகுடி - மலையினிடத்துள்ள சிற்றூரிலே வாழ்கின்ற, கிளையுடன் மகிழ்ந்து- சுற்றத்துடன் குடித்துக் களிப்பேறி, தொண்டகம் சிறுபறை- குறிஞ்சிப்பறையான தொண்டகத்தினது தாளத்திற் கிசைய, குரவை அயர-குரவைக் கூத்தாட, விரல் உளர்ப்ப அவிழ்ந்த- விரலால் அலர்த்துதலால் விரிந்த, வேறுபடு நறுங்கான் கண்ணி - மாறுபட்ட நறிய மணத்தினையுடைய மாலையினையும், குண்டு சுனை பூத்த - ஆழமான சுனையி லலர்ந்த, வண்டு படு கண்ணி - வண்டு மொய்க்கின்ற பூவாலான மாலையினையும், இணைத்த கோதை-இருதலையு மொன்றுபடமுடிந்த மாலையினை யும், அணைத்த கூந்தல்-தரித்த கூந்தலினையும், முடித்த குல்லை- கஞ்சாங்கோரையினையும், இலையுடை நறும்பூ-இலையொடுகூடின பூக்களையும், செங்கால் மரா அத்த - சிவந்த வடிப்புறத்தினை யுடைய கடம்பினது, வால் இணர்-வெள்ளிய கொத்துகளை இடை இடுபு-இடையே இட்டு, சுரும்பு உண தொடுத்த-வண்டு தேனுண்ணுமாறு கட்டின, பெரும் தண் மா தழை-பெரிய தண்ணிய மாவினது தழையை, திருந்து காழ்-நல்ல வட மணி யணிந்த, அல்குல் திளைப்ப உடீஇ-அல்குலிடத் தசைய வுடுத்து, மயில் கண்டு அன்ன-சாயலால் மயிலைக் கண்டாற் போலும், மடம் நடை மகளிரொடு - மடப்பம் பொருந்திய பெண்களுடனே, செய்யன்-செய்யனும், சிவந்த ஆடையன்- செவ்வாடையனும், செவ்வரை செயலை தண் தளிர்-சிவந்த வரையினையுடைய அசோகினது குளிர்ந்த தளிர்கள், துயல் வரும் காதினன் - அசைகின்ற காதினை யுடையவனும், கச்சி

னன் - கச்சையிடையி லிறுக்கியவனும், கழலினன் - கழலைக் காலிலணிந்தவனும், செச்சைக் கண்ணியன்-வெட்சிமாலையைச் சூடினவனும், குழலன்-குழலூதுபவனும், கோட்டன்-கொம் பூதுபவனும், குறும் பல் இயத்தன் - சிறிய பல்லியங்களை வாசிப்பவனும், தகரன்-கடாவை ஊர்தியாகக் கொள்பவனும், மஞ்ஞையன் - மயிலை ஏறுபவனும், புகர் இல் சேவலங் கொடி யன்-குற்றமில்லாத கோழிக்கொடியை யுடையவனும், நெடி யன்-நெடிய உருவினனும், தொடி அணி தோளன்-வாகுவலய மணிந்த தோளினனும் ஆகி, நரம்பு ஆர்த்து அன்ன - யாழ் நரம்பு ஆரவாரித்தா லொத்த, இன் குரல் தொகுதியொடு- இனிய குரலினையுடைய பாடுமகளிருடனும், குறும் பொறி கொண்ட-சிறிய புள்ளிகளமைந்த, நறும் தண் சாயல்-மண முங் குளிர்ச்சியும் நிறமுமுடைய, மருங்கில் கட்டிய - இடையி லணிந்த, நிலன் நேர்பு துகிலினன்-தொங்கவிடுதலால் பூமி யளவுந் தாழ்ந்த ஆடையுடனும், மெல் தோள் பல் பிணை- மிருதுவான தோள்களையுடைய பெண்மானை நிகர்த்த பல வாகிய பெண்களை, முழவு உறழ் தடம் கையின் - மத்தளம் போற் பருத்த விசாலமான கைகளினால், தழீஇ இயல ஏந்தி- தழுவிப் பொருந்தும்படி ஏற்றுக்கொண்டு, குன்றுதோறும் ஆடலும் - குன்றுகள்தோறும் விளையாடுதலும், நின்றதன் பண்பு-தனக்கு நிலையான குணமாகும், அதா அன்று-அது வன்றி.

(வி-ரை) இவ் விருபத்தெட்டு வரியும் ஒரு தொடர். பச்சிலைக்கொடியால் சாதிக்காயை இடையிடையே வைத்து,

அழகிய தக்கோலக்காயை யுடன்கலந்து, வனமல்லிகையுடன் வெண்டாளியையுங் கலந்து கட்டிய மாலையுடையனும் மண முள்ள நல்ல சந்தனத்தினைப் பூசினநிறம் விளங்குகின்ற மார் பினையுடைய வேலன் வளைத்தலாகிய தொழிலினால் நாணொடு வன்மையெய்திய வில்லினால் கொலைபுரிந்த வேடர் நீண்ட மூங்கிற்குழலிற் செய்தலாலுண்டான தேனாலாகிய மதுவினை மலையினிடத்துள்ள சிற்றூரிலே வாழ்கின்ற சுற்றத்துடன் குடித்துக் களிப்பேறி, குறிஞ்சிப்பறையான தொண்டகத்தி னது தாளத்திற் கிசைய குரவைக் கூத்தாட விரலா லலர்த்து தலால் விரிந்த மாறுபட்ட இனிய மணத்தினையுடைய மாலை யினையும், ஆழமான சுனையி லலர்ந்த பூவாற்செய்த மாலை யினையும், இருதலையு மொன்றுபட முடிந்த மாலையினையும், தரித்த கூந்தலினையும், கஞ்சாங்கோரையினையும், இலையொடு கூடின பூக்களையும், சிவந்த வடிப்புறத்தினை யுடைய கடப்பி னது வெள்ளிய கொத்துகளை இடையே இட்டு, வண்டு தேனுண்ணுமாறு கட்டின தண்ணிய பாவினது தழையை, நல்ல மணிவடமணிந்த அல்குலிடத் தசைய உடுத்துச் சாயலால் மயிலைக் கண்டாற்போலும், மடப்பம் பொருந்திய பெண்களுடனே- செய்யனும் செவ்வாடையனும் சிவந்த வரையினையுடைய வசோகினது குளிர்ந்த தளிர்கள் அசை கின்ற காதினையுடையவனும், கச்சை யிடையிலிறுக்கிய வனும், கழலைக் காலி லணிந்தவனும், வெட்சிமாலையைச் சூடினவனும், குழலூதுபவனும், கொம்பூதுபவனும், சிறிய பல்லியங்களை வாசிப்பவனும், கடாவை யேறுபவனும், மயிலை யேறுபவனும், குற்றமில்லாத கோழிக்கொடியை யுடைய

வனும், நெடிய வுருவினனும், வாகுவலயமணிந்த தோளின னும் ஆகி, யாழ்நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய குரலினை யுடைய பூகளிருடனும், சிறிய புள்ளிகளமைந்த மணமுங் குளிர்ச்சியும் நிறமுமுடைய இடையிலணிந்த தொங்கவிடுத லால் பூமியளவுந் தாழ்ந்த ஆடையுடையவனும், மெல்லிய தோள்களையுடைய பலவாகிய பெண்மான்களையொத்த குரவை யாடு மகளிரை, முழவினை யொத்த பெருமையுடைய கையி னால் அவர்கள் கையினைத் தழீஇ யெடுத்துக்கொண்டு குன்று தோறும் விளையாடுதலும் தனக்கு நிலையான குணமாகும். அதுவன்றி என்பதாம்.

கானவர் தேறலுண்டு மகிழ்ந்து கிளையுடன் குரவை யயர வேலன் தொடுத்த கண்ணியனுய் உடீஇ மகளிரொடு வந்தியாடலும் நின்றதன் பண்பு என முடிக்க. (5)

ஐந்தாவது

## குன்றுதோறாடல் சிறப்பு

கானவர் குறவைக் கூத்தாட, அவர் மகளிர் குறவை யாடியசைய, அவற்றைக் கண்டு ஸ்ரீமுருகக்கடவுள் கொடுத்த கண்ணியைச் சூடி, சிவந்த ஆடையை யுடுத்து, அசோகின் குளிர்ந்த தளிர்போன்ற காதைப் பொருந்தி கச்சுக் கட்டி, கழலை யணிந்து, வெட்சிமாலை சூடி, குழலை ஊதி, கொம்பைக் குறித்து, பல்லியங்களை எழுப்பி, மயிலேறி, கோழிக் கொடியை யுயர்த்து, நெடுக வளர்ந்து, தொடியணிந்து, துகிலை யுடுத்து, தங் கையினால் அவர்கள் கையினைத் தழுவி ஏந்தி, முதற்கை கொடுத்து, பாடு மகளிருடன் மலைகள்தோறுஞ் சென்று விளையாடுதலும் தனக்கு நிலைநின்ற குணமாம்.

---

[குன்றுதோறாடல்] மலைநாட்டுத் தெய்வம் ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளாதலால் இங்ஙனம் கூறினர்.

இதற்குப் பிரமாணம்:

காடாகு முல்லைக் கழிநெய்த லாகுங் கல்லாங் குறிஞ்சி
நாடா மருதம் நடலைவெம் பாலையந் நாட்டுத் தெய்வம்
கோடா கான்வரு ணன்குகன் இந்திரன் கூறு துர்க்கை
மாடாயர் மீன்புல்லர் குன்றவர் நாடர் மறவருமே.

என வருவதாற் காண்க.

## ஆறாவது

# பழமுதிர்சோலை

(பழமுதிர்சோலையில் இருப்பன் என்ற பகுதி)

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினும்

(ப-ரை) சிறு தினை மலரொடு விரைஇ-சிறிய தினையரிசியை பூவொடு கலந்து-பரப்பரிசியாக வைத்து, மறி அறுத்து-கடாவையறுத்து, வாரணக் கொடி ஒடு-கோழிக் கொடியுடனே, வயின்பட நிறீஇ-தன்னை யிடந்தோறு நிறுத்தி, ஊர் ஊர் கொண்ட-ஊர்கள் தோறும் ஊர்கள் தோறும் செய்கின்ற, சீர் கெழு விழவினும்-சிறப்பமைந்த திருவிழாக்களிலும், ஆர்வலர் ஏத்த-அன்பர் துதிக்க, மேவரு நிலையினும்-அத்துதியில் தன்மனம் பொருந்திய இடங்களிலும், வேலன் தைஇய-தேவராளன் செய்த, வெறி

அயர் களனும்-வெறியாட்டு நடக்கும் இடத்தினும், காடும்-வனத்திலும், காவும்-சோலையிலும், கவின் பெறு-அழகு வாய்ந்த, துருத்தியும் - ஆற்றிடைக்குறையிலும், ஆறும் - ஆற்றங்கரைகளிலும், குளனும் - குளத்தின் கரைகளினும், வேறு பல் வைப்பும்-இவையன்றி யுள்ள பல இடங்களிலும், சதுக்கமும்-சதுக்கங்களிலும், சந்தியும்-சந்திகளிலும், புது பூ கடம்பும்-புதிய மலர்களையுடைய கடம்பிலும், மன்றமும்-மன்றத்திலும், பொதியினும்-அம்பலத்திலும், கந்து உடை நிலையினும் - பந்தை வெளிக்கல்லென்னும் ஆ தீண்டு குற்றியினும்.

(வி-ரை) இவ்வொன்பது வரியும் ஒரு தொடர். சதுக்கம்-நாற்சந்தி, சந்தி, முச்சந்தி, அஞ்சந்தி. மன்றம்-ஊர்க்கு நடுவா யெல்லாமிருக்கு மரத்தடி; அதாவது அரசடிமேடை, ஆலடிமேடையாகிய அம்பலம்; பொதுக்கட்டிடம்; இக்காலத்துச் சத்திரமென்ப. சிறுதினை மலரொடு விரைஇ - குறிஞ்சி நிலத்துள்ளார்க்குத் தினையுரியதாதலின் இதனைக் கூறினர்.

சிறிய தினையரிசியைப் பூவொடு கலந்து, பரப்பரிசியாக வைத்து, கடாவறுத்து, கோழிக்கொடியுடனே தன்னையிடந்தோறுநிறுத்தி, ஊர்கள்தோறும் ஊர்கள்தோறும் செய்கின்ற சிறப்பமைந்த திருவிழாக்களிலும், அன்பர் துதிக்க, அத்துதியில் தன்மனம் பொருந்திய இடங்களினும், தேவராளன் வெறியாட்டு நடக்கும் இடத்திலும், வனத்திலும், சோலையிலும், அழகுவாய்ந்த ஆற்றிடைக் குறையிலும், ஆற்றங்கரைகளிலும், குளத்தின் கரைகளினும், இவையன்றி யுற்ற

பல்விடங்களினும், சதுக்கங்களினும், சந்திகளினும், புதிய மலர்களையுடைய கடம்பினும், மன்றத்தினும், அம்பலத்தினும், மந்தை வெளிக்கல்லென்னும் ஆதீண்டு குற்றியினும் என்பதாம்.

மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யையுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுடை யுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக

ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே

(ப-ரை) மாண் தலை கொடியொடு அமைவர மண்ணி-மாட்சிமையான தலையினையுடைய கோழிக் கொடியாலே அலங்கரித்து, நெய்யொடு ஐயவி அப்பி-நெய்யிற் குழைத்த சிறு வெண்கடுகைச் சாத்தி, ஐது உரைத்து-அவனது அலங்காரங்களை வருணித்துத் துதித்து, குடந்தம் பட்டு-வணங்கி, கொழு மலர் சிதறி-நல்ல பூக்களை விடுபூவாகச் சிதறி, முரண் கொள் உருவின்-மாறுபட்ட உருவத்தினையுடைய, இரண்டு உடை உடீஇ-இரண்டாடைகளை உடுத்து, செந்நூல் யாத்து-செந்நிறநூலால் கையிலே காப்புக்கட்டி, வெண் பொரி சிதறி-வெள்ளிய பொரிகளை இறைத்து, மதவலி நிலைஇய-மிக்க வலிமை பொருந்திய, மாத் தாள் கொழுவிடை குருதி ஒடு-தடித்த காலினையுடைய கொழுத்த ஆண்யாட்டினது சோரியுடன், தூ வெள்ளரிசி விரைஇ-தூய வெள்ளிய அரிசியைக் கலந்து, சில் பலி செய்து-சிறிய பலியாக இட்டு, பல் பிரப்பு இரீஇ-கொள்கல்மொன்றிற் குறுணியாகப் பல்லுணவு பெய்து பாலிப்பது பிரப்பென்றமையால் பெறப்படுகின்ற பல கூடைகளிற் பலவகையான நிவேத்தியங்களைக் குறுணி குறுணி அளவாக வைத்து, சிறு பசு மஞ்சளொடு-சிறிய பசிய மஞ்சளரைத்த விழுதுடனே, நறு விரை தெளித்து-நல்ல மண

முள்ள கோட்டஞ் சந்தனமாகியவற்றின் தூள்களை எங்குந் தெளித்து, பெருந்தண் கண் வீரமாலை - பெரிய தண்ணிய செவ்வலரி மாலையும், நறும் தண் மாலை-மற்றைய குளிர்ந்த மாலைகளையும், துணையுற அறுத்து தூங்க நாற்றி - சமானமாக அறுத்துத்தொங்கக்கட்டி, நளிமலை சிலம்பின்-நெருங்கிய மலைப் பக்கத்திலுள்ள, நல் நகர் வாழ்த்தி-நல்ல சிற்றூர்களைப் பசியும் பிணியும் பகையும் ஒழிக, மழையுந் திருவும் ஆயுளும் மிகுக என்று கூறிவாழ்த்தி, நறும் புகை எடுத்து-நல்ல தூபங்காட்டி, (தீபங்காட்டி) குறிஞ்சி பாடி-குறிஞ்சியெனும் பண்ணைப்பாடி, இமிழ் இசை அருவி ஒடு-முழங்குகின்ற அருவிகளுடனே, இன் இயம் கறங்க-இனிய இயங்கள் முழங்க, உருவப் பல் பூ தூஉய் - சிவந்த வுருவினவான பலவகைப் பூக்களை யிறைத்து, வெருவர குருதி செந்தினை பரப்பி-கண்டார்க்கு அச்சந்தோன்ற குருதியொடு கலந்த சிவந்த தினையையும் பரப்பி, குறமகள்-தேவராட்டி, முருகு இயம் நிறுத்து-முருக வேளுக்குப் பிரியமான வாச்சியங்களை வாசிக்கச்செய்து, முரணினர் உட்க-பகைவர் அஞ்ச, முருகு ஆற்றுப் படுத்த-முருக வேளை வருமாறு செய்த, உருகெழு வியன் நகர்-காவல்முதலிய வற்றால் அச்சந் தருகின்ற பெரிய நகரினிடத்து, ஆடு களம் சிலம்பப் பாடி - வெறியாடுகளம் ஆரவாரமுடையதாகத் தக்கப் பாடல்களைப் பாடி, கோடு பல உடன் வாய்வைத்து-பலவான மான் கொம்புகளை ஒருசேர வாயில்வைத்து ஊதி, கொடு மணி இயக்கி - பேரோசையையுடைய மணிகளை யசைத்து, ஒடா பூட்கை-பகைவருக்குப் புறங்கொடாத அவனது யானை வாகனத்தையும், பிணிமுகம்-மயில்வாகனத்தையும், வாழ்த்தி-

வாழ்த்துதல் செய்து, வேண்டுநர் - இன்னது வேண்டுமென்பவர், வேண்டி யாங்கு எய்தினர்-விரும்பினவற்றைப் பெற்றோராகி, வழிபட-வழிபாடுசெய்ய, ஆண்டாண்டு உறைதலும் - அவ்வவ் விடங்களிலே எழுந்தருளி யிருத்தலும் உரியன், இது அறிந்தவாறே-இது யானறிந்தவண்ணம்.

(வி-ரை) இவ் விருபத்துமூன்று வரியும் ஒரு தொடர். மாண்டலைக்கொடி யென்னுது ஆண்டலைக்கொடி என்னினும் இழுக்காது. ஆண்டலை-கோழி, இனி ஆண்மகன் தலையெழுதிய கோழியுடற்கொடி என்றும் கூறுப. ஐது உரைத்தி-மந்திரத்தை அழகாக வுச்சரித்து என்று பொருள் கூறுவார். இவர்கள் மந்திரமில்லாதா ரென்பதனை மறந்தனர்போலும். குடந்தம் படுதலை - குடவென்பது வளைவாதலின் நின்று வளைந்து வணங்கியென்றும், இனிக் குடந்தம் படுதலானது "நால்விரன் முடக்கிப் பெருவிர னிறுத்தி நெஞ்சிடை வைப்பது குடந்தமாகும்" என்பதால் இவ்வாறு வணங்குதலுமாம். முரண்கொ ளுருவி னிரண்டுடை - உள்ளாடையும் அதன்மீது சிறிதாகக்கட்டிய மேலாடையுமென்க. கரப்பு-ரக்ஷாபந்தனம். சில் பலி யிடுதல் - பரிவாக தேவர்கட்குக் கொடுக்கும் நிவேதனத்தை. நறுவிரை - கதம்பப் பொடியுமாம். பூசையாதிகளில் தமிழ்நாட்டில் தூக்குமாலை யுபயோக மின்றுளது காண்க. அவை யோரளவினவாதலின் 'அறுத்து' என்றார். 'துணையற அறுத்து தாங்க நாற்றி' என்று பாடமாயின், அறுத்து - தலையொக்க அறுத்து, துணை அற-ஒப்பில்லாதவண்ணம், தாங்க நாற்றி - அசையத் தூக்கி என்றுரைக்க. முரணினர் - பகைவர்; ஈண்டு பகைவரென்றது நாத்திகர்.

மாட்சிமையான தலையினையுடைய கோழிக்கொடியாலே அலங்கரித்து, நெய்யிற்குழைந்த சிறு வெண்கடுகைச்சாற்றி, அவனது அலங்காரங்களை வருணித்துத் துதித்து வணங்கி, நல்ல பூக்களை விடுபூவாகச் சிதறி, மாறுபட்ட உருவத்தினையுடைய இரண்டாடைகளை யுடுத்துச் செந்நிற நூலால் கையிலே காப்புக்கட்டி, வெள்ளிய பொரிகளை யிறைத்து, மிக்க வன்மைபொருந்திய தடித்த காலினையுடைய கொழுத்த ஆண்யாட்டினது சோரியுடன் தூய வெள்ளிய அரிசியைக் கலந்து சிறிய பலியாகவிட்டுப் பல கூடைகளிற் பலவகையான நிவேத்தியங்களைக் குறுணி குறுணி அளவாக வைத்துச் சிறிய பசிய மஞ்சளரைத்த விழுதுடனே நல்ல மணமுள்ள கோட்டஞ் சந்தனமாதியவற்றின் தூள்களை எங்குந்தெளித்து, பெரிய தண்ணிய செவ்வலரிமாலையையும், மற்றைய குளிர்ந்த மாலைகளையுஞ் சமானமாக வறுத்துத் தொங்கக்கட்டி, நெருங்கிய மலைப்பக்கத்திலுள்ள நல்ல சிற்றூர்களைப் பசியும் பிணியும் பகையும் ஒழிக, மழையுந் திருவு மாயுளு மிகுக வென்று கூறிவாழ்த்தி, நல்ல தூபங்காட்டித் தீபங்காட்டி, குறிஞ்சிப்பண்ணைப்பாடி முழங்குகின்ற வருவிகளுடனே இனிய இன்னியங்கள் முழங்கச் சிவந்த வுருவினையான பல வகைப் பூக்களையிறைத்துக் கண்டார்க்கு அச்சந்தோன்ற குருதியொடுகலந்த செந்தினையைப் பரப்பித் தேவராட்டி, முருகவேளுக்குப் பிரியமான வாச்சியங்களை வாசிக்கச்செய்து, பகைவர் அஞ்ச, முருகவேளை வருமாறு செய்த காவல் முதலியவற்றால் அச்சந் தருகின்ற பெரிய நகரிடத்து, வெறியாடுகளம் ஆரவாரமுடையதாகத் தக்க பாடல்களைப் பாடிப்

பலவான மான் கொம்புகளை யொருசேர வாயில்வைத்தூ ஊதிப் பேரோசையையுடைய மணிகளையசையச்செய்து, பகை வருங்குப் புறங்கொடாத வவனது யானைவாகனத்தையும், மயில்வாகனத்தையும் வாழ்த்துதல் செய்து, இன்னது வேண்டுமென்பவர் விரும்பினவற்றைப் பெற்றாராகி, வழிபாடு செய்ய அவ்வவ்விடங்களிலே எழுந்தருளி இருத்தலும் உரியன், இது யானறிந்த வண்ணம். கொடிகட்டி அப்பி உரைத்து வழிபட்டு, தூவி உடீஇயாத்து இறைத்து இட்கு இரீஇ தெளித்து, நாற்றி வாழ்த்தி, புகை எடுத்துப்பாடி, சுறங்க தூஉய் பரப்பி குறமகள் ஆற்றுப்படுத்த நகரில் என்பதாம்.

பாடி ஊதி இயக்கிலாழ்த்தி வழிபட, உறைதலு முரியன் என முடிக்க.

*

ஆண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி

வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்து மிசைபே ராளா
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரைநு ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையில்

(ப-ரை) ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக-யானுரைத்த அந்தந்த விடங்களிலாகட்டும் அல்லது பிறவிடங்களி லாகட்டும், காண் தக முந்து நீ கண்டுழி-முதலில் நீ யவனைக் கண்டவுடனே அவன் நின்னைப் பார்ப்பதற்குத் தக்கவண்ணம், முகன் அமர்ந்து-எதிரில் நின்று விருப்பத்தோடு, ஏத்தி-பொதுவாகத் துதித்து, கை தொழூஉ பரவி-கையாற்றொழுது வாழ்த்தி, கால் உற வணங்கி-கால்களிற் பணிந்து, நெடும் பெரும் சிமயத்து-நெடிய பெரிய இமயமலையில், நீலம் பைஞ் சுனை-நீலநிறமான பசிய சுனையானது, ஐவருள் ஒருவன்-ஐம்பூதவதி தெய்வங்களுள் ஒருவனான அக்கினிதேவன், அம் கை ஏற்ப-அழகிய கையினின்றுந் தன்னிடத்தே ஏற்க, அறுவர் பயந்த ஆறமர் செல்வ-பாலூட்டவந்த கிருத்திகை மாதர் அறுவர் நிமித்தம் ஆறுருவமாகி யவர்பாலுண்டு, அவராற் பெறப்பெற்றவனென்ற திருநாமந்தாங்கி, கங்கை யாற்றுநீர் நிறைந்த சரவணப் பொய்கையில் எழுந்தருளி யிருக்குஞ் செல்வனே! ஆல் கெழு கடவுள் புதல்வ-கல்லால நிழலி லெழுந்தருளியிருக்குஞ் சிவகுமாரனே! மால்வரை மலை மகள் மகனே-பெரிய மூங்கில்களையுடைய விமயமலையின் மகளான உமாதேவியின் புதல்வனே! மாற்றோர் கூற்றே-பகைவருக்கு யமனே! வெற்றிவேல் போர் கொற்றவை சிறுவ-மகிடாசுரனைப் போரில்வென்று வெற்றியடைந்த துர்க்காதேவியின் மகனே! என்றும், இழை யணி சிறப்பில் பழையோள் குழவி-ஆபரணங்க ளணிந்த சிறப்பினையுடைய புராதனியென்ற பெயருடைய தேவியின் மகனே! வானோர் வணங்கு வில் தானை தலைவ-வளைந்த வில்லைத்தாங்கிய தேவ

சேனைக் கதிபதியே! மாலை மார்ப-பூமாலையணிந்த மார்பனே! நூல் அறி புலவ-நூலெல்லா மறிந்த புலவனே! செருவில் ஒருவ - இணையற்ற போராளனே! பொரு விறல் மள்ள-பொருதலில் வெற்றியினையுடைய வீரனே! அந்தணர் வெறுக்கை-மறையவர் செல்வமே! அறிந்தோர் சொல் மலை-விவேகிகளாற் புகழப்படுகின்ற சொல்லாகிய மலையையுடையவனே! மங்கையர் கணவ-தெய்வயானையம்மை, வள்ளியம்மை யென்பாரின் நாயகனே! மைந்தர் ஏறே-வீரசிங்கமே! வேல் கெழு-வேலாயுதம் பொருந்தி யிருக்கின்ற, தடம் கை சால் பெரும் செல்வ-பெரிய கையினையுடைய சிறந்த தலைவனே! குன்றம் கொன்ற-கிரவுஞ்சமலையை யழித்த, குன்றா கொற்றத்து-கெடாத வெற்றியினையுடைய, கிழவ-தலைவனே! விண் பொரு நெடுவரை-வானமளாவிய நீண்ட மலைகளையும் அவை சார்ந்த இடத்தையுமுடைய, குறிஞ்சி கிழவ - குறிஞ்சித் தலைவனே! பலர் புகழ் நன்மொழி புலவர் ஏறே-பலராலும் புகழப்படுகின்ற நல்லிசைப் புலமையினை யுடையாருள் ஏறு போல்பவனே! அரும் பெறல் மரபில் - பெறுதற்கரிய தந்தை தாயார் மரபினுல், பெரும் பெயர் முருக-மிக்க கீர்த்திவாய்ந்த முருகனே! நசையினர்க் கார்த்தும் இசை பேராள-விரும்பி வந்தவர்களின் அபீஷ்டத்தைக் கொடுக்கின்ற கீர்த்தியை யாளுமவனே! அலந்தோர்க்கு அளிக்கும் பொலம் பூண் சேஎய்-வேண்டுமவை கிடையாது வருந்தின ஏழைகட்கு அவர்கள் விரும்பினவற்றைக் கொடுக்கின்ற பொன்னணி யணிந்த சேயே! மண்டு அமர் கடந்த வென்று ஆடு நின் அகலத்து - நெருங்கிய போரினிடத்து வென்றுண்டான

(புகழ்மைந்த) மார்பினிடத்து, பொலம் பூண் சேஎய்-பொன் அணி யணிந்த சேயே! பரிசிலர் தாங்கும்-தங்கல்வி காட்டி வெகுமதிபெற வருகின்றவர்களை வேண்டுவன கொடுத்துக் காக்கின்ற, உருகெழு நெடுவேள் - தோற்றமிக்க நெடு வேளே! பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்-பிறப்பு வகையாலும் செய்கைவகையாலும் பெரியவர்களாயுள்ள முனி வருந் தேவருந் துதிக்கின்ற பெரிய பெயரினையுடைய கடவுளே! சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி-போர்புரிவதில் மிக்க ஆற்றலால் சூரனது வங்கிசத்தினைக் கெடுத்த மதவலியென்னும் பெயரோய், போர்மிகு பொருந-போர்த்தொழிலிற் சிறந்த திண்மை யுடையவரே! குரிசில்-தலைவனே! என யான் அறி அளவையின் ஆனது பல ஏத்தி-என்று யானறிந்து நினக்குக் கூறியவளவில் நில்லாது நீயும் இன்னம் பல கூறித் துதித்து, நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின் தன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கு அரிதாகையினாலே, நின் அடி உள்ளி வந்தனன்-நினது பாதங்களைக் கருதி வந்தேன், நின்னொடு புரைநர் இல்லா புலமையோய்-நினக்கிணை யெவரு மில்லாத மெஞ்ஞானமுடையோய்! எனக் குறித்தது மொழியா அளவையில்-என்று நீ கருதி யதனை யுரைக்கும்பொழுது.

(வி-ரை) இம் முப்பத்திரண்டு வரியும் ஒரு தொடர். யானுரைத்த அவ்வவ்விடங்களிலாகட்டும் அல்லது பிறவிடங் களிலாகட்டும், முதலில் நீயவனைக் கண்டவுடனே, அவன் நின்னைப் பார்ப்பதற்குத் தக்கவண்ணம் எதிரில் நின்று, பொதுவாக விருப்பத்தோடு துதித்துக் கையாற்றொழுது

வாழ்த்தி, கால்களிற் பணிந்து, நெடிய பெரிய இமயமலையில் நீலநிறமான பசிய சுனை ஐம்பூதவதி தெய்வங்களுள் ஒருவனான அக்கினிதேவன் அகங்கையால் வருத்தத்துடன் தாங்கித் தன்னிடங் கொடுக்கத் திருவவதாரஞ் செய்து, பாலூட்டவந்த கிருத்திகைமாதரறுவர்நிமித்தம் ஆறுருவமாகி யவர்பாலுண்டு, அவரால் பெறப்பெற்றவனென்ற திருநாமந் தாங்கி, கங்கையாற்று நீர் நிறைந்த சரவணப் பொய்கையி லெழுந்தருளியிருக்கும் இறைவனே என்றும், கல்லால நிழலில் எழுந்தருளியிருக்குஞ் சிவகுமாரனே என்றும், பெரிய மூங்கில்களையுடைய இமயமலையின் மகளான உமாதேவியின் புதல்வனே என்றும், பகைவருக்கு யமனே என்றும், ஆபரணங்களை யணிந்த சிறப்பினையுடைய புராதனி யென்ற பெயருடைய தேவியின் மகனே என்றும், வளைந்த வில்லினராகிய தேவர்களாகிய சேனைக்கதிபதியே என்றும், மாலைமார்பனே, நூலறிபுலவனே, செருவி லொருவனே, பொருதலில் வெற்றியினையுடைய வீரனே, மறையவர் செல்வமே, விவேகிகளாற் புகழப்படுகின்ற சொல்லாகிய மலையையுடையவனென்றும், தெய்வயானையம்மை வள்ளி யம்மை யென்பாரின் நாயகனே யென்றும், வீரசிங்கமே யென்றும், வேலாயுதம் பொருந்தியிருக்கின்ற பெரியகையினை யுடைய சிறந்த தலைவனே என்றும், கிரவுஞ்சமலையை யழித்த கெடாத வெற்றியினையுடைய தலைவனே என்றும், வானளாவிய நீண்ட மலைகளையும் அவை சார்ந்த இடத்தினையு முடைய குறிஞ்சித்தலைவனே என்றும், பலராலும் புகழப் படுகின்ற நல்லிசைப்புலமையினை யுடையாருள் ஏறுபோல்

பவனே என்றும், பெறுதற்கரிய தந்தை தாயார் மரபினால் மிக்க கீர்த்திவாய்ந்த முருகனே என்றும், விரும்பிவந்தவர்களின் அபீஷ்டத்தைக் கொடுக்கின்ற கீர்த்தியையுறுபவனே என்றும், வேண்டுமவை கிடையாது வருந்தின ஏழைகட்கு அவர்கள் விரும்பினவற்றைக் கொடுக்கின்ற பொன்னணி யணிந்த சேயே யென்றும், தங்கல்வி காட்டி வெகுமதிபெற வருகின்றவர்களை வேண்டுவன கொடுத்துக் காக்கின்ற தோற்ற மிக்க நெடுவேளே என்றும், பிறப்பு வகையாலும் செய்கை வகையாலும் பெரியோர்களான முனிவர்களும் தேவருந் துதிக்கின்ற பெரிய பெருமையுடைய கடவுளே என்றும், போர்புரிவதில் மிக்க ஆற்றலால் சூரனது வங்கிசத்தைக் கெடுத்த மதவலியென்னும் பெயரோய் என்றும், உவமைக் குரியாயென்றும், தலைவனே யென்றும், யானறிந்து நினக்குக்கூறிய அளவில் நில்லாது நீயும் இன்னம் பல கூறித் துதித்து நின்றன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் மன்னுயிர்க் கரிதாகையினாலே நினது பாதங்களைக் கருதி வந்தேன் நினக்கிணை யெவருமில்லாத மெய்ஞ்ஞானமுடையோய் யென்று நீ கருதியதனை யுரைக்கும் பொழுது என்பதாம்.

முந்து நீ கண்டுழி முகனமர்ந்தேத்தி வணங்கிச் செல்வ! புதல்வ! மகனே! கூற்றே! சிறுவ! குழவி! தலைவ! மார்ப! புலவ! ஒருவ! மள்ள! வெறுக்கை சொன்மலை கணவ ஏறே செல்வ கிழவ ஏறே முருக போராள சேஎய் இயவுள் மதவலி பொருந குரிசில் என ஏத்தி வந்தனன் எனக் குறித்தது மொழியாவளவையின் என முடிக்க.

குறித்துடன் வேறுபல் லுருவிற் குறும்பல் கூளி
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி [யர்
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவு நல்லவு நனிபல வேத்தி

(ப-ரை) வேறு பல் உருவின் குறும் பல் கூளியர் உடன் குறித்து-பலவேறு உருவினரான குறும்பல் கூளியர் ஒன்று சேர்ந்து ஆலோசித்து, சாறு அயர் களத்து வீறு பெற தோன்றி-உச்சவ நடக்குமிடத்தில் உச்சாகமாகவந்து, பெரும-பெருமானே! நின்-நினது, வள் புகழ்-வளவிய புகழை, நயந்து-விரும்பி, இனியவும்-இனியனவும், நல்லவும்-நல்லனவும் ஆகி, நனி பல ஏத்தி-மிகவும் பல மொழிகளால் துதித்து, வந்தோன்-வந்த, முதுவாய் இரவலன்-முதுவாயிரவலனாகிய இவன், அளியன் தானே என்-நின்னால் அளிக்கத்தக்கவனே என்று (கூறியதனைக்கேட்ட உடனே)

(வி-ரை) இவ் வைந்துவரியும் ஒரு தொடர். பெருமானே நினது வளவிய புகழை விரும்பி, இனியனவும் நல்லனவும் ஆக மிகவும் பல மொழிகளாற் றுதித்துவந்த முதுவாயிரவலனாகிய இவன் நின்னாலளிக்கத் தக்கவனே என்று கூறியதனைக் கேட்டவுடனே என்பதாம்.

குறும்பல், கூளியர், குறித்துத், தோன்றி அளியன் என்றவுடனே என முடிக்க.

தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றன்வந் தெய்தி

யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி

(ப-ரை) தெய்வம் சான்ற-தெய்வத்தன்மையி லுயர்ந்த, திறல் விளங்கு உருவின்-ஆற்றல் விளங்கும் வடிவத்தையும், வான் தோய் - வான மளாவிய, நிவப்பில் - உயர்ச்சியினையு முடைய, தான் வந்து எய்தி-தான் வந்து சேர்ந்து, அணங்கு சால்-காண்பாருக்கு அச்சமிகத் தாக்தக்க, உயர்நிலை தழீஇ- உயர்ந்த நிலையை யுள்ளடக்கி, பண்டை தன்-முன்புண்டாகிய தனது, மணம் கமழ்-மணங் கமழுகின்ற, தெய்வத்து இள நலம் - தெய்வமாகிய முருகு என்னும் இளவடிவினை (பால சுப்பிரமணிய வுருவினை), காட்டி-நினக்குக் காட்டி, அஞ்சல் ஓம்பு மதி-அஞ்சுதலை விட்டொழி, நின் வரவு அறிவன் என- நீ கருதிவந்ததை அறிவேன் என்று அருளிச் செய்து, அன்புடை - நின்னிடத்து பட்சத்துடனே, நன்மொழி அளைஇ-இத வசனங்கூறி, விளிவு இன்று-கெடாது, இருள் நிற முந்நீர் வளைஇய-இருண்ட நிறத்தினையுடைய கடலாற் சூழப்பட்ட, உலகத்து - உலகத்தில், ஒரு நீ யாகத்தோன்ற- ஒப்பற்ற சுட்டெற்றரியானாக நீயாகும்வண்ணம், விழுமிய- உயர்ந்த, பெறல் அரும் பரிசில்-பிறரிடம் பெறுதற்கியலாத நீ விரும்பிய வெகுமதியை, நல்கும் மதி-கொடுத்தருளுவன்,

(வி-ரை) இவ் வொன்பதுவரியும் ஒரு தொடர். தெய்வத் தன்மையி னுயர்ந்த ஆற்றல் விளங்கும் வடிவத்தினையும், வானமளாவிய வுயர்ச்சியினையுமுடைய தான் வந்து சேர்ந்து, காண்பாருக்கு அச்சந் தரத்தக்க வுயர்ந்தநிலைமை யுள்ளடக்கி, முன்புண்டாகிய தனது மணங்கமழுகின்ற தெய்வமாகிய முருகு என்னும் இளவடிவினை (பால சுப்பிரமணிய வுருவினை) நினக்குக்காட்டி அஞ்சுதலை விட்டொழி, நீ கருதி வந்ததனை யறிவேன் என்று அருளிச்செய்து, நின்னிடத்துப் பட்சத்துடனே இதவசனங்கூறி, கெடாது இருண்ட நிறத்தினையுடைய கடலாற் சூழப்பட்ட வுலகத்தில், ஒப்பற்ற சுட்டுதற்குரியனாக நீ யாகும்வண்ணம், உயர்ந்த பிறரிடத்துப் பெறுதற்கரிய நீ விரும்பிய வெகுமதியை யொடுத்தருளுவன் என்பதாம்.

முருகாற்றுப்படை யென்பதற் கேற்ப விறைவன் முருகாகவே தோன்றி வரமளிப்பனென்று கூறியிருத்தலை காண்க. முருகினது வள்ளன்மையைப் பெற்றொருவன் பெற விரும்பிய மற்றொருவனுக்கு அவன் நிறமும், அவனிடமுங்கூறி, யான் கூறியவழியே நீ சென்று அவனைக் காணில் நீ விருப்பியவற்றை யருளுவானென்று கூறினான். என்று கொண்டால், எல்லாருஞ் செபித்தற் குரியதாகும். இவ் வாற்றுப்படை என்க.

பலவுடன் வேறுபஃறுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த

தண்கமழ் மலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

(ப-ரை) வேறு பல் துகிலின் - வேறுபட்ட பல துகில்களைப்போல், பலவுடன் நுடங்கி-பலவுமொன்றாய் அசைந்து, அகில் சுமந்து-அகிலைச் சுமந்து, ஆரம் முழுமுதல் உருட்டி-சந்தனமரத்தை அடியோடு தள்ளி, வேரல்-சிறு மூங்கிலின், பூவுடை அலங்கு சினை-பூவினையுடைய அசைகின்ற கிளைகள், புலம்ப-தனிப்ப, வேர் கீண்டு-வேரைக் கல்லி, விண் பொரு நெடுவரை - வானமளாவிய பெருமூங்கில்களில், பரிதியின்

தொடுத்த-சூரியனை யொப்ப வட்டமாகக் கட்டப்பட்ட, தண் கமழ் மலர் இறால்-குளிர்ச்சியும் மணமுமுள்ள பூக்களின்றெடுத்த தேனை வைத்த ஈக்கள் கட்டின தேன்கூடுகள், சிதைய-அழிய, நன் பல ஆசினி முது சுளை கலாவ - நல்ல பலவிதமான ஆசினிப் பழங்களின் முதிர்ந்த சுளைகள் வந்து பொருந்த, மீமிசை நாகம் நறுமலர்-மலைமீது உயர வளர்ந்த சுரபுன்னைகளின் நல்ல மலர்கள், உதிர-சிந்த, நூகமொடு-கருங்குரங்குடனே, மாமுக முசுக்கலை - பெரிய முகம் கரியநிறமான முசுக்கலை களும், பனிப்ப-நடுங்க, பூநுதல் இரும்பிடி-அழகிய நெற்றி யினையுடைய பெரிய பெண்யானைகள், குளிர்ப்ப-குளிரும் வண்ணம், வீசி-நீரைச்சிந்தி, பெருங்களிற்று முத்துடை வான் கோடு-ஆண்யானைகளின் முத்துக்களையுடைய பெரிய கொம்பு களை, தழீஇ-உள்ளடக்கி, தத்துற்று நன் பொன்மணி நிறம் கிளர-நல்ல பொன்னையும் மணியையும் நிறம் விளங்குமாறு மேலே கொண்டு குதித்து, பொன் கொழியா - பொன்னைக் கொழித்து, வாழை முழுமுதல் துமிய - வாழையின் முழுப் பாகமும், துணிய-ஒடிய, தாழை-தென்னையின், இளநீர் விழுக் குலை-இளநீர்களையுடைய பெரிய குலைகளை, உதிரத் தாக்கி-சிதறுமாறு மோதி, கறிக்கொடி-மிளகுக் கொடியின், கருந் துணர்-கரிய கொத்துகள் சாயாநிற்ப, பொறிப்புற மடநடை மஞ்ஞை - பீலியை மேலேயுடைய மடப்பம் பொருந்தின ஒழுக்கத்தினையுடைய மயில்கள், பல்வுடன்-பலவற்றுடன், கோழி வயப்பெடை - கோழியினுடைய வன்மை வாய்ந்த பெட்டைகள், இரிய-சிதறிக்கெட, கேழலோடு-ஆண்பன்றி யுடனே, இரும்பனை-பெரிய பனையின், வெளிற்றின்-வெளிற்

றினையுடையதாகிய, புன்சாய் அன்ன-புல்லிய செறும்பாகிய பன்னாடையையொத்த, குரூஉ மயிர்யாக்கை - நிறந்தங்கிய மயிர்களையுடைய, குடாவடி உளியம்-வளைந்த வடியினையும் உடைய கரடிகள், பெருங்கல் விடர்அளை செறிய-பெரிய கல் பிறந்த குகைகளிலே யொதுங்க, கருங்கோட்டு ஆமா நல்லேறு சிலைப்ப-கரிய கொம்புகளையுடைய காட்டுப் பசுக் களின் நல்ல எருதுகள் இரைய, சேண் நின்று-மலையி னுச்சியினின்றும், இழுமென இழிதரும் - இழுமென்னும் ஒலியுண்டாக ஒழுகும், அருவி-அருவிகளையுடைய, பழமுதிர் சோலை மலை கிழவோனே-பழமுதிர்சோலையென்னும் மலைக்கு உரிமையுடையவன்.

(வி-ரை) இவ் விருபத்திரண்டு வரியும் ஒரு தொடர். வேறுபட்ட பல துகில்களைப்போலப் பலவுமொன்றா யசைந்து அகிலைச் சுமந்து சந்தனமரத்தை அடியோடு தள்ளிச் சிறு மூங்கிலின் பூவினையுடைய அசைகின்ற கிளைகள் தனிப்ப, வேரைக் கல்லி வானமளாவிய பெருமூங்கில்களிற் சூரியனை யொப்ப வட்டமாகக் கட்டப்பட்ட குளிர்ச்சியும் மணமுமுள்ள பூக்களினின்றெடுத்த தேனைவைக்க, ஈய்க்கள் கட்டின தேன் கூடுகள் அழிய, நல்ல பலவின் ஆசினிப்பழங்களின் முதிர்ந்த கூடுகள் வந்து பொருந்த, பலமீ துயரவளர்ந்த சுரபுன்னை களின் நல்ல மலர்கள் சிந்த, கருங்குரங்குடனே பெரிய முகத்திற் கறுப்புடைய முசுக்கலைகளும் நடுங்க, அழகிய நெற்றியினையுடைய பெரிய பெண் யானைகள் குளிரும் வண்ணம் நீரைச்சிந்தி, ஆண் யானைகளின் முத்துக்களை

யுடைய பெரிய கொம்புகளையுள்ளடக்கி, நல்ல பொன்னையும் மணியையும் நிறம் விளங்குற மேலேகொண்டு குவித்துப் பொன்னைக் கொழித்து, வாழையின் முழுப்பாகமும் ஒடியத் தென்னையின் இளநீர்களையுடைய பெரிய குலைகளை யுதிரத் தாக்கி, மிளகுக்கொடியிற் கரிய கொத்துக்கள் சாய்நிற்பப் பீலியை மேலேயுடைய மடப்பம் பொருந்தின வொழுக்கத்தினையுடைய மயில்கள் பலவுடன் கோழியினுடைய வன்மை வாய்ந்த பெட்டைகள் வெருவிக்கெட, ஆண்பன்றியுடனே பெரிய பனையின் வெளிற்றினையுடைத்தாகிய புல்லிய செறும்பாகிய பன்னுடையை யொத்த நிறந்தங்கிய மயிர்களை யுடைய வளைந்த அடியினையும் உடைய கரடிகள் பெரிய கல் பிறந்த குகைகளிலே யொதுங்க, கரிய கொம்புகளையுடைய காட்டுப்பசுவின் நல்ல எருதுகள் இரைய, மலையினுச்சியினின்றும் இழுமென்னும் ஒலியுடனேழுதரும் அருவிகளையுடைய பழமுதிர் சோலை யென்னும் மலைக்குரியவன் என்பதாம்.

துகிலி னுடங்கி அகில் சுமந்து, ஆரமுருட்டி வேரல் வேர் கீண்டு, இறால் சிதைய, கனைசலாவ, மலருதிர, முசுக்கலை பனிப்ப, பிடிகுளிர்ப்ப வீசி, கோடுதழீஇ பொன் கொழியாமுதல் தமிய உதிரத்தாக்கி, துணர்சாய, இரிய அளைசெறிய சேணின்று இழுமென இழிதருமருவி என முடிக்க. (6)

---

ஆறாவது

## பழமுதிர்சோலைச் சிறப்பு

ஒவ்வொரு ஊரில் நடக்கும் திருவிழாக்களிலும், தன்மேல் அன்புடையவர் துதித்தலால் தமது திருவுளம் விரும்பிய இடத்திலும், சன்னதக்காரன் செய்த வெறியாடு களத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றிடைக் குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், வேறு பல ஊர்களிலும், முச்சந்தி நாற்சந்தி ஐஞ்சந்திகளிலும், ஊருக்கு நடுவே எல்லாருமிருக்கும் மரத்தடியிலும், அம்பலத்திலும், ஆதீண்டு குற்றியை யுடைய இடத்திலும், உறைதலும் உரியர். குறமகள் வழிபட நகரிலே உறைதலும் உரியர். இஃது யான் கண்டவாறு சொன்னேன். இந்தத் தலங்களிலாயினும் வேறு எந்த விடங்களிலாயினும் அவரை நீ கண்டபோது முன்பு தலைமேலே கையைவைத்து வாழ்த்தி, பிறகு அவர் திருவடி

---

[பழமுதிர்சோலை] இஃது மதுரைக்கு ஒன்றேகால் காததூரத்திலிருக்கின்றது. இது திருமாலிருஞ் சோலை, சோலைமலை, கள்ளழகர் கோயிலெனும் பெயர்களாலும் வழங்கி வருகிறது.

இந்தத் தலம் நக்கீரர், அருணகிரிநாதர் முதலிய அடியவர்களால் ஸ்ரீ சுப்பிரமண்ணிய சுவாமிகளுடைய ஆறுபடை வீடுகளி லொன்றாகப் பாடல்பெற்றிருக்கின்றது.

இந்தத் தலத்தில், ஒரே பீடத்தில் மூலவரும் அவருக்கிருபுறத்தில் இரண்டு தேவிமாரும் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளி யிருக்கின்றனர். இந்தச் சேவை ஸ்ரீ சுப்பிரமணியர் தலங்களி லன்றிச் சாதாரணமாக எந்த விஷ்ணு க்ஷேத்திரத்திலு மில்லை.

யுன் தலையிலுறத் தண்டனிட்டு, பலவாறாகத் துதித்துப் புகழ்ந்து, பின்னடி சோவந்தேதேனென்று விண்ணப்பஞ் செய்ய, நீ கோரிய வீடுபேற்றைத் தருபவர் பழமுதிர்சோலைக் குரிமையை யுடையவர்.

---

இந்த ஆலயத்திலுள்ள ஸ்தம்பங்கள் உன்னதமாயும், ஒவ்வொன்றில் விசேஷ விசித்திரவேலைகளும், உருவங்களும், சின்னங்களும் முன்னமே அமையப்பெற்றிருந்து இப்போது ஸ்தம்பங்களில் தளவரிசை முதல் மேம்பட்டவரையிலுள்ள ஒரு உருவமாவது இன்னதென நிச்சயிக்கக் கூடாதவிருக்கும் படி யாது காரணத்தாலோ உளியினால் செதுக்கப்பட் டிருக்கின்றது. இந்தப் பிறதேசங்களில் இதர மதஸ்தரான துருக்கர் கிறிஸ்தவர் முதலியோர் விசேஷ சஞ்சாரஞ்செய்திராமையால் அவர்களால் இம்மாதிரி நேரிட்டிருக்கும் என நம்ப இடமில்லை.

இத் தலத்துக்குக் காவற்காரர் வீரவாகு தேவராகச் சொல்லுகின்றனர். வீரவாகு தேவர் ஸ்ரீ முருகவேளது படைத்தலைவராகி, அவராலயத்தைக் காத்தே வருகின்றனர்.

இந்தக் கோயில் முகத்துவாரத்திற் பதினெட்டாம்படி கருப்பண்ணசுவாமி கோயிலிருக்கின்றது. விஷ்ணு கோயிலுக்கும், கருப்பண்ணசுவாமி கோயிலுக்கும் எந்த நாட்டிலும் எந்தச் சமயங்களிலும் சம்பந்தமே யில்லை.

திருப்பதியிலும், திருமாலிருஞ்சோலையிலும் மூர்த்திகள் விசேடமாகப் பேதப்பட் டிருப்பதால் இவ்விரண்டும் விசேட தலங்களாயினும் குளிர் காய்ச்சலுள்ள பிரதேசங்களாயின வென உலகத்தவர் சொல்லுகின்றனர்.

திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் முற்றிற்று.

---

முருகன் றுணை

# தோத்திரப் பாக்கள்

—•—

### நேரிசை வெண்பா

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்,
புன்றலைய பூதப் பொருபடையா-யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை.

(பதவுரை) குன்றம் எறிந்தாய் - (கிரௌஞ்சகிரியாகிய) மலையைப் பிளந்தவரே! குரைகடலிற் சூர் தடிந்தாய் - ஒலிக்கின்ற கடலின் மத்தியில் (மாமர உருவாகின்ற) சூரனைச் சங்கரித்தவரே! புன் றலைய பூதப் பொரு படையாய் - சிறிய தலைகளையுடைய யுத்தஞ் செய்தற்குரிய பூதப்படையையுடையவரே! என்றும் இளையாய்-எக்காலத்தும் இளமைப்பருவத்தை யுடையவரே! அழகியாய்-அழகை யுடையவரே! ஏறு ஊர்ந்தான் ஏறே - இடபவாகனரேறும் (பரமசிவனுடைய) புத்திரரே! உளையாய்-அழியாதவரே! என் உள்ளத்து உறை-என்னுடைய இருதயத்தில் வீற்றிருப்பீராக என்பதாம்.

(விருத்தியுரை) இத்தோத்திரப்பாக்கள் பழைய ஏட்டுப்பிரதிகளிலில்லாமல் புதிதாய் அச்சிட்டிருக்கும் பிரதிகளில்

மாத்திர மிருக்கின்றமையால் 'இவற்றைத் தனியே அச்சிட்டனம். இவ்வெண்பா வரம்பில் காமர் பெற்றுடைக் குமர வேளிடம் அடைக்கலம் புக்க அபியுக்தரிலொருவர் தம்மு பக்தியின்மேலீட்டால் அப்பெருமானின் விதிமுதலுரைக்கும் செயல்களை ஒவ்வொன்றாகச் சொல்லி மகிழ்ச்சியடைகிறார். ஈண்டு அப்பெருமான் தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்கும் அழித்தல் தொழிலை எடுத்து, 'குன்ற மெறிந்தாய்' என்றும், 'குரைகடலிற் சூர்தடிந்தாய்' என்றும் கூறினார். குன்றம் என்றது கிரவுஞ்சமலை என்றதாம். அது க்ரௌஞ்சம் என்னும் வடசொல்லின் விகாரம். எறிதல்-வீசுதல்; அது இங்கும் பிளத்தல் என்னும் பொருளதாம். 'குன்றம்' அம்-சாரியை. கடல் எக்காலத்தும் இடைவிடாமல் கோஷித்துக்கொண்டே யிருக்கின்றமையினால் குரை என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. குரைகடல்-கோஷிக்கின்ற கடல்; இது வினைத்தொகை. சூர் - சூரன் என்பதன் விகாரம். 'கடலில்' இல் ஏழனுருபு இடப்பொருளில் வந்தது. “சேர்ந்திடு மெல்லைப்பூதர் சேனைபோய் நகரம்புக்கு, நேர்ந்திடு மவுணரோடு நின்றமர் விளைத்துநின்றார்” எனக் கந்த புராணத்தில் சொல்லியதுபோல், முருகப்பிரான் துஷ்டசங்காரத்திற்கெல்லாம் பூதகணங்களையே தமக்குத் துணைக்கருவியாகக்கொண் டிருந்தாரென்பதற்கு, 'பூதப் பொருபடையாய்' என்றதாம்.

பொருபடை-வினைத்தொகை. படை இதில் படு-பகுதி, ஐ-தொழிற்பெயர் விகுதி. முருகு-இளமை அழகு எனப்

படுதலின், இங்கு முருகப்பிரானை 'என்றும் இளையாய்' அழகி யாய்' எனவும் விளித்ததாம். கந்தபுராணத்தில் திருவவதா ரப்படலத்தில் முருகப்பிரான் அவதாரத்தை யெடுத்துப் புக லும்போது, "அருவமு முருவுமாகி யநாதியாய் பலவாயொன் றாய்ப், பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக், கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே, யொருதிரு முருகன்வந்தாங் குதித்தன னுலகமுய்ய" என் பதால், சுப்பிரமணியக்கடவுள் அநாதியாய் உள்ளவரென்ப தற்கே 'உளையாய்' என்றதாம். ஏறு-இடபம். ஏறு-முருகப் பிரான்; இது ஆகுபெயர். "ஆதியு நடுவுமீறு மருவமு முருவு மொப்ப, மேதுவும் வரவும்போக்கு மின்பமுந் துன்புமின்றி வேதமுங் கடந்துநின்ற விமலவோர் குமரன்றன்னை, நீதால் வேண்டுநின்பா னின்னையே நிகர்க்கவென்றூர்" என்று தேவர் களின் வேண்டுகோளின்படியே அவதரித்தவனாகையால், முருகனை 'ஏறார்ந்தானேறே' என விளித்ததுவுமாம். தியான நிலையில் என்னுள்ளத்தினுள்ளே அகலாது உறைவாய் என்பார் 'உள்ளத்துறை' என்றதாம். உள்ளம் - அந்தக்கரணங்களி லொன்று. பக்தர்கள் இருதயகமலத்திலே தானாகவே வந்து அமர்ந்துறைபவனாகையால் அவ்வித பக்தி சிறிது மில்லாத தமது மனத்தகத்தே வந்து குடிபுகுவாய் என வேண்டினார் என்பதுவுமாம். பக்த பராதீனமூர்த்தி யாகையினாலே, 'உறை' எனவுங் கூறியதாகவும் பொருள்படும். 'சூரறுத்தவனும்' எனக் கம்பர் ஆரணியகாண்டம் அகத்தியப்படலத்தில் கூறியுள் ளதும் அறிக. குன்றமெறிந்த கதையும், குரைகடலிற் சூர் தடிந்த கதையும் கந்தபுராணத்தால் அறியற்பாலது. 1

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு-மின்றென்னைக்
கைவிடா, நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

(ப-ரை) மெய்விடா வீரன் கை வேல் - என்றுஞ் சிரஞ்சீவியாயிருக்கும் வீரனுடைய (ஸ்ரீ முருகக்கடவுளுடைய) கையிலுள்ள வேலாயுதத்தினால், தான் குன்றம் எறிந்ததுவும்-(கிரௌஞ்சகிரியாகிய) மலையைப் பிளந்ததுவும், குன்றப்போர் செய்ததுவும்-பகைவர் மாள யுத்தஞ் செய்ததுவும், அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - முற்காலத்தில் வீரமாமகேந்திரபுரியில் தேவர்களுக்கு உற்ற துன்பத்தை நீக்கினதும், இன்று என்னை கைவிடா நின்றதுவும் - இக்காலத்தில் என்னைக் கைசோரவிடாமல் நிலைபெற்றிருப்பதும், கல் பொதும்பில் காத்ததுவும்-கல் குகையிலிருந்து காத்ததுவும் ஆகும் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவன் கரத்தின்கண் ணமைந்துள்ளதும், நன்னெறி யுறைவோர்களுக்கெல்லாம் நாளும் நன்மையேபுரிதற்கு அனுகூலமாகவமைந்த தொழில்நடாத்தும் கைவேலின் பெருமையினைப்பற்றிப் புகழ்ந்ததாம். இவ்வாறு உடைமைப் பொருளை உடையான்மேலேற்றிக்கூறுவது உபசாரவழக்காம். மெய்வீரன்-உண்மைநெறி நின்றார்க்கே எனைத்துவகையானும் உபகாரஞ் செய்யுமவன் என்பது. வீரன்-வீரத்தன்மையை புடையான்; இதனை விளக்கக் கந்தபுராணத்தில் முருகப்பெரு

மான் தமது குழந்தை வடிவாய இருந்து வந்தபோதே 'தெரி வார்க்கணை மறவீரற் றிரிதந்தடுஞ்செவ்வேள்' என்றது காண்க. கைவேல்-வேற்றுமைத்தொகை. வேல்-வெல்வது; இது முதனிலை நீண்டு கருவிப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டுத் தொழிலாகுபெயர்க் காரணக்குறியாய் நின்றது. "வென்ற வாளின் மண்ணொடொன்ற" என்றுழிஞையிலும், "மாணார்ச் சுட்டிய வாண்மங்கலமும்" என்று பாடாண்டிணையிலுங் கூறிய வாளினை வாகைத்திணையிற் கூறாது "பெரும்பகை தாங்கும் வேலினும்" என்று வேலிற்கே வாகை கூறியது. இது காவற்றொழில் பூண்ட மாயோன் ஐம்படையும்போலாது அழித்தற் றொழிலோர்க்கே யுரித்தாய் முக்கட்கடவுளும் முருகனும் கூற்றும் ஏந்தி வெற்றிபெறுதற்குச் சிறந்ததென்பது பற்றியெனப் புறத்திணையுட் கூறினமையால் ஈண்டும் 'கைவேல்' எனப் போற்றியுரைத்தனர் என்பதாம்.

அன்று-காலத்தைக் காட்டவந்த குறிப்புவினை. அங்கு-ஏழாம்வேற்றுமை இடப்பொருள்; அது வீரமாபுரியைச்சுட்டியது. அமரர்-மரணமில்லாதவர் என்பது; இது அமுதமுண்டமையாற் போந்தது. இடர்-அவ்வமரர்கள் தாரகாதியர்களாலே பட்ட துன்பம். இந்த பக்தர் தமது அநுபவவாயிலாகவும், உபாஸனவாயிலாகவும் முருகன்ருள்பெற்று விளங்கினவரென் பதைப் பிறர் அறிந்துகொள்ளவே, 'இன்றென்னைக் கைவிடா நின்றது' என்றார்; எனவுஞ் சொல்லுவதற்காயது. கைவிடா நின்றது - துன்பத்தி லாழ்த்தி விடாமற் றுணைபுரிதலாம். அவன் என்னைக் கைவிட்டான் என்பதுபோலக் கொள்க

கல்பொதும்பர் - பண்புத்தொகை நிலைத்தொடராக விரிக்கின் கல்லாகிய குகையென விரியும். வேற்றுமைத்தொகையாகப் பொருள்விரிப்பின் கற்களாலாய குகை எனவுமாம். 2

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்-வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

(ப-ரை) செவ்வேல் திருக்கைவேல் - ஸ்ரீ முருகக்கடவுளுடைய மேன்மைபொருந்திய கையிலிருக்கும் வேல், வீரவேல்-வீரத்தன்மை பொருந்திய வேல், தாரைவேல்-கூர்மை பொருந்திய வேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்-தேவர்கள் சிறையைமீட்ட வலிமையையுடைய வேல், வாரி குளித்த வேல்-சமுத்திரத்தில் படிந்த வேல், கொற்ற வேல்-வெற்றி பொருந்திய வேல், சூர் மார்பும் குன்றும் துளைத்த வேல்-சூரனுடைய மார்பையும் கிரௌஞ்சகிரியையும் பிளந்த வேல், உண்டே துணை-(நமக்குத்) துணையாக உண்டு என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் ஜகத்தும் முருகப்பிரான் ஸம்ஹாரத்துக்கெல்லாம் துணையாயிருக்கும் வேலாயுதத்தின் பிரபாவத்தையே மிகுத்துப் பேசுகிறார். அங்ஙனம் உடையானிருக்க உடைமையைப்பற்றிப்புகழ்தல், ஒன்றுமொழி வனில், அவ்வுடைமை அவ்வுடையான் கையிலிருந்தே ஒவ்வொரு அருமையான காரியத்தையுஞ் செய்தமைபற்றி யென்க. செவ்வேல்-பகைவருடைய குருதி தோய்ந்தமையால் தன்னிறம்

மாறுபட்டுச் செம்மைநிறத்தைக் காட்டும் வேல். செம்மை + வேல் = செவ்வேல்; 'ஈறுபோதல்' என்னும் பண்பு விதியாற் போந்ததாம்.

வீரவேல் - பகைவரை வெற்றியுற்றுத் திகழும் வேல்; அதாவது: பகைவருயிரைக் கொள்ளைகொண்டதெனினுமாம். தாரைவேல் - கூரிய வேல், அல்லது மாலையுடன் பொலியும் வேல். தார் + ஐ எனப் பிரித்து, மாலையிட்டு அழகுடன் திகழும் வேலென்றுமாம். வேலுக்கு மாலையிடலைப் புறப்பொருளிலக்கணத்தில் அறிக. தேவர்களெல்லாம் தாரகாதியர்களாலே மிகவும் துன்பத்தை யடைந்து வருந்தி சிறைப்பட்டுக் கிடந்தமையை மற்றைத் தேவர்கள் கண்டும் மீட்பதற்குத் துணிவற்றவராய்க் கிளைந்தபடியைக்கண்டு, அவர்களின் சிறை மீட்பிற்குத் துணையாயிருந்துதவியது அம்முருகன் கைவேலேயாகையால், 'விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்' என்றனர். விண் - ஆகாயம்; அது ஆகுபெயராய் அங்குள்ள தேவரைக் குறித்தது. வாரி-நீர்தங்குமிடம்; அது இங்கு ஆகுபெயராய்க் கடலைக்காட்டிற்று. பரமன் கையிலிருக்கும் வேலாயுதமானது பாபிகளின் உடலைத்துளைத்துப் பின்னர் தமது பரிசுத்தத்தை நினைத்துக் கடலிற்படிந்து மீண்டனவுமாம். வாரி என்பதற்கு பகைவர் கூட்டத்தினின்று பெருகியோடிய குருதியாகிய கடலில், குளித்த - மூழ்கிய, வேல் - வேலாயுதமெனவுமாம். அன்றி, பாதாளத்திற் பதுங்கிக்கிடந்த பரம துஷ்டரான பாதகர்களைக் கண்டு கொல்லும்படிக் கடலினிடத்து மூழ்கிய வேலெனவுமாம். துணை-சகாயம். 'உண்டே' ஏ-தேற்றம்

இவ்வாறு சொன்னமையால் தனது பகைமைகளைப் பேர்க்கு வதற்கும் அவ்வேலே துணைபுரியு மென்னுந் திண்ணமாம். 3

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்ன வில்வேற் சூர்தடிந்த கொற்றவா-முன்ன
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட[ம்
தனிவேலை வாங்கத் தகும்.

(ப-ரை) கொல் நவில் வேல் சூர் தடிந்த கொற்றவா-(பகைவரைக்) கொல்லக்கற்ற வேலாயுதத்தால் சூரனைச் சங் ஹரித்த தலைவனே! முன்னம்-பூர்வத்தில், பனிவேய் நெடுங் குன்றம்-பனியால் அலங்கரிக்கப்பட்ட (கிரௌஞ்சகிரி யென் னும்) பெரிய மலையில், பட்டுருவ - பட்டுருவும்படி, தொட்ட-பிரயோகித்த, தனிவேலை-ஒப்பற்ற வேலாயுதத்தை, இன்னம் ஒருகால்-இனியும் ஒருவிசை, எனது இடும்பை குன்றுக்கும்-என்னுடைய ஆபத்தாகிய குன்றின்பேரிலும், வாங்கத்தகும்-செலுத்தத் தகுதியாயிருக்கும் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் இத்துணைக்காலமாய்த் தான் அறியாமையால் குவித்துவைத்துள்ள துன்பமாகிய குன்றத் தினை நின் பேரருளால் அழித்தொழிக்க வேண்டுமென்று சொல்லவந்தவர், அப்பிரான்முன்பு தமது வீரச்செயலால் தேவர்களின் பொருட்டாகவும், நல்லோர்களின் பொருட்டாக வுஞ் செய்ததைக்கூறி வேண்டுகின்றார். முருகன் கைவேல் பகைவர்களைக் கொலைபுரியாது மீள்வ. தில்லாமையினாலே

'தனிவேல்' என்றது. இடும்பைக்குன்று, உருவகம். துன்பத்தைக் குன்றாகச்சொன்னது எங்ஙனம் பொருந்துமெனில், வெகுகாலமாகக் குவிந்துகிடக்கும் கற்கூட்டம் ஒருகாலத்தே மலையாகத் தோன்றுவதுபோல, பல பிறவிகளில் சேர்த்துவைத்துள்ளனவான நமது கன்மக்கூட்டங்களின் தொகுதியைக் குன்றென்றதாம்.

சூர் என்றது சூரபதுமன் முதலியோரை. சூர்-சூரன்; இது வடசொல், வீரனென்று பொருள். ஒன்று+கால்=ஒருகால்; இது 'ஒன்றன்புள்ளி ரகரமாக' என்னும் விதிப்படி, ஒரு என்றாகி 'ஏற்புழி' என்றதனால், ரகர மெய் உகரம் பெறுவது மெய்வரின் என்பதனால் போந்தது. முருகப்பிரான் சென்றசென்ற போர்கள்தோறும் வெற்றியேபெற்று விளங்கினமையால் 'கொற்றவா' என விளித்ததாம். கொற்றம்-வெற்றி. மலையின் உன்னதத்தினைக் கூறவே, 'பனிவேய் நெடுங்குன்றம்' என்றார். நெடுங்குன்றம் - கண்கொண்டு பார்க்கமுடியாத அகலமும் உயர்ச்சியுமுடைய கிரௌஞ்சமலை. பட்டுருவுதலாவது - வேல்பட்டுப் பிளப்புண்டது. அம்புபட்டுருவ என்பதுபோல, அல்லது முருகப்பிரான் வேல் பட்ட மாத்திரத்தில் அம்மலை சாம்பர்பட்டதென்க. 4

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் - பன்
னிருகைக், கோலப்பா வானோர் கொடியவினை
தீர்த்தருளும், வேலப்பா செந்தி வாழ்வே.

(ப-ரை) பன்னிரு கை கோலப்பா-பன்னிரண்டு கைகளி லும் ஆயுதங்களைத் தரித்தவனே! வானோர் கொடிய வினை தீர்த்து அருளும் வேலப்பா-தேவர்களுக்கு உற்ற கொடிய பொல்லாங்குகளை நீக்கி யிரட்சித்த வேலாயுதக் கடவுளே! செந்தி வாழ்வே - திருச்செந்தூரென்னும் பதியில் வாழும் செல்வமே! உன்னை ஒழிய - உன்னைத் தவிர, ஒருவரையும் நம்புகிலேன் - (வேறு) ஒரு தெய்வத்தையும் விரும்பேன், பின்னை ஒருவரை யான் பின்செல்லேன் - வேறு ஒருவரையும் தொடர்ந்து போகேன் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் இது பாடியவரின் உபாஸனா மூர்த்தியும், வழிபடுகடவுளும் முருகப்பிரானே என்பதை உறுதிப்படுத்துகின்றார். "உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்" என்பதனால், இவர் மறந்தும் புறந்தொழாத கொள்கையினை யுடையாரென்பதும் வெளிப்படையாகும். தனு கரணங்களை யானென்றும், புவன போகங்களை என தென்றும் அபிமானிக்கின்ற அகங்கார மமகாரங்களை ஒழிந்து தம்மை யுணர்ந்து தமது திருவருள்வழிநிற்கும் மெய்ஞ்ஞானி களுக்குப் பிராரப்தமாத்திரம் புசிப்பித்து அவர்கள் அது புசிக்கும்போது மனம் வாக்குக் காயம் என்னும் திரிகரணங் களாற் செய்யும் செயல்கள் அவர்களுக்கு ஆகாமியமாய் வருது அவைகளைத் தமது செயலாகக் கொண்டருளும் மூர்த்தி நீயே என்பதைச்சுட்டி "பின்னை யொருவரையான் பின்செல்வேன்" என்றதாம். ஒருவர் என்றது அந்நியன் என்றதாம். அன்றி ஈண்டு ஒருவரை என்றது பிறதெய்வங்களை எனவுமாம்.

கோலப்பா - அழகுபொருந்திய முருகனே; கோலம்-அழகு; "அறுமுகம் படைத்த கோல நம்பிதன் வரவுதன்னை" எனக் கந்தபுராணம் திருவவதாரப்படலத்தில் வந்துள்ளது காண்க. கோல்+அப்பா=கோலப்பா; கோல்-அம்பு; அதனையுடையவன் என்றுமாம். வானோர் கொடிய வினை - தேவர்களுற்ற துன்பத்தினை. முருகப்பிரான் தன் வேலினாலேயே துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்துவந்தமையாலே 'கொடியவினை தீர்த்தருளும் வேலப்பா' என்றதாம். 'அப்பா' என்னுஞ் சொல் தனயன் அன்பின்மிகுதியாலே தந்தையை விளிக்குஞ் சொல்லால் விளித்ததாம். இவ்வாசிரியரின் முருக பக்தி இதனால் வெளியாம். கொடியவினை தீர்த்தல் - தன்னை நம்பினோர் உற்ற பிணி முதலியன தீர்த்தலுமாகும். அருள்-கிருபை; இது உயிர்களிடத் துண்டாகுங் கருணையாம். செந்தி-திருச்செந்தூர். 5

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேற்றோன்று-நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்

(ப-ரை) முருகாவென் றோதுவார் முன்-முருகாவென்று (உள்ளன்புடன்) சொல்கிறவரிடத்தில், அஞ்சு முகம் தோன்றில்- பயத்தினால் முகவாட்டம் தோன்றினால், (அவர்களை ஆதரிக்க) ஆறுமுகம் தோன்றும் - ஆறுமுகங்களும் வெளிப்படும், வெஞ்சமரில்-கடுமையாகிய போரில், (அச்சம் உண்டா

யின்) அஞ்சல் என-பயப்படாதே என்று, வேல் தோன்றும்-வேலாயுதம் காணப்படும், நெஞ்சில்-(உருக்கத்தோடு) மனதில், ஒருகால் நினைக்கில் - ஒருதரம் நினைத்தால், இருகாலுந் தோன்றும் - (சகலமான பேறும் வரையாது கொடுக்கும்) இரண்டு திருவடிகளும் தரிசனமாகும் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் அறுமுகப்பிரானின் திருநாம உச்சாரணத்தினால் அடையும் பேற்றைக் கொண்டாடி, அம்மந்திரத்தை ஒருகால் நினைப்பார் அடையும் பெருமையினையும் புகழுகின்றனர். 'முருகா' என்று விளித்தமைக்குக் காரணம் யாதெனில், அவனது தெய்வத்தன்மை விளங்கிய தாம். முருகன் - தெய்வத்தன்மை யுடையவன். இதனை மதுரைக் காஞ்சியில் "முருகுறழத் தலைச்சென்று" என்றவிடத்து 'முருகு' தெய்வத்தன்மை; ஆகுபெயராய் நின்றது என உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றால் அறிக. இனி, முருகு-இளமையும் அழகுமாம். அஞ்சுமுகம்-அச்சத்தால் வாட்டமடைந்த முகம்; அதாவது பிறவாற்றால் உண்டான துன்பங்களாற் படும் கட்டங்களுமாம். உலகத்திலுள்ள குற்றங்களைப் போக்குதற்கு ஒருமுகம், பெருமையை யுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய் விளங்கும்படி பல கிரணங்களையும் தோற்றுவிக்கும், ஒருமுகம், தன்மேல் அன்புசெய்தவர்கள், துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாக நடந்து அவர்மேற் சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுக்கும், ஒருமுகம், மந்திரத்தையுடைய வேதத்திற்கூறிய

முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்கு வாராதபடி நினையாநிற்கும், ஒருமுகம், ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களிலுமுள்ள பொருள்களை ஆராய்ந்து இருடிகள் ஏமுறும்படி உணர்த்தித் திங்கள்போலத் திசைக ளெல்லாம் விளக்குவிக்கும், ஒருமுகம், திருவுள்ளத்துச் செல் கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்ல வேண்டுமென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர் முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை விரும்பும், ஒருமுகம், குறவருடைய மடப் பத்தையுடைய மகளாகிய வல்லிபோலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்தி நிற்கும். இவ்வண் ணம் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு செயல்மேல் நின்று துணைபுரிதலை பெரியோர் கூறியதற்கிணங்கவே இங்கும், 'ஆறு முகம் தோன்றும்' என்றனர்.

தேவர்கள் முகவாட்டமடைந்து அசுரர்களுக்குடைந்து பயந்து ஆறுமுகப்பிரானைப் பெற்றதுகொண்டு தம்பயம் தீர்ந் தமையால் அவ்வாறு கூறினருமாம். அன்றி, தன்மீது பக்தி கொண்டவர்களுக் கேதாயினும் தீங்கு நேர்ந்தால் அதைப் போக்க ஆறுமுகம் தோன்றும். ஆறுமுகம் - ஆறுதலைச் செய்யும் முகமுமாம். 'வெஞ்சமர் - கொடிய யுத்தம். தன்னை நம்பி உயுத்தமுனையிற் சென்று போர்செய்வோர்க்கு அபய மளிக்க அவனது வேலே சென்று உதவிபுரியுமென்பார், 'அஞ் சலென வேல்தோன்றும்' என்றனர். ஒருகால் - ஒருபோது. இருகால் - இரண்டு திருவடி. கால்-சினைப்பெயர். நெஞ்சு-

மனம், அந்தக் காரணமுமாம். இல் - ஏழாம்வேற்றுமை யுருபு.

6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே-யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழு
நம்பியே கைதொழுவே னன். [து

(ப-ரை) முருகனே - முருகனே! செந்தி முதல்வனே- திருச்செந்தூரென்னும் பதிக்குத் தலைவனே! மாயோன் மருகனே - மகாவிஷ்ணுவுக்கு மருமகனே! ஈசன் மகனே - பரமசிவன் புத்திரனே! ஒருகைமுகன் தம்பியே-ஒப்பற்ற யானைத் துதிக்கை பெற்ற முகத்தையுடைய விநாயகருக் கிளையவனே! நான்-நான், நின்னுடைய-உன்னுடைய, தண்டைக் கால்-தண்டையை யணிந்த திருவடிகளை, எப்பொழுது-எந்த காலத்தில், நம்பியே கை தொழுவேன் - விரும்பி (உள்ளன்புடன்) கையினால் தொழுவேன் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவினால் அம்முருகப் பிரானின் அருமந்த திருநாமங்களினை எடுத்துத் துதிக்கின்றார். என்றும் இளமைத்தன்மையும், தெய்வத்தன்மையும், பேரழகும் மாறுதலன் என்று துதிப்பார் 'முருகனே' என்றும், முருகப் பிரான், சிவன் சத்தி நாதம் விந்து என்னும் நான்கு அருபமும்; மகேசுரன் உருத்திரன் அயன் திருமால் என்னும் நான்கு ருபமும் ஆகிநின்று தான் எல்லாவற்றுக்கும் முதலானதாய்த் தனக்கொரு முதலில்லாகித் தோன்றிய மூர்த்தி என்

பார், 'செந்தி முதல்வனே' என்றும், மாயோனாகிய திரு மாலின் தங்கையை மணந்தவனாகையால், 'திருமால் மருக' என்றும், ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பமும் இன்றி வேதங்கடந்துநின்ற விமலனால் தரப்பட்ட குமாரனாகையால், 'ஈசன் மகனே' என்றும், விநாயகமூர்த்திக்கு உருவம் யானை போலுதலால் 'ஒருகைமுகன் தம்பி' என்றும் கூறுதலுமாம்.

ஒருகை-துதிக்கை. தம்பி-முறைப்பெயர்; தாம்-பகுதி. தண்டைக்கால்-சிலம்பணிந்த திருவடி; "கிண்கிணி கவை இய வொண் செஞ்சீறடி" என்று திருமுருகாற்றுப்படையில் கூறிய திருவடியுமாம். 'நம்பியே' ஏ-தேற்றம். நான் நம்பியே தொழு வேன் என்றது, இவரது மனவுறுதியினை வற்புறுத்துவதாம்; நம்பாதவர்களுக்குக் கடவுள் அருள்பாலித்தல் இல்லை என்பது திண்ணமாகையால் இங்ஙனஞ் சொன்னதாம். 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா-பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி.

(ப-ரை) அறுமுகவா-ஆறு திருமுகத்தை யுடையவனே! பூக்குங் கடம்பா - மலரும் கடப்பமாலையைத் தரித்தவனே! முருகா-முருகனே! கதிர்வேலா-ஒளியை வீசுகின்ற வேலா யுதத்தை யுடையவனே! காக்கக்கடவிய நீ-அடியார்களை (யாதரித்து) காப்பாற்றும்படியான உரிமையையுடைய தேவரீர்,

காவா திருந்தக்கால் - எமக்கென்னென்று பராமுகமா யிருந்தால், ஆர்க்குப் பரமாம்-அது யாருக்குப் பொறுப்பாகும், (தேவரீருக்கன்றி வேறொருவருக்கு இல்லை ஆதலால்) நல்ல இடம் காண்-(இது) நல்ல சமயமானதினால், இரங்காய் இனி-இப்பொழுது (என்மீது) தயைபுரிவாய் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பாவில் திருமுருகன் திருநாமத்தைக் கனவினும் மறவாதாரை அவன் கை நழுவவிடாதவனென்பதையும், அதுவே அவனது கடமையாகுமென்பதையும், அது செய்யாமல்விட்டாலும் அதுவும் அவனது பாரமேயாகுமென்றும் சொல்லி, அப்பெருமானைச் சரணாகதிபண்ணி வேண்டுகின்றார் இவ்வடியுக்தர். முருகப்பிரான் சாத்திக்கொள்ளுவது கடம்பமாலையே யாதலின், 'பூக்குங் கடம்பா' என்றனர். "உருள்பூந்தண்டார் புரளுமார்பினன்" என்றதும், "உருள்பூங்கடம்பின் பெருவாயில்" என்றதும், "உருள்பூங் கடம்பி னொலிதாரோயே" என்றதும், "உருள்படுகமழ்தார் உருளிணர்க்கடம்பி னெடுவேட்கு" என்றதும், "உருள்பசுந் தாரவன்" என்றதும், "உருள்பசுந் தாரிளங் குமரன்" என்றதும், "கார்நறுங் கடம்பின் கண்ணி சூடு" என்றதும் ஈண்டு அறிதற்பாலனவாம்.

பக்தகோஷ்டிகளைக் காப்பதற்கென்றே திருவவதாரமெடுத்தமையால், 'நீ காவா திருந்தக்கால் ஆர்க்குப்பரமாம்' என்றனர். இவ்வாசிரியர் தனது பரிபக்குவ தசையை உணர்த்துகின்றவர்போல, 'இது நல்ல இடம்காண்' என்றனர். இதுவரையில் நீ என்மேல் கருணை பாலிக்காம லிருந்தமை

போலே இனியும் இருத்தல் தகாதென்பார், 'இனி இரங்காய்' என்றதாம். பகைவர்களின் உரத்திற்றோய்ந்து சாணையிற் றீட்டியதுபோல மிகவும் பளபளப்புடன் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் வேலாகையால் 'கதிர்வேலாய்' என்று விளித்ததாம். 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு-சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையை
பூசையாக் கொண்டே புகல். [ப்

(ப-ரை) நெஞ்சே-ஓ மனமே! பரங்குன்றின்-திருப்பரங்குன்றத்தில், (வீற்றிருக்கும்) பன்னிருகை கோமான் தன் பாதம்-பன்னிரண்டு கைகளையுடைய பெருமையிற் சிறந்த முருகக்கடவுளுடைய திருவடிகளை, கரங் கூப்பி - கையால் தொழுது, கண் குளிரக் கண்டு-கண்கள் பூரண சந்தோஷப் படும்படியாகத் தரிசித்து, சுருங்காமல் ஆசையால்-கெடுதலில்லாத விருப்பத்துடனே, அணி முருகாற்றுப்படையை-அணி வகுத்திருக்கும் திருமுருகாற்றுப்படை யென்னும் நூலை, பூசையாக் கொண்டே-ஆராதனையாகக் கொண்டு, புகல்-சொல்லக்கடவை என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுள் திருமுருகாற்றுப்படையை இடைவிடாமற் படிப்பதனாலுண்டாகும் பலனை உத்தேசித்த வொரு அபியுக்தர் தனது நெஞ்சத்தை முன்னிலையாக்கிச் சொன்னது. 'பன்னிருகை கோமான் பாதங் கரங்கூப்பி, கண்குளிரக்கண்டு ஆசை சுருங்காமல் ஆற்றுப்படையை பூஜைசெய்' என்றது,

திருமுருகாற்றுப்படையைப் படிக்கையில் இருக்கவேண்டிய தன்மையினைக் கூறியபடியுமாம். பரங்குன்று - மேலான குன்று. கோமான்-தலைவன். மான்-விகுதி. கண்குளிரக் காணலாவது-கண்பெற்றதனாலாய பயனைப் பெறுவதுபோலக் கண்களினாலேகண்டு ஆனந்தமடைந்து என்பதுவுமாம். ஆசை சுருங்காமல்-பலவற்றின்பேரிலுஞ் சென்றுகெடும் அவாவினை யடக்கி ஒருவழிப்பட்டதான விருப்பத்துடனே என்பதாம். அன்றி, நற்பேற்றையடையும் வழியிலே ஆசையினைச்செலுத்தியும், மற்றைய விஷயாந்தரங்களில் தமது அவாவினை யடக்கியுமா மென்பதாம்,

திருமுருகாற்றுப்படை என்பது-திருமுருகினை ஆற்றுப் படுத்தலாம். இதனைப் புலவராற்றுப்படை யெனவும் வழங்குவதுண்டு. முருகக்கடவுளுடைய திருவருள் பெற்றானொரு புலவன் எதிரேவந்த மற்றொரு புலவனுடைய இயல்பைக் கண்டு இரங்கி அவனைநோக்கி அக்கடவுள் இன்ன இன்ன இடங்களிலெழுந்தருளி யிருப்பார்; இன்ன இன்ன இயல்பை யுடையவர்; இன்னவாறு சென்று இன்னவாறு வழிபடின் அவருடைய திருவருளைப் பெறலாமென்று கூறி அவனை அவன்பாற் செலுத்தியதாம். முருகக்கடவுளுடைய திருவருளைப்பெற விரும்பின் இதனை நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணுவையேல் எண்ணியவை, சித்திக்கும் என்று சொல்லவந்தவர், 'நெஞ்சே பூஜையாகக் கொண்டே புகல்' என்றனர். 'கொண்டே' ஏ-தேற்றம். அணிவகுத்தல்-அழகாக வகுத்திருக்கும் படைவீடு.

நக்கிரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்-முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

(ப-ரை) நக்கிரர் தாமுரைத்த-(தெய்வத்தன்மை பொருந்திய) நக்கீரர் அருளிச்செய்த, நல் முருகாற்றுப்படையை-நன்மை பயக்கும் திருமுருகாற்றுப்படை யென்னும் நூலை, தற்கோலம் - தன்மனதைப் பூஜையிலே நிறுத்தி, நாடோறுஞ் சாற்றினால் - ஒருவன் பிரதிதினமும் பாராயணஞ் செய்தால், முற்கோலம் - பழமையாகிய அழகினை வாய்ந்த, மா முருகன்-மாட்சிமைபெற்ற முருகக்கடவுள், வந்து-(அவன் முன்) தோன்றி, மனக்கவலை தீர்த்தருளி - (அவனுக்குற்ற) மனோவிசார முழுவதும் கிருபைகொண்டு நீக்கி, தானினைத்த எல்லாந் தரும் - அவன் கோரிய எல்லாவற்றையும் தருவர் என்பதாம்.

(வி-ரை) இவ்வெண்பா முருகப்பிரான் அருள்வேண்டின் நக்கீரரால் செய்த திருமுருகாற்றுப்படையைத் தினந்தோறும் பக்தி சிரத்தையுடனே பாராயணஞ் செய்துவந்தால் அம்முருகன் அருளைப் பெறலாமென்பது கருத்து. நக்கீரர், இவர் மதுரை நக்கீரர் எனவும், கணக்காயனார் மகனார் நக்கீரரெனவும் கூறப்படுவர். இவரது இயற்பெயர் கீரனார். ந-சிறப்புப்பொருளுணர்த்தும் இடைச்சொல். ஒரு காலத்துச் சங்கப் புலவரில் இவர் தலைமை பெற்றிருந்தது முண்டு. இவர் சிவ பெருமானோடு வாதுகூறியதாகத் திருவிளையாடல் கூறுகிற்கும்.

திருமுருகாற்றுப்படைக்கு 'நல்' என்னும் அடைமொழி கொடுத்ததின் காரணமென்னையெனில், தன்னை விரும்பிப் படித்தவர்கள் தாம் விரும்பியது பயத்தல்பற்றி. தற்கோலம்-பூஜைக்குரிய திரவியங்கள். முற்கோலம் - தோன்றிய காலத்தே பேரழகுடன் அவதரித்தமை. மாமுருகன்-தனது பெருமையாற் சிறந்த முருகன் எனவும், ஒப்பாரு மிக்காருமில்லாத இளமையும் எழிலும் தெய்வத்தன்மையுமுடையவன் என்பதுவுமாம். மனக்கவலை - மனதிலே உள்ளதாகிய கஷ்டம். தன்னைப் பாராயணஞ் செய்வார் உள்ளத்திலே நினைத்தவற்றையெல்லாம் நினைத்தபடியே அளிக்கும் ஆற்றலுடைத்து என்பார், 'தானினைத்தவெல்லாந்தரும்' என்றனர்.()

தோத்திரப்பாக்கள் மூலமும் உரையும்

முற்றிற்று.

---

.. DUTURAI ADHINAM HIGH SCHOOL * T..VADAMARUDUR.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை: - 1938

# ஔவைக் குறள்

## மூலமும் உரையும்

இதன் விலை ரூபா 1

இந்நூல் வரகவிகளில் சிறந்த ஔவையாரருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரையெழுதக் கூடியதன்று. இது ஆன்ம ஞான சாதனைகளைப் புகட்டும் நூல். ஆன்மஞான இன்பத்தை அவாவி அம்மெய்ச்சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். இத்தகைச் சிறப்புவாய்ந்த நூலுக்கு சென்னை பிரம்ம வித்தியாசங்க ஸ்தாபகரும், அச்சங்கத்தின் குருவுமாகிய ஸ்ரீலஸ்ரீ - ஈ. சுந்தரமாணிக்கயோகீஸ்வரர் அவர்கள் தாம் ஐம்பது ஆண்டுகளாய் உழைத்துப் பெற்ற சிறந்த ஆன்மஞான அனுபவத்தைக்கொண்டு உரையெழுதியது. இதில் வியோமசக்கரம் அல்லது குண்டலி என்னும் படமும் விநாயகசொரூபம் என்னும் படமும் ஆகிய இரண்டு படங்களுடன் உரையாசிரியர் படமும் சேர்த்து அழகாய் அச்சிட்டு பயிண்டுசெய்யப் பெற்றுள்ளது

விலாசம்:

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு, சென்னை.

அருணகிரிநாதர் அருளிய

# திருப்புகழ்

## விருத்தியுரை

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானானுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாதரால் அருளிச்செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவரும் அறிந்தவொன்று. அது செந்தமிழ் இலக்கியச்செறிவும் இலக்கண வமைதியும் சாத்திரப் பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. அன்றியும் சந்தப்பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெய்துரைக்கப் பட்டுள்ளன. அல்லதூஉம் பாட்டுக்கள் பல பாடபேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினவேலையென்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி முதல் 100-பாடல்களுக்கு சென்னைப் பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியரும், செந்தமிழ்ச்செல்வி பத்திராசிரியரும், பாவலராற்றுப்படை - புலவர்கதை - இராஜராஜன் முதலியவற்றின் நூலாசிரியருமாகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம் பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மைசெய்து எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபா **1-8-0**

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு, சென்னை.

அருணகிரிநாதர் அருளிய

# கந்தரனுபூதி

## மூலமும் உரையும்

---

இதன் விலை அணா 12

நாதர் என்பது இவரது தீக்ஷாநாமம். இவர் குமரக் கடவுளையே குருவாகவுந் தெய்வமாகவுங்கொண்டவர். இவர் இளமையிற் சிற்றின்பத்தி லுழன்று பின்னர்த் துறவுபூண்டு சண்முகோபாசனை செய்து அதனிற் சித்தியுற்ற நாதரென் னும் பெயரெய்தி முருகக்கடவுள்மீது மணிப்பிரவாளம் என்று கூறுமாறு தமிழும் ஆரியமுங் கலந்த மொழிகளாற் பல சந்தப்பாக்களையும் விருத்தங்களையும் பாடி முருகவேளின் முழுத்திருவருளையும் பெற்றவர். இவர்பாடிய நூல்களில் கந்த ரனுபூதிக்கு ஓர் உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி 100-பாடல்களுக்கு திரிசிரபுரம் செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் தமிழாசிரியர் வித்துவான் - R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக்காட்டியும், சொல்நயம் பொருணயங்களை விளக்கியும் எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிட்டிருக்கிறது.

விலாசம்

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு, சென்னை.

# முருகன் புகழ் நூல்கள்

## (உ ரை ய ு ட ன்)

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| திருப்புகழ் | 1 | 8 | 0 |
| திருமுருகாற்றுப்படை | 0 | 8 | 0 |
| கந்தர் அனுபூதி | 0 | 8 | 0 |
| கந்தர் அந்தாதி | 0 | 8 | 0 |
| கந்தர் அலங்காரம் | 0 | 10 | 0 |
| கந்தர் கலிவெண்பா | 0 | 8 | 0 |
| கந்தர் சஷ்டி கவசம் | 0 | 8 | 0 |
| [illegible]ரேச சதகம் | 1 | 0 | 0 |
| [illegible]பளீசுர சதகம் | 1 | 0 | 0 |
| செ[illegible]சைல மாலை | 1 | 8 | 0 |

மேற்படி உரை புத்தகங்கள் யாவும் தக்க வித்வான் [illegible] விருத்தியுரை எழுதி சுத்தப்பிரதியாக அச்சிட்டுள்ளது ஆதலால் ஒவ்வொருவரும் எமது [illegible] பதிப்பைக் கவனித்து வாங்கும்படியாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்:—

அ, ரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

காண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.